# கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

## மீன்வளம் மற்றும் மீனவர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

**மானியக் கோரிக்கை எண். 7**

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
**மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்**
**கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்**

©
**தமிழ்நாடு அரசு**
**2024**

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 01 |
| 2. | மீன்வளக் கொள்கை | 04 |
| 3. | நிருவாக அமைப்பு | 11 |
| 4. | தமிழ்நாட்டின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம் | 13 |
| 5. | கடல் மீன்பிடி செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் | 19 |
| 6. | உள்நாட்டு மீன்வள மேம்பாடு | 82 |
| 7. | மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 112 |
| 8. | மீன் மற்றும் மீன் பொருட்களை சந்தைப்படுத்துதல் | 122 |
| 9. | பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் | 125 |
| 10. | விரிவாக்கம் மற்றும் செயல் திறன் மேம்பாடு | 128 |
| 11. | மீன்வளக் கூட்டுறவு சங்கங்கள் | 135 |
| 12. | நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் | 140 |
| 13. | தமிழ்நாடு மீனவர் நலவாரியம் | 143 |
| 14. | தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் | 147 |
| 15. | தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் | 153 |
| 16. | தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் | 164 |
| 17. | எதிர்காலத் திட்டங்கள் | 184 |
| 18. | நிதி ஒதுக்கீடு (2024–2025) | 187 |
| 19. | நிறைவுரை | 187 |
| 20. | இணைப்பு | 191 |

# இணைப்பு – I

## அட்டவணைகள்

| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் பதவி வாரியாக அலுவலர்கள் விவரம் | 191 |
| 2. | கடல் மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் 2023–24 | 193 |
| 3. | உள்நாட்டு மீன்வள புள்ளி விவரங்கள் 2023 – 24 | 196 |
| 4. | கடல் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட நலத்திட்டங்கள் (2023–24) | 197 |
| 5. | கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்ட விதிகளின்படி தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள இறால் பண்ணைகள் | 198 |
| 6. | பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு செய்யும் மீன்வளர்ப்போர்க்கான பல்வேறு திட்டங்கள் | 199 |
| 7. | நீர்த்தேக்கங்களில் மேற்கொள்ளப்படும் மீன்வள மேலாண்மை விவரம் | 200 |
| 8. | மீன்வளத் துறை கட்டுப்பாட்டிலுள்ள பாசனக் குளங்களின் விபரம் | 200 |
| 9. | அரசு மீன்பண்ணைகளில் மீன்குஞ்சு உற்பத்தி (2023– 24) | 201 |
| 10. | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களின் உற்பத்தி விபரம் (2023– 24) | 202 |

| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 11. | பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2021 – 22) | 205 |
| 12. | பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2022 23) | 207 |
| 13. | பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2023–24) | 208 |
| 14. | TN–IAMP உலக வங்கி திட்டத்தின் கீழ் 2024–25 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள பணிகள் | 209 |
| 15. | மீன்பிடி துறைமுகங்களில் நடைபெற்று வரும் பணிகளின் விபரம் | 210 |
| 16. | மீன் இறங்கு தளங்களில் நடைபெற்று வரும் பணிகளின் விபரம் | 211 |
| 17. | தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி–கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் | 214 |
| 18. | உள்நாட்டு மீன்வள பண்ணை மேம்பாட்டு பணிகள் (FIDF நிதியுதவி) | 217 |
| 19. | மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் அலுவலக கட்டட பணிகள் | 219 |
| 20. | புதிய மீன்பிடித் துறைமுகம்/மீன் இறங்குதளம் அமைக்கத் தேவையான ஆய்வு பணிகள் | 220 |

| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 21. | மாநில நிதியுதவியுடன் அமைக்கப்படும்/ புனரமைக்கப்படும் மீன் விற்பனை சந்தைகளின் விபரம் | 223 |
| 22. | மீன்வள கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம் | 224 |
| 23. | தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 225 |
| 24. | மீனவ நல வாரிய உறுப்பினர்களுக்கு 2023–24ல் வழங்கப்பட்டுள்ள நலத்திட்டங்கள் | 227 |
| 25. | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கு 2024–25ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | 228 |

# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2024-25

## 1. முன்னுரை

தமிழ்நாடு பல்வேறு உள்நாடு மற்றும் கடல்வள மீன்வளங்களை தன்னகத்தே கொண்ட ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, பெரும்பாலான மீனவர், மீன் வளர்ப்போர் மற்றும் அதனைச் சார்ந்த தொழில் புரிவோருக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துவதோடு, மாநிலத்தின் உணவு பாதுகாப்பினையும் உறுதி செய்கிறது. தமிழ்நாடு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய, 1076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையினை கொண்டுள்ளது. மாநிலத்தில் 14 கடற்கரை மாவட்டங்கள் உள்ளன. தமிழ் நாட்டின் பல்வேறு மீன்வள ஆதாரங்கள், பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட மீனவர்களுக்கும், அதனைச்

சார்ந்த தொழில் புரிவோருக்கும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குகிறது.

மாநிலத்தின் மீன்வளம், சுமார் 10.48 இலட்சம் கடல் மீனவ மக்களுக்கும், சுமார் 2.36 இலட்சம் உள்நாட்டு மீனவ மக்களுக்கும் வாழ்வாதாரமாக திகழ்கிறது. 2022–2023 ஆம் நிதியாண்டின் வேளாண் பொருட்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், மீன்வளத்தின் பங்கு 6.26% ஆகும். மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தி 8.29 இலட்சம் டன்களாக உள்ள நிலையில், கடல் மீன் உற்பத்தியில் நாட்டிலேயே தமிழ்நாடு 5–ஆவது இடத்தில் உள்ளது. மேற்குறிப்பிட்ட ஆண்டில், 1.23 இலட்சம் டன் மீன் மற்றும் மீன் பொருட்கள் ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூ.6,957.67 கோடி அந்நியச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை உறுதி செய்தல் குறிப்பாக பாக் வளைகுடா பகுதியில், மீனவர்களின் நலனை உறுதி

செய்தல் ஆகியவற்றிற்கு அரசு முன்னுரிமை அளிக்கிறது. மீன்பிடி தடைக்காலம் மற்றும் மீன்பிடிப்பு குறைந்த காலங்களில், மீனவர்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திட பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. நமது மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு, வலுவான தகவல் தொடர்பு கட்டமைப்பினை அரசு ஏற்படுத்தியுள்ளது. இது அனைத்து வகையான காலநிலைகளிலும் அனைத்து மீன்பிடிதளங்களையும் தொடர்பு கொள்ளும் வகையில் தடையற்ற தகவல் தொடர்பு அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும், மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், குளிர்பதனக் கிடங்குகள், பனிக்கட்டி நிலையங்கள் மற்றும் மீன் சந்தைகள் போன்ற தொடர் குளிர்காப்பு வசதிகள்

அத்தியாவசிய தேவையாக உள்ளன. தேவைக்கேற்ப இந்த உட்கட்டமைப்புகளை உருவாக்கிட அரசு உறுதி பூண்டுள்ளது.

## 2. மீன்வளக் கொள்கை

மீனவர் நலன், மீன் உற்பத்தியினைப் பெருக்குதல், மீனவர் மற்றும் மீன்வளர்ப்போரின் வருவாயினை உயர்த்துதல் மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை தமிழ்நாடு அரசு மீன்வளக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

### 2.1 தொலைநோக்குப் பார்வை

*"மீன்வள ஆதாரங்களை வளங்குன்றா வண்ணம் பேணுதல், பயன்படுத்துதல், மேலாண்மை செய்தல் மற்றும் பாதுகாப்பான மீன்பிடிப்பிற்கு வழிவகுத்தல் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மூலம் மீன் உற்பத்தியினை பெருக்குதல் மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் வளமை, பாதுகாப்பினை உறுதி செய்தல்".*

## 2.2 செயலாக்கம்

மாநிலத்தின் அனைத்து நீர்வளங்களை மேம்படுத்தி, மேலாண்மை செய்து, பாதுகாத்து, வளங்குன்றாமல் பயன்படுத்தி, மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, வேலைவாய்ப்பினை அதிகரித்து, ஊட்டச்சத்துமிக்க உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

## 2.3 முக்கிய கொள்கைகள்

மீன்வளம் சார்ந்த அரசின் முக்கிய கொள்கைகள் பின்வருமாறு:

1. நன்னீர், உவர்நீர் மற்றும் கடல்வள ஆதாரங்களின் மூலம் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல்.
2. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல்.
3. பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் வாயிலாக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

4. மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல்.
5. மீன்வளர்ப்பின் மூலம் ஊரகப்பகுதியில் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.
6. மீனவ மகளிருக்கு புதிய வாழ்வாதாரங்கள் ஏற்படுத்துவதன் மூலம் அதிகார பகிர்வளித்தல்.
7. அரசு மீன் பண்ணைகள், மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், தொடர் குளிர்காப்பு, மதிப்புக்கூட்டுதல் மற்றும் மீன்பிடிப்பிற்கு முன் மற்றும் பின் தேவைப்படும் வணிக ரீதியிலான நடவடிக்கைகளை இணைத்திடுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
8. உரிய சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்துவதன் வாயிலாக மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், மீன்வளங்களை அதிகரித்தல் மற்றும் மேலாண்மை செய்தல்.

9. வாழ்வாதாரம், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை வழங்குவதற்கு ஏதுவாக உள்நாட்டு மீன் வளங்களை பாதுகாத்தல், மேலாண்மை செய்தல் மற்றும் நிலையாக பயன்படுத்துதல்.
10. தமிழ்நாட்டின் மீன்வள ஆதாரங்கள் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை மறு மதிப்பீடு செய்தல்.
11. மீன்குஞ்சு தேவை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளியினைக் குறைத்தல்.
12. விலைமதிப்புமிக்க மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியினை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.
13. மீனவர்கள் மற்றும் மீன்வளத்துறை அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் மனிதவள மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும்

தொழில்நுட்பப் பயன்பாட்டின் மூலம் மீன்வளத்தை மேம்படுத்துதல்.

14. மின் ஆளுமை மூலம் வெளிப்படைத் தன்மையுடன் திட்டங்கள் சென்றடைவதை கண்காணித்து உறுதி செய்தல்.

## 2.4 துறையின் முக்கிய செயல்பாடுகள்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:


1. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல்.
2. இயற்கை பேரிடர் காலங்களில் தேடுதல், மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்.
3. கடல் மீன்பிடிப்பின் போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
4. மீன்வளச் சட்டங்கள் மற்றும் விதிகளை அமல்படுத்துதல்
5. மீனவர்களுக்கான பல்வேறு சமூக நலத் திட்டங்களை செயல்படுத்துதல்.

6. மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள் மற்றும் அரசு மீன் பண்ணைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
7. சுகாதாரமான முறையில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் குளிர்காப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
8. நீர்நிலைகளில் மீன் குஞ்சுகளை உற்பத்தி மற்றும் இருப்பு செய்வதன் மூலம் கடல் மற்றும் உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை பாதுகாத்து மேலாண்மை செய்தல்.
9. உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின் மூலம் மேம்படுத்துதல்.
10. மீன் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்.
11. மீனவ மகளிருக்கென சிறப்பு மாற்று வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்துதல்.

12. மீனவர் மற்றும் மீன்வளர்ப்போருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளித்தல்.
13. விரிவாக்கப் பணிகள் மூலம் திட்டங்களை சென்றடையச் செய்தல்.
14. மீனவ கூட்டுறவு சங்கங்களை மேலாண்மை செய்தல்.
15. மாற்று வாழ்வாதார நடவடிக்கைகள் மூலம் மீனவர்களின் சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.
16. மீனவர்களுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் மற்றும் மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்குதல் போன்ற நலத்திட்டங்களை செயல்படுத்துதல்.
17. தமிழ்நாடு மீனவர் நல வாரியம் மூலம் நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்குதல்.

## 3. நிருவாக அமைப்பு

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் தலைவராக முதன்மைச் செயலாளர்/ஆணையர் உள்ளார். மேலும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உட்பட அனைத்து மீனவ கூட்டுறவு சங்கங்களின் செயற்பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.




**மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 1,796 ஆகும். பதவி வாரியாக பணியிடங்களின் விவரம் இணைப்பு–1 ல் கொடுக்கப்பட்டுள்ளது.**

## 4. தமிழ் நாட்டின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையினைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் கடல் மீன் உற்பத்தி 5.97 இலட்சம் மெட்ரிக் டன் (2022–23) ஆகும். இதில் 1.23 இலட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.6,957.67 கோடி அந்நிய செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஆறுகள், ஏரிகள், குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் கழிமுகங்கள் உள்நாட்டு மீன்வள உற்பத்திக்கு முக்கிய ஆதாரங்களாக உள்ளன.

தமிழகத்தில் உப்பங்கழிகள், கழிமுகங்கள், முகத்துவாரங்கள் போன்ற மீன்பிடிப்பிற்கு உகந்த மீன்வள ஆதாரங்களான உவர்நீர்ப்பரப்பு, தோராயமாக 56,000 ஹெக்டேரில் உள்ளது. தற்போது, 4,536.46 ஹெக்டேர் பரப்பளவிலான 2,360 பண்ணைகள் மூலமாக கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.1 கடல் மீன்வளம்

தமிழ்நாடு கடற்பகுதி கோரமண்டல், பாக்ஜலசந்தி, மன்னார் வளைகுடா, மேற்கு கடற்கரை ஆகிய நான்கு மண்டலங்களைக் கொண்டுள்ளது. இக்கடற்பகுதியில் கட்டுமரம், இயந்திரம் பொருத்தப்பட்ட மற்றும் இயந்திரம் பொருத்தப்படாத பாரம்பரிய மீன்பிடி படகுகள், இழுவலை மற்றும் செவுள்வலை படகுகள், ஆழ்கடல் மீன்பிடி படகுகள் போன்ற பல்வேறு மீன்பிடி படகுகள் மூலம் மீன்பிடிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடல் மீன்வளம் குறித்த கண்ணோட்டம் இணைப்பு I–ல் காணும் அட்டவணை 2–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 4.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் 3.85 இலட்சம் ஹெக்டேர் உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் உள்ளன. ஆறுகள், நீர்த்தேக்கங்கள், நீண்டகால மற்றும் குறுகிய கால பாசனக் குளங்கள் மற்றும் இதர நீர்நிலைகள் உள்நாட்டு மீன்வளர்ப்பிற்கு உகந்ததாக உள்ளன. மேற்படி நீர்நிலைகள் நீர்வளத்துறை, ஊரக வளர்ச்சி

மற்றும் உள்ளாட்சி துறை மற்றும் பிற துறைகள் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. தற்போது 90 நீர்த்தேக்கங்கள் மற்றும் 14,306 நீர்ப்பாசன குளங்கள் ஆகியவை நீர்வள ஆதாரத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 22051 சிறு பாசன குளங்கள் மற்றும் ஊரணிகள் ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சி துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் 62 நீர்த்தேக்கங்கள் மற்றும் 636 நீர்ப்பாசன குளங்களில் நவீன தொழில்நுட்பத்தின் மூலம் மீன்வளப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள்நாட்டு மீன்வளம் குறித்த கண்ணோட்டம் இணைப்பு I–ல் உள்ள அட்டவணை 3–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**4.3 உவர்நீர் மீன்வள மேலாண்மை**

உவர்நீர்ப் பரப்பானது, முகத்துவாரப் பகுதியில் வசிக்கக்கூடிய மீன் இனங்களின் இனப்பெருக்கம், அவற்றின் வாழ்க்கை சுழற்சிக்கு அடிப்படையாக

அமைவதுடன், இனப்பெருக்கத்திற்காக, ஓர் நீர்ப்பரப்பில் இருந்து மற்றொரு நீர்ப்பரப்பிற்குச் செல்லும் மீன் இனங்களின் வாழ்விடமாகவும் உள்ளது. உவர்நீர் ஆதாரமானது, முகத்துவாரங்கள், உப்பங்கழிகள், சதுப்பு நிலக் காடுகள் மற்றும் உப்பு நீர் ஏரிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. இவை வணிக மற்றும் சுற்றுச்சூழலுக்கு முக்கியமான மீன், இறால் மற்றும் நண்டுகளின் இனப்பெருக்கம் மற்றும் மீன் குஞ்சு உற்பத்தி நடைபெறும் இடங்களாகும்.

பழவேற்காடு ஏரி, ஆரணியாறு, எண்ணூர், அடையார் முகத்துவாரப் பகுதி, முட்டுக்காடு உப்பங்கழிகள், கெடிலம், பிச்சாவரம், பழையாறு, கொள்ளிடம், முத்துப்பேட்டை உவர்நீர்ப் பகுதி, புன்னக்காயல், மணக்குடி மற்றும் தேங்காப்பட்டினம் ஆகியன, தமிழகத்தில் உள்ள முக்கியமான முகத்துவார மற்றும் உவர்நீர்ப் பகுதிகளாகும்.

தமிழ்நாட்டில், மொத்தமாக 56,000 ஹெக்டேர் உவர்நீர்ப் பரப்பு உள்ளது. இது இந்தியாவின் மொத்த

உவர்நீர்ப் பரப்பளவில் 3.98 சதவீதமாகும். பழவேற்காடு உவர்நீர் ஏரியானது, 6,400 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. பழவேற்காடு உவர்நீர் ஏரியில் கூண்டு மீன்வளர்ப்பு முறையில் கொடுவா மீன்கள் வளர்க்கப்படுவதுடன் சிப்பி வளர்ப்பும் (Bivalve) மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்திலுள்ள முகத்துவார மற்றும் உவர்நீர்ப் பரப்பானது, அதிக உற்பத்தி திறன் கொண்டதாக அமையப்பெற்றுள்ளதால் இப்பகுதி மீன்பிடிப்பு மற்றும் வளர்ப்பிற்கு உகந்த நீர்நிலைகளாக உள்ளது.

## 4.4 கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பு

உலகின் பல பகுதிகளில் கடல் மீன் பிடிப்பின் மூலம் கிடைக்கப்பெறும் மீன்களின் அளவு மற்றும் மீன் வளங்கள் மிகவும் குறைந்து வருகின்றன. ஆனால், உலகளவில் தொடர்ந்து அதிகரித்து வரும் கடல் உணவுக்கான தேவை, கடல் மீன்பிடிப்பு குறைந்து வருதல் மற்றும் மீன் பிடித்தலுக்குத் தேவையான உள்ளீட்டு செலவுகள் அதிகரித்தல் ஆகியவை கடல்

உயிரின வளர்ப்பு மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசின் கொள்கை கட்டமைப்பானது, அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலம், பொறுப்பான மற்றும் நிலையான கடலோர மீன் வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பினை ஊக்குவிக்கிறது. ஏற்றுமதி வர்த்தகத்திற்கான கடல் உணவுப் பொருட்களில், இறால் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், நவீன மீன் வளர்ப்பு தொழில் நுட்பங்களில். இறால் வளர்ப்பு இலாபம் ஈட்டக்கூடிய தொழிலாக கருதப்படுகிறது. இறால் வளர்ப்பின் மூலம் கடலோரப் பகுதிகளில் அதிகளவு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன் இத்தொழில் நாட்டிற்கு அந்நியச் செலவாணியை ஈட்டி தருகிறது.

தமிழ்நாட்டில் 4,536.46 ஹெக்டேர் பரப்பில் அமைந்துள்ள 2,360 இறால் பண்ணைகள், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் மூலம் பதிவு

செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் இயங்கி வரும் 15,665 மில்லியன் இறால் குஞ்சுகள் உற்பத்தித் திறன் கொண்ட 80 இறால் குஞ்சு பொரிப்பகங்கள் தமிழகம் மற்றும் அண்டை மாநிலத்திற்குத் தேவையான இறால் குஞ்சுகளை வழங்கி வருகின்றன.

**5. கடல் மீன்பிடி செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள்**

கடல் மீன்வள மேம்பாடு என்பது, கடல் மற்றும் கடல் வளத்தைச் சார்ந்து வாழும் மீனவர்களின் நலனுக்கான அடித்தளமாக உள்ளது. மீன்வளத்தைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் மீன் பொருட்கள் ஏற்றுமதியை ஊக்குவித்தல் ஆகியன நிலையான மீன்வள வளர்ச்சிக்கு தொடர்புடைய காரணிகளாகும். எதிர்கால தலைமுறையினருக்கு மீன்வளம் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்திடவும், அதே வேளையில், மீன் வளத்தை உகந்த அளவில், வளங்குன்றா வகையில் பயன்படுத்துவதற்கான அணுகுமுறையிலும் அரசின் திட்டங்கள் அமைந்துள்ளன.

## 5.1 கடல் மீன்பிடிப்பு பற்றிய கண்ணோட்டம்

கடல் மீன்வள மேம்பாடு என்பது, மாநில மற்றும் ஒன்றிய நிதியின் கீழ், மீனவர் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள், தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை சட்டம், 1983 அமலாக்கம் மற்றும் மீன்வளப் பாதுகாப்பு, பேரிடரை எதிர்கொள்ள தயார் நிலையிலிருத்தல், ஆபத்துக் காலங்களில் மீனவர்கள் மீட்பு, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடலில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு போன்றவற்றை உள்ளடக்கியது ஆகும்.

2023–24ஆம் ஆண்டில் கடல் மீனவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்திட தமிழ்நாடு அரசு ரூ.322.75 கோடி ஒப்பளித்துள்ளது. இவ்விவரம் இணைப்பு I–ல் காணும் அட்டவணை 4 ல் உள்ளது.

## 5.2. மாநிலத் திட்டங்கள்

### 5.2.1. மீன்பிடிப்பு குறைவு காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல்

மீன்பிடி குறைவு காலத்தில், கடல் மீன்வள செயல்பாடுகளில் ஈடுபடும் கடல் மீனவர் குடும்பங்களின் துயரினைக் களைந்திடும் விதமாக மீன்பிடி குறைவு மாதங்களில் கடல் மீனவக் குடும்பங்களுக்கு தமிழ்நாடு அரசு நிவாரணத் தொகை வழங்கி வருகிறது.

2021-22 ஆம் ஆண்டு முதல் கடல் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு நிவாரணத் தொகையை ரூ.5,000/- லிருந்து ரூ.6,000/- ஆக அரசு உயர்த்தியுள்ளது.

அதன்படி, 2023-24 ஆம் ஆண்டில், மீன்பிடி குறைவுகால சிறப்பு நிவாரணத் தொகை வழங்கிட ரூ.108 கோடியை அரசு ஒப்பளித்தது. இத்தொகையில், 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,75,568 கடல் மீனவ குடும்பங்களுக்கு ரூ.105.34 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2024–25ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக அரசு ரூ.109.85 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 5.2.2 கடல் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டமானது, மாநில அரசு திட்டமாக 2022–23ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், மீனவர் பங்களிப்புத் தொகை ரூ.1,500/– உட்பட நிவாரணத் தொகையாக ரூ.4,500/– மீன்பிடி குறைவு மாதங்களில் வழங்கப்படுகிறது. 2023–24 ஆம் ஆண்டிற்கு, இத்திட்டத்திற்கென அரசு ரூ.63.39 கோடியை ஒப்பளித்துள்ளது. அத்தொகையில், 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,97,826 கடல் மீனவர்களுக்கு மொத்தம் ரூ.59.35 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், ரூ.64.30 கோடி செலவில் 2024–25 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.2.3. கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் 2006–07ஆம் ஆண்டு முதல் மாநில அரசு நிதியுதவி திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மீனவ மகளிருக்கும், மீனவ மகளிரின் பங்களிப்புத் தொகையான ரூ.1,500/–ஐ சேர்த்து மொத்த நிவாரணத் தொகையாக ரூ.4,500/– வழங்கப்பட்டு வருகிறது.

2023–24ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென அரசு ரூ.61.77 கோடியை ஒப்பளித்துள்ளது. அத்தொகையில் 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,95,649 கடல் மீனவ மகளிருக்கு, மொத்தம் ரூ.58.69 கோடி வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நிவாரணத் தொகை 2024ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வழங்கப்படும்.

இத்திட்டத்தினை 2024–25 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்திட, அரசு ரூ.62.67 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**5.2.4 மீன்பிடி படகுகளுக்கு வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல்**

பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விசைப்படகிற்கும் ஒரு ஆண்டிற்கு 18,000 லிட்டரும், அதாவது ஒரு விசைப்படகிற்கு 2 மாத மீன்பிடி தடைக்காலம் தவிர, 10 மாதங்களுக்கு, மாதத்திற்கு 1800 லிட்டர் வீதம் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. மேலும், ஒவ்வொரு இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகிற்கும், ஒரு ஆண்டிற்கு அதிகபட்சமாக, 4,000 லிட்டர் வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் வழியாக வழங்கி வருகிறது.

2023–24 ஆம் நிதியாண்டில், ரூ.194.75 கோடி அளவில் விற்பனை வரி தொகை விலக்களிக்கப்பட்டு, 1,25,398 கிலோ லிட்டர் டீசல் எரியெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

மீனவர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், 18.08.2023 அன்று மீனவர் நல மாநாட்டில்

வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, வரி விலக்களிக்கப்பட்ட டீசல் அளவினை ஆண்டு ஒன்றுக்கு, ஒரு மீன்பிடி விசைப்படகிற்கு 18,000 லிட்டரிலிருந்து 19,000 லிட்டராகவும், இயந்திரம் பொருத்திய நாட்டுப்படகு ஒன்றிற்கு 4,000 லிட்டரிலிருந்து 4,400 லிட்டராகவும் அரசு உயர்த்தியுள்ளது. 2024-25 ஆம் ஆண்டிலிருந்து மீன்பிடி படகுகளுக்கு உயர்த்தப்பட்ட அளவில் மானிய டீசல் வழங்கப்படும்.

**5.2.5 பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல்.**

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்திய நாட்டுப்படகுகளுக்கு, ஓராண்டிற்கு, ஒரு படகிற்கு, 3,400 லிட்டர் தொழிலக மண்ணெண்ணெயினை லிட்டர் ஒன்றிற்கு ரூ.25 வீதம் மானிய விலையில் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

2023–24 ஆம் நிதியாண்டில், ரூ.96.77 கோடி அளவில் மானிய விலையில் 20,722 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

மீனவர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், 18.08.2023 அன்று மீனவர் நல மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, மானிய விலையில் வழங்கப்படும் தொழிலக மண்ணெண்ணெய் அளவினை, ஆண்டு ஒன்றுக்கு, 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்டராக அரசு உயர்த்தியுள்ளது. 2024–25 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்ட அளவில் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

**5.2.6 கடலில் மீன்பிடிக்கும் போது பிறநாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித்தொகை வழங்குதல்**

கடலில் மீன் பிடிக்கும் போது இலங்கை மற்றும் பிற அண்டை நாட்டினரால் சிறை பிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திடும் வகையில் நாளொன்றுக்கு ரூ.250/– வீதம் தின

உதவித்தொகையாக மாநில அரசு வழங்கி வருகிறது. இத்திட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023-24 ஆம் ஆண்டில், சிறைபிடிக்கப்பட்ட 259 மீனவர்களின் குடும்பங்களுக்கு, ரூ.19.85 இலட்சம் நிவாரணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், 2024-25 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்

**5.2.7 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்**

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, நாளொன்றுக்கு தின உதவித்தொகையாக ரூ.350/- வீதம் மாதமொன்றுக்கு ரூ.10,500/- மாநில அரசால் வழங்கப்படுகிறது. கடலில் மீன்பிடிப்பிற்காகச் சென்று காணாமல் போகும் மீனவர்களின் குடும்பங்களுக்கு, இந்த உதவித் தொகையினை இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது குழுவிபத்து காப்புறுதி திட்டம் / தமிழ்நாடு மீனவர்

நலவாரியம் ஆகியவற்றின் கீழ் நிவாரண உதவி பெறும் வரை வழங்கப்படுகிறது. 2023-24 ஆம் ஆண்டிற்கு ரூ.13.34 இலட்சம் தின உதவித் தொகை 17 மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2024-25 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.2.8 இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கும் மீனவரது குடும்பத்தினருக்கு / காயமடையும் மீனவருக்கு நிவாரணம் வழங்குதல்

கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்கள், பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக்-வளைகுடா பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல் / துன்புறுத்தப்படுதல் போன்ற சிரமங்களை எதிர்கொள்வதோடு, சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகளின் போது, மரணமடையும் மீனவரது குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது

நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர், அவரது குடும்பத்தில் பொருளீட்டக்கூடிய ஒரே நபராக இருக்கும் பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. மீனவர் பலத்த காயம் மற்றும் சிறுகாயம் அடையும் போது முறையே ரூ.50,000/- மற்றும் ரூ.20,000/- கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

### 5.2.9 புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

கடலோர மீன்வளங்களை பாதுகாப்பதன் மூலம் நிலையான மீன்வளத்தைப் பெருக்கவும், அதிகம் பிடிக்கப்படாத ஆழ்கடல் மீன்வளங்களான சூரை மீன் மற்றும் அதுபோன்ற மீன் இனங்களை மீனவர்கள் பிடிப்பதை ஊக்கப்படுத்திடவும், 'தூண்டில் மற்றும் செவுள் வலையுடன் கூடிய புதிய சூரை மீன்பிடி

படகுகள்' வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், படகு ஒன்றினை கட்டுவதற்கான உத்தேச மதிப்பு ரூ.60 இலட்சத்தில், 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை ரூ.51.30 கோடி திட்ட மதிப்பீட்டில் 171 சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 103 படகுகள் கட்டி முடிக்கப்பட்டு ரூ.29.35 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இரண்டு படகுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 66 பயனாளிகளுக்கு புதியதாக பணி ஆணைகள் வழங்கப்பட்டு, படகு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 5.2.10 குழு விபத்து காப்புறுதி திட்டம் செயல்படுத்தப்படாத காலத்தில் இறந்த மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

மீனவர்களின் கோரிக்கையை கருத்தில் கொண்டு, 18.08.2023 அன்று நடைபெற்ற மீனவர்நல மாநாட்டின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, குழு விபத்து காப்புறுதி திட்டம் செயல்படுத்தப்படாத காலத்தில் (01.06.2020 முதல் 18.10.2021 வரை) 176 இறந்த மீனவர்கள் மற்றும் ஒரு ஊனமுற்ற மீனவரின் குடும்பங்களுக்கு அரசு நிதியிலிருந்து ரூ.3.53 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

### 5.2.11 மீனவர் நல மாநாடு

தமிழ்நாட்டில் முதல்முறையாக. தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மற்றும் மீனவ சங்கங்கள் ஒருங்கிணைந்து பிரத்யேகமாக மீனவர் நல மாநாடு 18.08.2023 அன்று இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில், அனைத்து கடலோர மற்றும்

உள்நாட்டு மாவட்டங்களிலிருந்து சுமார் 30,000 மீனவர்கள் கலந்து கொண்டனர்.

மீனவர் நல மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், மொத்தம் 14 ஆயிரம் பயனாளிகள் பயன்பெறும் வகையில் 88.90 கோடி ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மேலும், மீனவர்களின் நலன் கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்புகளும் வெளியிடப்பட்டன;-

1. மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பயனடைந்த 5035 பேருக்கு பட்டா வழங்கப்படும்.
2. மீன்பிடிதொழிலுக்கான கூட்டுறவுக்கடன் 45,000 மீனவர்களுக்கு வழங்கப்படும்.
3. மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை 5,000/- ரூபாயிலிருந்து 8,000/-ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்கள் 15,000 பேருக்கு

மீன்பிடி தடைக்காலத்தில் நிவாரணத் தொகை மாநில நிதியிலிருந்து வழங்கப்படும்.

4. 1,000 நாட்டுப்படகு மீனவர்களுக்கு 40 விழுக்காடு மானியத்தில் இயந்திரங்கள் வழங்கப்படும்.

5. தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தற்போது மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் அளவானது 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும்.

6. மானிய விலையில் வழங்கப்படும் டீசல் எரியெண்ணெய், விசைப்படகுகளுக்கு 18,000 லிட்டரிலிருந்து 19,000 லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்

படகுகளுக்கு 4,000 லிட்டரிலிருந்து 4,400 லிட்டராகவும் உயர்த்தி வழங்கப்படும்.

7. தங்கச்சிமடம் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். குந்துக்கல் மீன் இறங்குதளத்தை மேம்படுத்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். பாம்பன் வடக்கு மீனவர் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.

8. மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டம் செயல்படாத காலத்தில் இறந்த 205 மீனவர்களின் குடும்பங்களுக்கு மாநில நிதியிலிருந்து நிவாரணம் வழங்குதல். மீன்பிடிக்கையில் காணாமல் போகும் மீனவர்களுக்கு சுழல் நிதி 25 மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

9. மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின் கீழ் அலகுத் தொகையானது ரூ.1.70

இலட்சத்திலிருந்து ரூ.2.40 இலட்சமாக உயர்த்தப்படும்.

10. பல்வேறு மீனவ கிராமங்களில் கடல் அரிப்பை தடுக்கவும், படகுகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தூண்டில் வளைவுகள் அமைக்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேற்படி அறிவிப்புகள் மூலமாக மொத்தம் 2,77,347 மீனவர்கள் பயனடைந்திட ஏதுவாக, மொத்தம் ரூ.926.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்திட அறிவித்தார்கள். மேற்கண்ட 10 அறிவிப்புகளில் 9 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. இதர ஒரு அறிவிப்பினை செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

## 5.3 ஒன்றிய அரசு பங்களிப்புத் திட்டங்கள்

### 5.3.1 மீன்பிடி தடைக்காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்திற்கான நிவாரணத் தொகை வழங்குதல்

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, 2001–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 61 நாட்கள் மீன்பிடி தடைக்காலம், கிழக்கு கடற்கரைப் பகுதியில் (திருவள்ளூர் முதல் கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி நகர் வரை) ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் (கன்னியாகுமரி மாவட்டத்தில் கோவளம் முதல் நீரோடி வரை) ஜூன் 1 முதல் ஜூலை 31 வரையிலும் அமல்படுத்தப்படுகிறது.

மீன்பிடி தடை காலத்தில் மீனவர்களின் துயரினை களைந்திட, 14 கடலோர மாவட்டங்களில் உள்ள கடலோர மீனவ குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ.5000/– வீதம் மீன்பிடி தடைகால நிவாரணத்தை அரசு வழங்கி வருகிறது. இதனில், பிரதம

மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு தனது பங்குத்தொகையாக ரூ.1500/-ஐ வழங்குகிறது. 2023-24ஆம் ஆண்டில் 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,67,007 மீனவ குடும்பங்களுக்கு ரூ.83.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

18.08.2023 அன்று மீனவர்நல மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் மீன்பிடி தடைகால நிவாரணத் தொகையினை ரூ.5,000/-லிருந்து ரூ.8,000/- ஆக (ஒன்றிய அரசு பங்குத்தொகை ரூ.1,500/- + மாநில அரசு பங்குத் தொகை ரூ.6,500/-) அரசு உயர்த்தியுள்ளது.

2024-25ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் நிவாரணம் வழங்கிட அரசால் ரூ.144.21 கோடி ஒப்பளிக்கப்பட்டு, 1,42,237 மீனவ குடும்பங்களுக்கு ரூ.113.79 கோடி மீன்பிடி தடைகால நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 5.3.2 மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம்

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) மூலம் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் விபத்தில் இறந்த மீனவருக்கு ரூ.5 இலட்சம், விபத்தில் ஊனமடைந்த மீனவருக்கு ரூ.2.50 இலட்சம் மற்றும் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் மீனவருக்கு ரூ 25,000/- வீதம் நிவாரணமாக வழங்கப்படுகிறது. 2023-24-ஆம் ஆண்டிற்கு 5,58,966 உறுப்பினர்களுக்கு மாநில அரசின் பங்குத்தொகையாக ரூ.2.12 கோடி (40% சந்தாத்தொகை) தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டு, 31.05.2024 வரை இத்திட்டம் நடைமுறையில் இருக்கும்.

2024-2025-ஆம் ஆண்டிற்கு மீனவர்களுக்கான காப்புறுதி திட்டம், பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY) உடன் குழு விபத்துக் காப்புறுதி திட்டத்துடன் (GAIS) ஒருங்கிணைந்ததாக செயல்படுத்தப்படுகிறது. தேசிய மீன்வள மேம்பாட்டு

வாரியம் (NFDB) மற்றும் ஒன்றிய நிதி அமைச்சகத்தின் நிதிச் சேவைத் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது. 2024–25ஆம் ஆண்டிற்கு 5,73,183 பயனாளிகளுக்கு சந்தா தொகை செலுத்திட மாநில அரசின் பங்குத்தொகையாக ரூ.1.92 கோடி (40% சந்தாத் தொகை) தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டு, 01.06.2024 முதல் 31.05.2025 வரை இத்திட்டம் நடைமுறையில் இருக்கும்.

### 5.3.3 பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குதல்

பாரம்பரிய மீன்பிடி கலன்களில் பொருத்திட வெளிப்பொருத்தும் இயந்திரம் / உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு, இயந்திரத்தின் ஒரு அலகிற்கான விலையில் 40 விழுக்காடு அல்லது ரூ.48,000/– மானியமாக வழங்கப்படுகிறது.

2023–24 ஆம் ஆண்டில், மாநில திட்டத்தில் பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு 1,000 உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் வகையிலான 28 குதிரைத்திறன் வரை உள்ள

இயந்திரங்கள் ரூ.4.80 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

### 5.3.4 பாக் வளைகுடா மாவட்டங்களில் இழுவலைப் படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றுவதற்கு மானியம் வழங்குதல்

பாக் வளைகுடா பகுதியில் உள்ள இழுவைப் படகுகளுக்கு மாற்றாக, ஆழ்கடல் சூரை மீன்பிடி படகுகள் கட்டும் திட்டத்தினை, ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் 70 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. ஒரு படகின் மொத்த விலையான ரூ.80 இலட்சத்தில், 50 விழுக்காடு மத்திய அரசின் மானியமாக ரூ.40 இலட்சமும், 20 விழுக்காடு தமிழ்நாடு அரசின் மானியமாக ரூ.16 இலட்சமும், 10 விழுக்காடு பயனாளியின் பங்களிப்பாக ரூ.8 இலட்சமும், மீதமுள்ள 20 விழுக்காடு வங்கிக் கடனாக ரூ.16 இலட்சமும் வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 61 ஆழ்கடல் மீன்பிடி படகுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும், 19 படகுகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளன.

**5.3.5 பாரம்பரிய நாட்டுப்படகுகளுக்கு மாற்றாக, கண்ணாடி நாரிழைப்படகு மற்றும் இதர உபகரணங்கள் வாங்க மானியம் வழங்குதல்**

'பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் பாரம்பரிய மீனவர்கள் பயன்படுத்தும் நாட்டுப்படகுகளுக்கு மாற்றாக 10 மீட்டர் ஒட்டுமொத்த நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப் படகுடன் வலைகள், வெளிப்பொருத்தும் இயந்திரம் மற்றும் குளிர்காப்பு பெட்டி வாங்குவதற்கு, அதன் அலகு ஒன்றின் விலையான ரூ.5 இலட்சத்தில் 40 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2 இலட்சம் மானியமாக அரசு வழங்கி வருகிறது.

2023–24 ஆம் ஆண்டில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.64 கோடி மானிய உதவியில் 91 கண்ணாடி நாரிழைப்படகுகள் மற்றும்

மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2024-25ஆம் ஆண்டில் 209 கண்ணாடி நாரிழைப்படகுகள் வழங்கப்படும்.

## 5.4 மீன்பிடி ஒழுங்குபடுத்துதல் மற்றும் சட்ட அமலாக்கம் செய்தல்

### 5.4.1 மீன்பிடி கலன்களை பதிவுசெய்தல்

மீன்பிடி கலன்களின் இயக்கத்தைக் கண்காணித்திடவும், கடலோரப் பாதுகாப்பினை உறுதிப்படுத்திடவும், மீன்பிடி கலன்கள் இணையதளம் மூலம் ('ReALCraft' website) பதிவு செய்யப்படுகின்றன. 5,440 மீன்பிடி விசைப்படகுகள், 40,312 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் 4,175 இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப்படகுகள் 'ReALCraft' இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 5.4.2 கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்ட அமலாக்கப்பிரிவு

தமிழ்நாடு கடல்மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தினை சிறப்பாக அமல்படுத்துதல், சட்டத்திற்கு முரணான மீன்பிடிப்பை தடுத்தல், மீன்வள ஆதாரத்தை

பாதுகாத்தல், மீன்பிடிப்பை முறைப்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்துவதற்கு மீன்வளத் துறைக்கென தனியே சட்ட அமலாக்கப் பிரிவுக்கான 112 பணியிடங்களில், 92 காவல்துறை அலுவலர்களுடன் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 14 கடலோர மாவட்டங்களில், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம், 1983–ஐ அமலாக்கம் செய்திட, ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், 10 காவல் ஆய்வாளர்கள், 8 காவல் சார்–ஆய்வாளர்கள், 53 காவலர்கள், 19 காவல் ஓட்டுநர்கள் ஆகிய நிரந்தரப் பணியிடங்களைக் கொண்டு இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

சட்டத்திற்குப் புறம்பான மீன்பிடிப்பு, அழிவை ஏற்படுத்தும் மீன்பிடிப்பு மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதை தடுத்தல் மற்றும் மீன்பிடிதலில் ஒழுங்குமுறையை நிலைநாட்டிட கடலில்

ரோந்துப் பணி மேற்கொள்ளுதல், ரோந்துப் பணியின் போது சேகரிக்கப்படும் சமூகவிரோத செயல்பாடுகள் மற்றும் நுண்ணறிவுத் தகவல்களை கடலோர பாதுகாப்புப்படை மற்றும் உள்ளூர் காவல்துறையின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுத்தல் போன்ற முக்கியப் பணிகளை இந்த அமலாக்கப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

### 5.5 பேரிடர் தயார்நிலை, மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்

மோசமான வானிலை மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

1) மீனவர்களுக்கு வானிலை மற்றும் புயல் எச்சரிக்கை தகவல்களைப் பகிர்தல்.
2) வானிலை தகவல்கள் மற்றும் எச்சரிக்கைகளை மீனவர்களுக்கு 24 மணி நேரமும் வழங்கிடத் தேவையான தொலைதொடர்பு வசதிகளுடன் கூடிய மத்திய கட்டுப்பாட்டு அறை மீன்வளம் மற்றும் மீனவர்

நலத்துறை ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்தக்கட்டுப்பாட்டு அறைப் பணிக்காக பிரத்யேக தொலைபேசி எண். 044–29530392 வழங்கப்பட்டுள்ளது.

3) தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் கடலோர காவல் குழுமம், இந்திய கடலோர காவல் படை மற்றும் இந்திய கப்பல்படை ஆகியவற்றுடன் இத்துறை ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

### 5.5.1 கடலில் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத்தொடர்பிற்கான நடவடிக்கைகள்

#### 5.5.1.1 கம்பியில்லா தொலைத்தொடர்பு கருவிகள் வழங்குதல்

கடல் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட, தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களையும் உள்ளடக்கிய தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு 18 தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடலில் உள்ள மீன்பிடி கலன்கள் கரைப்பகுதியினை தொடர்பு கொள்ள ஏதுவாக,

15 இடங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு விலையில்லா 5 வாட் வி.எச்.எப். கருவிகள் 17,795 எண்ணம் மற்றும் விசைப்படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் 3,135 எண்ணம் 25 வாட் வி.எச்.எப். கருவிகளும், ஆக மொத்தம் 20,930 வி.எச்.எப். தொலைத்தொடர்பு கருவிகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

**5.5.1.2 விசைப்படகுகளில் 'டிரான்ஸ்பாண்டர்கள்' (Transponders) பொருத்துதல்**

200 கடல் மைல்கள் வரை ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களைக் கண்காணித்திடவும், மீன்பிடிப்பில் இருக்கும் படகுகளுக்கு தகவல் தெரிவித்திடவும், ஆபத்து காலங்களில் உதவிகள் புரிந்திடும் பொருட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் டிரான்ஸ்பாண்டர்களை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 4,997 விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்களை பொருத்திடும் பொருட்டு ஒன்றிய

அரசு ரூ.18.01 கோடி நிதி விடுவித்துள்ளது. மீன்பிடி விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்திடும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30. 12. 2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2,398 விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள விசைப் படகுகளில் ட்ரான்ஸ்பாண்டர்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

### 5.5.1.3 செயற்கைகோள் தொலைபேசி, "நேவிக்" (NavIC) மற்றும் "நேவ்டெக்ஸ்" (NavTex) தொலைத் தொடர்பு சாதனங்கள் வழங்குதல்

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்பினை மேம்படுத்தும் வகையில், 80 விசைப்படகு குழுக்களுக்கு, ரூ.2.28 கோடி செலவில், 160 செயற்கைகோள் தொலைபேசிகள், 200 நேவிக் மற்றும் 80 நேவ்டெக்ஸ் ஆகிய தொலைத்தொடர்பு கருவிகள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு மானிய விலையில் 500 விசைப் படகுகளுக்கு செயற்கைகோள் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 5.5.1.4 "தூண்டில்" – கைபேசி செயலியுடன் கூடிய இணையதள சேவை

மீன்பிடிப்பிற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன்பிடி கலன்களை கண்காணிப்பதன் மூலம் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் விபரங்களை பதிவு செய்திடவும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, ஒன்றிய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் (MoES) தேசிய கடலோர ஆராய்ச்சி நிலையத்துடன் (NCCR) இணைந்து, இணையதளம் வாயிலாக "தூண்டில்" எனும் கைபேசி செயலியை உருவாக்கியுள்ளது. இந்த செயலி, கடலில் மீனவர்கள் தங்களின் இருப்பிடம், படகின் கடற்பயண பதிவுகள், பாதுகாப்பான இடம் செல்ல வழிகாட்டி, மீன் அதிகம் கிடைக்கும் இட விவரங்களைப் பெறுதல், மீன்

அதிகம் கிடைக்கும் பகுதிகளைப் பதிவு செய்தல் மற்றும் வானிலை அறிக்கை அறிந்துகொள்ளவும் உதவுகிறது.

### 5.5.2 அசாதாரண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடி படகுகளுக்கு நிவாரணம் வழங்குதல்

அசாதாரண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடி படகுகள் / மீன்பிடி உபகரணங்கள் / வீடுகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கிடும் பொருட்டு, ஒரு கடலோர மாவட்டத்திற்கு ரூ.10 இலட்சம் வீதம் அனைத்து கடலோர மாவட்டங்களுக்கும் ரூ.1.30 கோடி சுழல் நிதி தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 2023-24 ஆம் ஆண்டில் மோசமான வானிலையால் சேதமடைந்த 39 மீன்பிடி படகுகளுக்கு, ரூ.24.76 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2024-25 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.5.3 புயல், வெள்ளம், கனமழை போன்ற பேரிடர்களின் போது தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள்

புயல், வெள்ளம் மற்றும் கனமழையின் போது குடியிருப்புகள் நீரில் மூழ்குவதால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றனர். இவ்வாறான பேரிடர் காலங்களில் பொது மக்கள் மற்றும் உடமைகளை மீட்பது உடனடி தேவையாகிறது. அரசு துறைகளான தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள், தேசிய/மாநில பேரிடர் மீட்பு படை மற்றும் வருவாய் துறை ஆகியவை மீட்புபணிகளில் ஈடுபட்டிருந்தாலும் பொதுமக்களை பேரிடர்களிலிருந்து மீட்பதில் மீனவர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகிறது. இம்மீனவர்கள் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளை முன்களத்தில் நின்று பல்வேறு அரசு துறைகளுடன் ஒருங்கிணைந்து மீட்பு பணியினை மேற்கொள்கின்றனர். மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, மீனவர்களின் உதவியுடன் மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்களுடன் பேரிடர் மீட்பு

பணிகளை சிரத்தையுடன் மேற்கொள்கிறது. மீனவர்களின் உதவியுடன், இப்பேரிடரின் போது எண்ணற்ற விலை மதிக்க முடியாத மனித உயிர்கள், அவர்களது உடமைகள் மீட்கப்பட்டுள்ளன.

பெருமழை மற்றும் புயல் போன்ற பேரிடர் காலங்களில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, மீனவர்களின் உதவியுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு படகுகள் மூலம் கொண்டு சேர்க்கவும், அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் வரலாறு காணாத மிகக் கனமழையின் போது, அரசு துரிதமாக செயல்பட்டு, வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டது. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலமாக மொத்தம் 633 படகுகள், 158 பரிசல்கள் மற்றும் 1866 மீனவர்கள்

மற்றும் பணியாளர்கள் தேடுதல் மற்றும் மீட்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். அரசு பிரத்யேகமாக மீட்பு பணிக்காக ரூ.2.70 கோடியினை இத்துறைக்கு ஒப்பளித்து விடுவித்தது. பெருவெள்ளத்தால் அணுக முடியாத பகுதிகள் மற்றும் வெள்ளத்தில் மூழ்கிய பகுதிகளுக்குச் சென்று சேதங்களை மதிப்பிடுவதற்கு சேத மதிப்பீட்டுக் குழுக்களுக்கு மீனவர்கள் உதவினார்கள். மீனவர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையை அரசு பாராட்டி 20.01.2024 அன்று தூத்துக்குடியிலும், 24.01.2024 அன்று சென்னையிலும் நடைபெற்ற பாராட்டு நிகழ்வுகளின் போது மீட்புப் பணியில் ஈடுபட்ட மீனவர்கள் அரசால் கௌரவிக்கப்பட்டனர்.

### 5.5.3.1 மிக்ஜாம் புயலில் சேதமடைந்த மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு நிவாரணம் வழங்குதல்

மிக்ஜாம் புயல் காரணமாக 04.12.2023 அன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் பெய்த

கனமழையால் பல்வேறு பகுதிகளில் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளுக்காக மொத்தம் 450 FRP படகுகள், 96 பரிசல்கள் மற்றும் 1195 மீனவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும், மீட்புப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்ட படகுகள், வாகனம், கிரேன் ஆகியவற்றுக்கான வாடகை கட்டணம் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்ட மீனவர்களுக்கான உணவுப்படி என மொத்தம் ரூ.1.70 கோடி அரசாணை (நிலை) எண்.601, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (DM II) துறை, நாள்:27.12.2023–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டு மீட்புப் பணியில் ஈடுபட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சேத மதிப்பீட்டுக் குழுக்களின் அறிக்கையின்படி, மிக்ஜாம் புயலினால் சேதமடைந்த மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்களுக்கான நிவாரணத் தொகையாக ரூ.12.88 கோடி, அரசாணை (நிலை) எண். 29, வருவாய் மற்றும் பேரிடர்

மேலாண்மைத் (DM II) துறை, நாள். 05.02.2024–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டு சென்னை, திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் சேதமடைந்த மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**5.5.3.2. தென் மாவட்டங்களில் அதிதீவிர கன மழையால் சேதமுற்ற மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் 15.12.2023 முதல் 17.12.2023 வரை பெய்த அதிகனமழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டன. இதனால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி படகுகள் சேதமடைந்தன.

தூத்துக்குடி, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் இருந்து 18.12.2023 முதல்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளுக்காக, மொத்தம் 183 FRP படகுகள், 62 பரிசல்கள் மற்றும் 671 மீனவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும், மீட்புப் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்ட படகுகள், வாகனம், கிரேன் ஆகியவற்றிற்கான வாடகை கட்டணம் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்ட மீனவர்களுக்கான உணவுப்படி என மொத்தம் ரூ.99.00 இலட்சம், அரசாணை (நிலை) எண்.601, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (DM II) துறை, நாள்:27.12.2023 மற்றும் அரசாணை (நிலை) எண். 29, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (DM II) துறை, நாள்:05.02.2024 ஆகிய அரசாணைகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்டு மீட்புப் பணியில் ஈடுபட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சேத மதிப்பீட்டுக் குழுக்களின் அறிக்கையின்படி, பெருவெள்ளத்தினால் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய

மாவட்டங்களில் சேதமடைந்த மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்களுக்கான நிவாரணத் தொகையாக ரூ.14.53 கோடி, அரசாணை (நிலை) எண். 29, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (DM II) துறை, நாள். 05.02.2024–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டு தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சேதமடைந்த மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இனிவரும் பேரிடர் காலங்களை திறம்பட எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீனவர்களுக்கு முன்களப்பணியாளர் பயிற்சி அரசால் வழங்கப்படவுள்ளது. மேலும், மீட்பு பணிகளுக்குத் தேவையான உபகரணங்களான படகுகள், இயந்திரங்கள் மற்றும் பரிசல்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்திடவுடம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

### 5.5.4 கடல் ஆமைகளைப் பாதுகாத்தல்

தமிழ்நாடு கடற்பகுதியில் கடல் ஆமைகளை பாதுகாத்திடும் பொருட்டு, மீன்பிடி இழுவலைகளில் கடல் ஆமைகள் சிக்காமல் வெளிச்செல்ல ஏதுவாக, இழுவலைகளில் Turtle Excluder Device (TED) கருவிகள் பொருத்திடவும், ஒவ்வொரு ஆண்டும் கடல் ஆமைகளின் இனப்பெருக்கக் காலமான ஜனவரி 1 முதல் ஏப்ரல் 30 முடிய கடல் ஆமைகள் முட்டையிடும் கடற்பகுதியின் 5 கடல் மைல்களுக்குள் அனைத்து வகை படகுகளும் மீன்பிடிக்கத் தடையாணை பிறப்பித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

### 5.5.5 கடல் மீன்வள மேம்பாடு

#### 5.5.5.1 மீனவக் கிராமங்களில் செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவுதல்

செயற்கைப் பவளப் பாறைகள் கடல் நீர்வாழ் உயிரினங்களின் வாழ்விடமாகச் செயல்படுவதன் மூலம் மீன்கள் இனப்பெருக்கம் செய்து மீன் குஞ்சுகளின் உயிர்வாழ்வை அதிகரிக்க உதவுகின்றன. இதன் மூலம்

மீன் உற்பத்தி அதிகரிக்க உதவுகிறது. மேலும், இது இழுவலை படகுகளுக்கு ஒரு தடையாகவும் செயல்படுகிறது. பாதுகாப்பு / இருப்பு விரிவாக்க நடவடிக்கையாக கடலோர நீரில் செயற்கை பவளப் பாறைகளை அமைப்பதன் மூலம் மீன் வாழ்விடங்களை மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடல் மீன் வளத்தை மேம்படுத்துவதற்காக, சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், மயிலாடுதுறை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 49 மீனவ கிராமங்களில் (பாக்–வளைகுடா மாவட்டங்கள் தவிர) மத்திய அரசு பங்கு தொகை ரூ.37.20 கோடி மற்றும் மாநில அரசு பங்கு தொகை ரூ.24.80 கோடி, ஆக மொத்தம் ரூ.62.00 கோடி மதிப்பீட்டில் 200 அலகுகள் செயற்கைப் பவள பாறைகள் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகின்றன.

## 5.6 தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல்

### 5.6.1 கச்சத்தீவினை திரும்பப் பெறுதல்

பாக் நீரிணைப் பகுதியில் 2,490 விசைப்படகுகள், 12,443 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் 1,020 நாட்டுப் படகுகள் பாரம்பரிய கடல் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. பாக் நீரிணைப் பகுதி மாவட்டங்களில் உள்ள 286 மீனவ கிராமங்களில் 2,08,827 மீனவ மக்கள் வாழ்கின்றனர். பாக் நீரிணை பகுதியிலுள்ள இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வாழும் சுமார் 80,000 மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக அத்துடன் பெரும்பான்மையான கடலோர மக்கள் மறைமுகமாகவும் தங்களது வாழ்வாதாரத்திற்காக பாக் நீரிணையில் பாரம்பரிய மீன்பிடிப்பை சார்ந்துள்ளனர்.

தமிழ்நாடு மீனவர்கள் தங்களது பாரம்பரிய கடற்பகுதியில் மீன்பிடிக்கும்போது சர்வதேச கடல் எல்லையை கடப்பதாகக் கூறி, இலங்கை

கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். இலங்கை அரசால் நமது மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடி படகுகள் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்படுவது தமிழ்நாடு மீனவர்கள் மத்தியில் கவலையையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, "கச்சத்தீவை" மீட்டெடுத்து மீண்டும் இந்தியாவிற்கு கிடைப்பது மற்றும் பாக் நீரிணைப் பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோளாக உள்ளது. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்கும் வகையில், 1974ல் இந்திய அரசால் இலங்கைக்கு ஒருதலைப்பட்சமாக வழங்கப்பட்ட "கச்சத்தீவை" மீட்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தொடர்பாக, தமிழ்நாடு சட்டமன்றத்திலும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், மாண்பமை உச்ச

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தமிழ்நாடு அரசும் வாதியாக இணைந்து, கச்சத்தீவை மீட்க இந்திய அரசை வலியுறுத்தியது.

அதன்பின் SLP.எண்.8013/2017ல், தனிநபர் ஒருவர், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 6வது பிரிவைச் செயல்படுத்த / அமல்படுத்த இந்திய ஒன்றியத்திற்கு எதிராக மனுதாக்கல் செய்துள்ளார். அத்துடன் அவ்வொப்பந்தம் தொடர்பான 23.03.1976 நாளைய கடிதத்திலுள்ள ஆட்சேபனைக்குரிய பிரிவுகளை நீக்கிட கோரியுள்ளார். தமிழ்நாடு அரசு 16.07.2022 அன்று மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தில் எதிர் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 17.06.2021 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு வழங்கிய கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார். மேலும், 01.04.2022 அன்று

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மீனவர்கள் எதிர்க்கொள்ளும் இன்னல்களுக்கு நிரந்தர தீர்வு காணவேண்டியும், பாரம்பரிய கடற்பகுதியில் தங்களது மீன்பிடி உரிமையை மீட்டெடுப்பதற்கும் மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளார். எனவே, மீனவர்கள் எதிர்க்கொள்ளும் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சத்தீவு மீதான இந்தியாவின் இறையாண்மையை மீட்டெடுப்பதன் மூலமே, பாரம்பரியக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க முடியும் என்பதை தமிழ்நாடு அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

**5.6.2 இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை விடுவித்தல்**

தமிழ்நாடு மீனவர்கள் பாரம்பரியமான பாக் வளைகுடா பகுதியில், தங்கள் மீன்பிடிப்பை

மேற்கொள்ளும் போது சர்வதேச கடல் எல்லையைத் தாண்டுவதாக தெரிவித்து, இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்படும் தொடர் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுதல், துன்புறுத்தப்படுதல், சிறைபிடிக்கப்படுதல் போன்ற சம்பவங்களால் பாதிக்கப்படும் போது, இரு நாட்டு தூதரக அளவில் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, அவர்களை விடுவிக்க வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு கடிதங்கள் வாயிலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு, கைது செய்யப்படும் மீனவர்களை விடுவிப்பதற்கு தூதரக ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறது. 01.04.2022 அன்று மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை

பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை மீட்க, மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளார். இதற்குமுன்பு அதிகபட்சமாக 113 நாட்கள் வரை இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு மீனவர்கள், இவ்வரசு எடுத்த முயற்சிகளினால், மிகக்குறைந்த காலமான 16 நாட்களிலேயே தாய்நாடு திரும்பியுள்ளனர். தற்போது வரை இலங்கை அரசு வசமுள்ள 161 படகுகள் மற்றும் சிறையிலுள்ள 11 மீனவர்களை மீட்டுக்கொண்டுவர அரசு அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

### 5.6.3 மீன்வளத்திற்கான இந்திய–இலங்கை கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் (JWG)

மீனவர்கள் மற்றும் மீன்பிடிப் படகுகளை விடுவிப்பது, ரோந்து மற்றும் கைது நடவடிக்கையின்

போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்/ நெறிமுறைகள் மற்றும் மீனவர்களை மனிதாபிமான முறையில் கையாளுவது குறித்து மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் (JWG) நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை, ஐந்து சுற்றுகள் இந்திய–இலங்கை கூட்டு பணிக்குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இக்கூட்டங்களின்போது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளை விடுவித்து, திருப்பி அனுப்புவது குறித்து மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

## 5.7 உவர்நீர் மீன்வளம், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பு

### 5.7.1. உவர்நீர் மீன்வளம்

தமிழ்நாட்டில் 56,000 ஹெக்டேர் உவர்நீர் பகுதிகள் உள்ளன. இவை மீன்கள் உட்பட பல நீர்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கம் செய்யும் இடங்களாக திகழ்கின்றன.

உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார மேலாண்மைக்கு அரசின் வாயிலாக மேற்கொள்ளப்பட வேண்டிய உத்திகள் மற்றும் செயல்பாட்டு திட்டங்கள் பின்வருமாறு:

1. வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல உவர் நீர் மீன் இனங்களுக்கு ஒரு முக்கியமான இனப்பெருக்கம் மற்றும் நாற்றங்கால் மையமாக சதுப்புநிலங்கள் செயல்பட்டு வருவதால் அவற்றை பாதுகாப்பதற்கும், புத்துயிர் பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார மீன்வளங்களை திறம்பட மேலாண்மை செய்தல் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான நிலைத்தன்மைக்கு மிகவும் அவசியம்.
3. உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார மீன்வள மேலாண்மைக்கான குறிப்பிட்ட வழிகாட்டுதல்களுடன் கடலோர மண்டல மேம்பாட்டு திட்டத்தில் உவர்நீர் ஏரிகள்

மற்றும் முகத்துவார வாழ்விடங்களை ஒருங்கிணைப்பதை உறுதி செய்தல்.

4. இனப்பெருக்கம் மற்றும் நாற்றங்கால் பகுதிகளில் உற்பத்தியை உறுதி செய்தல். மேலும், உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் மீன்பிடித்தலை திறம்பட மேம்படுத்திட மீன் இனங்களின் இடம்பெயர்வு வழிகளையும் உறுதி செய்தல்.
5. உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் மீன்வள மேலாண்மை மற்றும் உயிர் பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதில் சமூகத்தின் பங்களிப்பினை அதிகப்படுத்துதலை ஊக்குவித்தல்.
6. விரிவான ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு வாயிலாக உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவாரங்கள் தொடர்புடைய தரவு மற்றும் தகவல்களை சேகரித்து அதன் மூலம் உவர்நீர் மீன்வள மேலாண்மைப் பணிகளை திறம்பட மேற்கொள்ளுதல்.

### 5.7.2. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பில் தமிழ்நாடு இந்திய அளவில் 5–வது இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் சுமார் 4,536.46 ஹெக்டேர் பரப்பளவில் 2,360 இறால் பண்ணைகள் இயக்கத்தில் உள்ளன. கடந்த 2022–23ஆம் நிதி ஆண்டில் நமது மாநிலத்தில் இருந்து 80,420 டன் இறால் ஏற்றுமதி செய்யப்பட்டு ரூ.5,342.30 கோடி அந்நிய செலாவணி ஈட்டப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் உள்ள அண்மைக்கடல் பகுதிகளில், மீன் வளர்ப்பு மேற்கொண்டு மீன் உற்பத்தியினைப் பெருக்குவதற்கு சாத்தியக்கூறுகள் அதிகப்படியாக உள்ளதாலும், இவ்வகையான மீன் வளர்ப்பு முறைக்கான வாய்ப்புகளை உருவாக்க இயலும் என்பதாலும் கடலோர நீர் வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடலில் மீன் வளர்ப்பு முறைகளை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மீன் உற்பத்தியினைப் பெருக்குவதன் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் நீர் ஆதாரங்களின் உற்பத்திப் பயன்பாட்டினை அதிகரித்தல் ஆகியவை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பின் முக்கியத்துவங்களாகும். கடலோரப் பகுதிகளில் இறால்களை வளர்க்க விவசாயிகளை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல் குளங்கள் மற்றும் கூண்டுகளில் மற்ற மீன் இனங்களான நண்டு, பால் மீன், மடவை மற்றும் கொடுவா மீன் வளர்ப்பினை ஊக்குவிக்க அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின் வாயிலாக சிறு மற்றும் குறு விவசாயிகளை, கொடுவா, பால் மீன், சில்வர் பாம்பனோ, மடவை, கறிமீன் மற்றும் நண்டு போன்ற பல்வகைப்பட்ட இனங்களை வளர்க்க ஊக்குவித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்ட உவர்நீர் மீன் வளர்ப்பிற்கு உகந்த இடங்களை கண்டறிந்து, ஆதார வளங்களின்

வரைபடம் (Resource Mapping) தயாரிக்கும் பணியின் மூலமாக தமிழ்நாட்டு கடலோரப் பகுதிகளில் சுமார் 10,099 ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு உகந்த நிலப்பரப்பாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே, கடலோரப் பகுதிகளில் உவர்நீர் மீன்வளர்ப்பினை அதிகப்படுத்துவதன் மூலம் கடலோர மீனவக் கிராமங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட அதிகளவில் வாய்ப்புள்ளது. மேலும், நிலையான கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேலாண்மைக்கான தேசிய மையத்தின் (NCSCM) தொழில்நுட்ப ஆலோசனையுடன் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்குத் தகுதியான இடங்கள் மற்றும் கடலில் கூண்டு மீன்வளர்ப்பு மேற்கொள்வதற்கும் தகுதியான இடங்களை கண்டறிவதற்கான ஆய்வு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு இறால் ஏற்றுமதியில் மற்ற நாடுகளுடன் போட்டியிட்டு முன்னிலை பெற, தற்போது இறால்

வளர்ப்பில் தடை செய்யப்பட்டுள்ள ஆன்டிபயாடிக் மற்றும் இதர இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டை முற்றிலும் தடுக்க, விவேகமான பணிகளில் ஈடுபட வேண்டும். தமிழகத்தின் கடலோரப் பகுதிகளிலுள்ள இறால் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் இறால்களின் ஏற்றுமதித் தரத்தினை அதிகரிக்க இறால் பண்ணைகளில் ஆன்டிபயாடிக் மற்றும் இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டை தடுத்திட, மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு, தரமான இறால் உற்பத்தி செய்து இறால் ஏற்றுமதியை அதிகரித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறால் பண்ணை பதிவு செய்தல் மற்றும் பதிவு புதுப்பித்தலை எளிமையாக்க கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய விதிகள் திருத்தப்பட்டு, தற்போது மாவட்ட அளவிலான உப குழுக்கள் மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடலோரப் பகுதிகளில் உள்ள, தகுதி வாய்ந்த நிலப்பரப்பில், மீன் பண்ணைகள் அமைக்க விரும்பும்

மீன்வள தொழில் முனைவோர், தாங்கள் மேற்படி தொழிலை மேற்கொள்ளத் தேவையான அரசு சார்ந்த நடைமுறைகளை இலகுவாக்கும் வகையில் தொழில் சார்ந்த கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய (CAA) சட்டம், 2023–ல் கீழ்கண்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ஏற்கெனவே, இறால் பண்ணை பதிவை புதுப்பிக்காத இறால் பண்ணைகளின் உரிமையாளர்கள் தங்கள் இறால் பண்ணை பதிவு உரிமத்தைப் புதிப்பித்துக் கொள்ள கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இறால் பண்ணை பதிவு சான்றிதழில் மாற்றங்கள் செய்து கொள்ள விரும்பினாலோ, உரிமையாளர் பெயரை மாற்ற விரும்பினாலோ அல்லது பதிவுச் சான்றிதழ் சேதம் அடைந்தாலோ அல்லது காணாமல் போனாலோ, இறால் பண்ணை பதிவுச் சான்றிதழில் மாற்றங்களை செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளன.

- இறால் பண்ணை பதிவு மற்றும் உரிமம் பெறுவதற்கான விடயம் சார்ந்த கூட்டங்களில் விரைவான முடிவு எடுப்பதற்கு கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தினால் கூட்டப்படும் கூட்டத்திற்கான தலைவர் இல்லாத பட்சத்தில் மாற்று ஏற்பாட்டின் மூலம் அக்கூட்டத்தின் தீர்மானங்களை அங்கீகரித்து இறால் பண்ணை பதிவு மற்றும் புதுப்பித்தல் தொடர்பான நடவடிக்கைகள் உறுதிபடுத்தப்படும்.
- கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் (CAA) தன்னுடைய பணிகளை திறன்பட மேற்கொள்ள பல்வேறு உபகுழுக்களை அமைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளன.

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் (CAA) சட்ட விதிகளின்படி, தமிழ்நாட்டில் இறால் பண்ணைகள் பதிவு விவரம் இணைப்பு 1–ல் உள்ள அட்டவணை 5–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்:5 கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீன்வர்நலத் (மீன் 4–1) துறை நாள்: 29.01.2024 வாயிலாக தமிழ்நாடு அரசால் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் வனாமி இறால் வளர்க்க உரிய வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இறால் வளர்ப்பினை மேற்கொள்ள விரும்பும் புதிய தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (PMMSY) கீழ் ரூ.23.68 கோடிக்கு அரசு நிருவாக அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி நிருவாக அனுமதியின்படி செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரம் இணைப்பு 1–ல் உள்ள அட்டவணை 6–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கொடுவா மீன்வளர்ப்பினை ஊக்குவிக்கவும், கொடுவா மீன்வளர்ப்பில் ஈடுபட விரும்பும் மீன்வளத் தொழில் முனைவோருக்கு

முறையான செயல்விளக்கப் பயிற்சி அளிக்கவும் தமிழ்நாடு அரசு புதுமை முயற்சி (TANII) திட்டத்தின் கீழ் ரூ.95.42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5.7.3 கடல் உயிரின வளர்ப்பு

கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பானது, மீன் வளர்ப்பின் ஒரு பிரிவாகும். கடலோர மற்றும் அண்மைக்கடல் பகுதியில் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது குறைந்த கட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின் கீழ், நீர்வாழ் உயிரினங்களை வளர்ப்பதை உள்ளடக்கியது. அதிக வளர்ச்சித் திறன் கொண்ட மற்றும் வேகமாக வளர்ந்து வரும் கடல் உயிரின வளர்ப்பு, இலாபம் ஈட்டக்கூடிய ஒரு முக்கிய மீன்வள தொழில்நுட்பமாகும். கடலோர மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு கடற்பாசி வளர்ப்பு, கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்ப்பு போன்ற கடல் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகள் மாநிலத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடலில் கூண்டுகள் அமைத்து மீன்வளர்ப்போருக்குத் தேவையான கடல் மீன்குஞ்சுகளை வழங்குவதற்காக, இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் கடல் மீன்குஞ்சு வளர்ப்பு மையம் மாநில அரசால் நிறுவப்பட்டு, அதன் மூலம் 83,000 கடல் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.30 இலட்சம் செலவில் இரண்டு கடல் மீன்குஞ்சு நாற்றங்கால் அலகுகள் அமைக்க மயிலாடுதுறை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களைச் சார்ந்த பயனாளிகளுக்கு மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.

### 5.7.4 கடற்பாசி வளர்ப்பு

கடற்பாசி வளர்ப்பானது எளிமையான தொழில்நுட்பத்தின் அடிப்படையில், குறைந்த பராமரிப்பு கால அளவு மற்றும் முதலீட்டில் குறிப்பிடத்தக்க இலாபம் ஈட்டக்கூடிய தொழில் ஆகும். கடற்பாசி வளர்ப்பானது கடலோர மீனவ கிராமப்புற பகுதிகளின்

பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியப்பங்காற்றி வருகிறது. தமிழ்நாட்டின் கடற்கரையோரங்களில் வாழும் சிறு அளவிலான குடும்பங்கள் மற்றும் மீனவச் சமூகம் சார்ந்த மகளிர் குழுக்கள் கடற்பாசி வளர்ப்பு தொழிலை மேற்கொள்ள அதிகளவு சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்தியாவிலேயே கடற்பாசி வளர்ப்பில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. கடற்பாசி வளர்ப்பை மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார நடவடிக்கையாக ஊக்குவிப்பதற்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

கடலோர மீனவக் கிராமங்களில் வசிக்கும் மீனவ மகளிரின் சமூக அதிகாரத்தை உறுதி செய்வதில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் கடற்பாசி வளர்ப்பு திட்டம், முக்கியப் பங்கு வகிக்கிறது. கடற்பாசி வளர்ப்பிற்கு, 2,508 மீனவ மகளிருக்கு ரூ. 3.02 கோடி செலவில் கடற்பாசி வளர்ப்பிற்காக 15,795 மிதவைகள் மற்றும் 2,580 கயிறுகள் வழங்கப்பட்டுள்ளன.

**5.7.4.1 பல்நோக்கு கடற்பாசி பூங்கா நிறுவுதல்.**

தமிழ்நாட்டில், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், பல்நோக்கு கடற்பாசி பூங்கா நிறுவிட ரூ.127.71 கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியை இரண்டு கட்டங்களாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம், (i) HUB I : இராமநாதபுரம் மாவட்டம் வளமாவூரில் கடற்பாசி உற்பத்தி பூங்கா, (ii) HUB II: புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டையில் கடற்பாசி பதப்படுத்தும் பூங்கா, (iii) Spoke level–I மற்றும் Spoke level–II என 60 கிராமங்களில் கடற்பாசி வளர்ப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளுடன் வகைப்படுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்டு முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது, கடற்பாசி வளர்ப்பு (Hub–I) மற்றும் கடற்பாசியிலிருந்து மதிப்புக்கூட்டிய

பொருட்கள் உற்பத்தி மையத்திற்கான (Hub–II) ஆரம்பக் கட்ட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் 5,048 ஹெக்டேர் பரப்பு கடற்பாசி வளர்ப்பிற்கு உகந்ததாக கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தற்போதைய கடற்பாசி தேவை, சுமார் 1,15,150 மெட்ரிக் டன்களாக இருப்பினும், மாநிலத்தின் தற்போதைய உற்பத்தி, 21,982 மெட்ரிக் டன்களாக மட்டுமே உள்ளது. இந்த முதன்மை திட்டத்தின் மூலம், இரண்டு நவீன தொழில்நுட்ப மையங்கள் ஏற்படுத்தப்படும். இந்நவீன தொழில் நுட்ப மையங்களில், உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடற்பாசியிலிருந்து மதிப்புக்கூட்டிய பொருட்கள் உற்பத்தி செய்தல் போன்ற தொழில்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். பல்நோக்கு கடற்பாசி பூங்கா திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம், கடற்பாசி உற்பத்தி மற்றும் கடற்பாசியிலிருந்து

மதிப்புக்கூட்டிய பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களைப் புகுத்தி, அதிக அளவில் கடற்பாசி உற்பத்தி செய்வதுடன், கடற்பாசியிலிருந்து தரம் உயர்ந்த மதிப்புக்கூட்டிய பொருட்கள் உற்பத்தி செய்வது உறுதி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம், குறிப்பாக, தென் தமிழக கடலோர மாவட்டங்களைச் சார்ந்த மீனவ மக்களுக்கு சுய தொழில் வேலை வாய்ப்புகளை அதிகரித்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

கடற்பாசி தொழில் தொடர்பான அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைத்து முழுமையான கடற்பாசி தொழில்துறை முன்னேற்றத்தினை மேற்கொள்ள தமிழக அரசு முனைப்புடன் நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளினால் கடற்பாசி தொழில்துறைக்கு வழுங்கப்படும் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, கடற்பாசி தொழில்துறையின் வளர்ச்சிக்கு, தனித்துவமான நவீன உட்கட்டமைப்புகளைக்

கொண்ட சர்வதேச தரம் வாய்ந்த கடற்பாசி தொழில் மையங்களை உருவாக்கி அதன் மூலம் கடற்பாசி உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் தொழில் முனைவோரை கடற்பாசி தொழில் துறையில் ஈடுபடுத்துவதற்கான ஒரு ஒருங்கிணைந்த மையமாக தமிழ்நாட்டை உருவாக்கிட அனைத்து முயற்சிகளையும், தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

### 5.7.5 கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன்வளர்ப்பு

கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன்வளர்ப்பதன் வாயிலாக விலை மதிப்புமிக்க மீன்களின் உற்பத்தியினை அதிகரிக்கலாம். கடல் விரால் (Cobia), கொடுவா (Sea bass), கலவா (Grouper), பாம்பனோ பாறை (Silver pompano) மற்றும் சிங்கி இறால் (Lobster) போன்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன்களை கூண்டுகளில் வளர்த்திட இயலும். பல்வேறு அரசு திட்டங்களின் மூலம் 409 மிதவைக் கூண்டுகள் ரூ.17.81 கோடி செலவில் கடலோர மீனவர்களுக்கு

வழங்கப்பட்டுள்ளன. கடலோர மீனவர்களுக்கு 2023-24 ஆம் ஆண்டில், ரூ.0.85 கோடி செலவில் 17 மிதவைக் கூண்டுகள் வழங்கிட அரசிடமிருந்து நிருவாக ஒப்புதல் பெறப்பட்டதன் அடிப்படையில், மேற்படி மிதவைக் கூண்டுகளை கடலோர மீனவர்களுக்கு வழங்கி அண்மை கடற்பகுதியில் மிதவை கூண்டில் மீன்வளர்ப்பினை மேற்கொண்டு மீன் உற்பத்தியினை பெருக்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6. உள்நாட்டு மீன்வள மேம்பாடு

தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன்வளமானது, மீன்வளர்ப்போரின் வாழ்வாதாரத்தினை பெருக்கிட ஏதுவான ஒரு முக்கிய ஆதாரமாகும், உள்நாட்டு மீன்வளம் மாநிலத்தின் உணவு உற்பத்தியில் மிக முக்கிய அம்சமாக செயல்பட்டு வருவதோடு, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி, உணவுப் பாதுகாப்பினையும் உறுதி செய்கிறது. தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியினை அதிகரிக்கவும், உணவுப்

பாதுகாப்பினை உறுதி செய்திடவும், வேலை வாய்ப்பினை பெருக்கிடவும் உள்நாட்டு மீன் உற்பத்தியானது முக்கியப் பங்காற்றுகிறது. மாநிலத்தின் மீன்பிடிப்பு மற்றும் வளர்ப்பிற்கான உள்நாட்டு நீர்வள ஆதாரங்களாக நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய நீர்ப்பாசன குளங்கள் மற்றும் குட்டைகள் விளங்குகின்றன.

உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு :

1. மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்து மீன்குஞ்சு தேவையினை பூர்த்தி செய்தல்.
2. தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து மீன்வளர்ப்போருக்கு வழங்குதல்.
3. உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை முறையாக பயன்படுத்துதல்.
4. மீன்வளர்ப்புப் பண்ணைகளை அதிகரித்தல்.

5. மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்து அதன் மூலம் மீன்வளர்ப்போரின் வருவாயினை அதிகரித்தல்.

6. புதிய தொழில் நுட்பத்தின் மூலம் மீன்வளர்ப்பு மற்றும் உள்நாட்டு மீன்உற்பத்தியினை அதிகரித்தல்.

7. அனைத்து நீர்நிலைகளிலும் அறிவியல் பூர்வமாக மீன்குஞ்சுகள் இருப்பு செய்து மீன்வளர்ப்பு மேற்கொண்டு, உணவு பாதுகாப்பினை உறுதி செய்தல்.

8. உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை பராமரித்தல், மீன்வள ஆதாரங்களை பெருக்குதல் மற்றும் அயல்நாட்டு மீன்இனங்கள் ஊடுருவுவதை கண்காணித்தல் மற்றும் தடை செய்தல்.

9. ஊரகப் பகுதி மக்களுக்கு நவீன மீன்வளர்ப்பு முறைகளை அறிமுகம் செய்து, சுய வேலைவாய்ப்பினை உருவாக்குதல் மற்றும்

சுகாதாரமான மீன் விற்பனை வசதிகளை ஏற்படுத்துதல்.

10. புரதம் மிகுந்த மீன் உணவினை வழங்குதல் மற்றும் தரமான மீன் உணவு பொது மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்தல்.

## 6.1 உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடிப்பு முறை

தமிழ்நாட்டில் 90 நீர்த்தேக்கங்கள் நீர்வளத்துறையால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1972ஆம் ஆண்டு முதல், 62 நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மைக்காக 54 நீர்த்தேக்கங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் 8 நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவ்விவரங்கள் இணைப்பு–I ல் உள்ள அட்டவணை 7–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கங்கள் மற்றம் ஏரிகளில் மீன்வள மேலாண்மையின் முக்கிய நோக்கமானது சரியான முறையில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல்,

மீன்வளங்களை பாதுகாத்தல், சரியான அளவில் மீன்களை பிடித்தல் ஆகியவற்றின் மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியினை மேம்படுத்துவதோடு மலிவான விலையில் புரதச்சத்து நிறைந்த உணவினை சரியான விலையில் மக்களுக்கு கிடைக்கிறது. இதனால் உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படும். 1977–ல் இருந்து 2012 வரை மீன்வளத்துறையின் மூலம் கீழ்க்கண்ட முறைகளில் நீர்த்தேக்கங்கள் குத்தகைக்கு விடப்படுகின்றன.

1) மீன்பிடி உரிமம் வழங்கும் முறை – வருடாந்திர மீன்பிடி உரிமம் கீழ்கண்ட நான்கு நீர்த்தேக்கங்களிலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு வழங்கப்படுகிறது. 1.மேட்டூர் அணை– சேலம் மாவட்டம், 2.கொளவாய் ஏரி– செங்கல்பட்டு மாவட்டம், 3.பூண்டி நீர்த்தேக்கம்– திருவள்ளூர் மாவட்டம் மற்றும் 4.வீராணம் ஏரி– கடலூர் மாவட்டம்.

2) பங்கு மீன்பிடிப்பு முறை – இருப்பு செய்யப்பட்ட மீன்களின் மீன்பிடிப்பில் மூன்றில் ஒரு பகுதி பங்கு மீனவர்களுக்கும், மூன்றில் இரண்டு பகுதி அரசிற்கு வழங்கப்படுகிறது. இருப்பு செய்யப்படாத மீன்களின் மீன்பிடிப்பில் 50 விழுக்காடு அரசிற்கும் 50 விழுக்காடு பங்கு மீனவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

3) மீன்பிடிக் குத்தகை முறை– அரசாணையின்படி, மீன்பிடிக் குத்தகை முறையானது மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையினால் மேற்கொள்ளப்படுகிறது.

நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டில் 14,306 பாசனக் குளங்கள் உள்ளன. அதில் இணைப்பு 1–ல் காணும் அட்டவணை 8–ல் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, 636 பாசனக் குளங்களில் மீன்வள மேலாண்மைக்காக மீன்வளத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு மற்றும் விற்பனை திட்டத்தின் கீழ் மீன்வளர்ப்பினை மேற்கொள்ள 486 தீவிர மீன்வளர்ப்பு குளங்கள் அரசாணை எண்.1286, வனம் மற்றும் மீன்வளத்துறை (மீன்4), நாள். 09.11.1984 மூலம் மதுரை, தேனி, கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 5 மாவட்டங்களிலுள்ள மீன்வளர்ப்பு குளங்கள் மீன்வளத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நீர்நிலைகளில் மீன்வளத்தை மேம்படுத்துவதற்காக மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையானது மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் உள்நாட்டு மீன்வளர்ப்பு உற்பத்தியை விரிவுபடுத்துவதற்காகவும், உள்நாட்டு மீன்வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காகவும் மாவட்ட ஆட்சியர் மூலம் சில மீன்வளர்ப்பு குளங்கள் மீன்வளத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மீன்வள

மேலாண்மைக்காக 106 பாசன குளங்கள், திண்டுக்கல் மாவட்டத்தில் 22 குளங்கள், 21 கிராமப்புற மாதிரி செயல்விளக்க குளங்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 1 கடம்பாகுளம் ஆகியவற்றின் மீன்வள மேலாண்மை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6.2 உள்நாட்டு மீன்வளத்தில் மேற்கொள்ளப்படும் சிறப்பு முயற்சிகள்

உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் பெரும்பாலும் பருவமழையைச் சார்ந்து உள்ளன. குறைந்த மழை அளவு, மீன்களின் இனப்பெருக்க காலத்திற்கும், பருவமழை காலத்திற்கும் உள்ள வேறுபாடுகளால் மீன்குஞ்சு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மேலும், நீர்நிலைகளில் குறைவான கால அளவே நீர் நிறைந்திருத்தல், குறைந்த செலவில் மீன்தீவனம் கிடைக்கப் பெறாமை ஆகியவை உள்நாட்டு மீன் உற்பத்தியினை பாதிக்கும் காரணிகளாகும்.

மேற்கண்ட சவால்களை எதிர்கொண்டு உள்நாட்டு மீன் உற்பத்தியினை பெருக்கிட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை பின்வரும் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

1) நீர்த்தேக்கங்கள் மற்றும் பாசனக் குளங்களில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்த்தல் மூலம் தரமான மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்தல்.

2) பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள மீன்வளர்ப்பிற்குத் தகுதியான நீர்நிலைகளில் அறிவியல் பூர்வமாக மீன்குஞ்சுகள் இருப்பு செய்து உள்நாட்டு மீன்உற்பத்தியினை அதிகரித்தல்.

3) தீவிர முறை மீன் வளர்ப்பு தொழில்நுட்பத்தினை பரவலாக்கிட மானியம் வழங்குதல் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கி மீன்

உற்பத்தியினை பெருக்குவதன் மூலம் மீன்வளர்ப்போரின் வருவாயினை பெருக்குதல்.

4) சுற்றுச்சூழலுக்கு உகந்த மீன்வளர்ப்பு முறைகளை பிரபலப்படுத்தி, விவசாயம், தோட்டக்கலை மற்றும் கால்நடை வளர்ப்புடன் மீன்வளர்ப்பினையும் ஒருங்கிணைத்து விவசாயிகளுக்கு கூடுதல் வருவாயினை பெருக்குதல்.

5) குறுகிய காலத்தில் வேகமாக வளரும் மீன்வளர்ப்பு முறைகளுக்கு உகந்த மீன் இனங்களான அமூர் கெண்டை, ஜெயந்தி ரோகு மற்றும் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்வளர்ப்பு முறைகளை ஊக்குவித்தல்.

6) கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும்பொருட்டு ஊரகப் பகுதிகளில் மீன்வளர்ப்பு மற்றும் மீன்குஞ்சு வளர்ப்பு முறையினை ஊக்குவித்தல்.

7) தஞ்சாவூர் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள அரசு மீன் உணவு உற்பத்தி ஆலை மூலம் தரமான மீன் உணவு அரசு மற்றும் தனியார் மீன்பண்ணைகளுக்கு விநியோகித்தல்.

8) அரசு மீன் பண்ணைகளில் தரமான மீன்குஞ்சு உற்பத்தியினை உறுதி செய்திட மேட்டூர் மற்றும் பவானிசாகர் அரசு மீன் பண்ணைகளில் தூய மரபின சினைமீன் வளர்த்தெடுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

9) உயிர்க்கூழ்ம முறை (Bio–floc) தொழில்நுட்பத்தின் மூலம் தீவிர மீன்வளர்ப்பு முறையில் மீன் உற்பத்தித்திறனை அதிகரித்து, நிலையான மீன்வளர்ப்பு முறைகள் மூலம் மீன்வளர்ப்போர் அதிக இலாபம் ஈட்டிட ஊக்குவிக்கப்படுகிறது.

10) நீர் மறுசுழற்சி முறை மீன்வளர்ப்பு தொழில்நுட்பத்தின் மூலம் குறைந்த அளவு நீரினை பயன்படுத்தி தீவிர மீன்வளர்ப்பு

மேற்கொள்ள மீன்வளர்ப்போருக்கு மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

### 6.3 மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை

மீன்வளர்ப்பினை பரவலாக்கிடவும், ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும், தமிழ்நாட்டில் சென்னையை தவிர்த்து 37 மாவட்டங்களில் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் ஏற்படுத்தப்பட்டு திறம்பட செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்ட மீன்வளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சியளித்தல், மீன்வளர்ப்பிற்குத் தேவையான மானியங்களை அளித்து மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல், தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் விரிவாக்க உதவி அளித்தல் போன்ற முக்கியப் பணிகளை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மேற்கொண்டு வருகின்றன.

மாவட்டத்திலுள்ள மீன்குஞ்சு பொரிப்பகங்கள், மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் மற்றும் மீன்பண்ணைகளை பதிவு செய்து, முறைப்படுத்தி பல்வேறு அரசு திட்டங்களின் மூலம் மீன்வளர்போருக்கு மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

## 6.4 நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை

தமிழ்நாட்டிலுள்ள 62 நீர்த்தேக்கங்களின் மீன்வள மேலாண்மை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ளன. அவற்றில் உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிட 54 நீர்த்தேக்கங்களின் மீன்வள உரிமை தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கட்டுப்பாட்டிலும், 8 நீர்த்தேக்கங்களின் மீன்வள உரிமை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. மேற்படி 62 நீர்தேக்கங்களில் நவீன தொழில்நுட்பத்தின் மூலம் மீன்வள மேலாண்மை மேற்கொள்ளப்பட்டு,

மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1) நீர்த்தேக்கங்களில் மீன்உற்பத்தியினை பெருக்குதல், நீர்த்தேக்கங்களை தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மீனவர்களின் வருவாயை அதிகரித்தல் மற்றும் நீர்த்தேக்கங்களில் மிதவைகூடுகள் அமைத்து அதன் மூலம் மீன் உற்பத்தியினை அதிகரித்தல் ஆகியன நீர்த்தேக்க மீன்வள மேலாண்மையின் முக்கிய நோக்கங்களாகும்.

2) நீர்த்தேக்கங்களின் மீன் உற்பத்தியினை அதிகரித்திட ஏதுவாக அரசு மீன்பண்ணைகளில் தரமான மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுகிறது.

3) மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை பொது ஏல ஒப்பந்த புள்ளி அடிப்படையில்

மீன்வளர்ப்போருக்கு குத்தகைக்கு விடுதல், மீன்பிடி உரிமம் வழங்குதல் மற்றும் பங்கு மீன்பிடிப்பு முறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4) 2023–24 ஆம் ஆண்டில் 33 நீர்த்தேக்கங்களின் மீன்பாசி குத்தகை மீன்வளர்ப்போருக்கு வழங்கப்பட்டு, மீன்பாசி குத்தகையின் மூலம் ரூ.9.39 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

5) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சிறப்பு முயற்சியாக மீன்வளர்ப்பிற்கு உகந்த இதர நீர்தேக்கங்களிலும் மீன்வள மேலாண்மையினை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.5 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்

தமிழ்நாட்டில் 14 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் சிறப்பாக செயல்பட்டு

வருகின்றன. அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் மீன்குஞ்சு உற்பத்தி விவரம் (2023–24) இணைப்பு–I ல் காணும் அட்டவணை–9ல் கொடுக்கப்பட்டுள்ளது

அரசு மீன்பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை திறம்பட மேம்படுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 2023–24 ஆம் ஆண்டில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் மூலம் 66.06 கோடி நுண் மீன்குஞ்சுகள் (Early fry) உற்பத்தி செய்யப்பட்டு மீன்வளர்ப்போருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்திட தனியார் பண்ணையாளர்களை ஊக்குவித்து மானிய உதவிகளையும் வழங்கி வருகிறது.

மீன்வளர்ப்போரின் வருவாயினை பெருக்கும் வகையில் குறுகிய காலத்தில் வேகமாக வளரக்கூடிய ஆண்டொண்றிற்கு 25 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி திறனுள்ள மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா (GIF Tilapia) மீன்குஞ்சு பொரிப்பகங்கள் தமிழ்நாட்டில் முதன்முறையாக கிருஷ்ணகிரி அரசு மீன்பண்ணையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஆண்டொண்றிற்கு 10 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி திறனுடன் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா பொரிப்பகம் தேனி மாவட்டம் மஞ்சளாறு அணை அரசு மீன்பண்ணையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வேகமாக வளரும் திலேப்பியா மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களிலுள்ள மீன்வளர்போருக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

### 6.6 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் 46 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் மீன்வளம் மற்றும் மீனவர்

நலத்துறையின் மூலமும், 5 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலமும் செயல்பட்டு வருகின்றன. 2023–24ஆம் ஆண்டில் மொத்தம் 8.55 கோடி தரமான மீன் விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. வளர்த்தெடுக்கப்பட்ட மீன் விரலிகள் நீர்த்தேக்கங்களிலும், பாசன குளங்களிலும் மற்றும் தனியார் மீன்பண்ணைகளிலும் இருப்பு செய்யப்படுவதன் மூலம் மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தி கனிசமாக அதிகரித்துள்ளது. அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் விபரம் இணைப்பு 1–ல் காணும் அட்டவணை 10–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, மீன்பண்ணையாளர்களை ஊக்குவித்து, தனியார் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்கள் அமைத்திட மானிய உதவிகளை வழங்கி வருகிறது. வடகிழக்கு பருவமழையில் நீர் கிடைக்கப்பெறும் பாசன குளங்களுக்கு தேவையான மீன் விரலிகள் கிடைத்திட ஏதுவாக மிதவைக்

கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு முறைகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.7 நாட்டின மீன்வளத்தினை பாதுகாத்தல்

மாநிலத்தின் நாட்டின மீன்வகைகளை பாதுகாத்திட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நாட்டின மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து, நீர்நிலைகளில் இருப்பு செய்வதன் மூலம் நாட்டின மீன்வளத்தினை பெருக்கி பாதுகாத்திட சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மாநிலத்தின் நாட்டின மீன் இனங்களின் தேவை அதிகமாக உள்ளது. மருத்துவ குணங்கள் நிறைந்த நாட்டின மீன்கள் சுவையிற்சிறந்ததாகவும் விளங்குகின்றன. எனவே, உள்ளூர் மக்களாலும் அதிகம் விரும்பப்படுகின்றன. நாட்டின மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு முறைக்கு முக்கியத்துவம் அளிப்பது வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு உணவு பாதுகாப்பு அளிப்பதற்கான முக்கிய தீர்வாகக் கருதப்படுகிறது.

நாட்டின மீன்களின் பெருகிவரும் தேவையினை கருத்திற்கொண்டு கரிமீன் (*Etroplus suratensis*), கல்பாசு (*Labeo calbasu*) மற்றும் சேல்கெண்டை (*Labeo fimbriatus*) போன்ற நாட்டின மீன் வகைகளை உற்பத்தி செய்து, புரதம் நிறைந்த மீன் உணவினை ஊரக பகுதிகளில் வழங்கிடஇயலும். இதற்கென சேலம், தஞ்சாவூர் மற்றும் கடலூர் ஆகிய 3 மாவட்டங்களில் ரூ.4.40 கோடி மதிப்பில் நாட்டின மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளை நிறுவிட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதனை செயல்படுத்திட கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை அரசு மீன்பண்ணையில் ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் கரிமீன்குஞ்சு பொரிப்பகம், தஞ்சாவூர் மாவட்டம், அகரப்பேட்டை அரசு மீன்பண்ணையில் ரூ.1.64 கோடி மதிப்பீட்டில் கல்பாசு கெண்டைமீன்குஞ்சு பொரிப்பகம் மற்றும் சேலம் மாவட்டம், மேட்டூர் அரசு மீன்பண்ணையில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் சேல் கெண்டை மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்திடும் பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளது. நாட்டின மீன்குஞ்சு

பொரிப்பகங்கள் அமைக்கப்பட்டவுடன் உள்நாட்டு மீனவர்களுக்கு நாட்டின மீன்வளத்தினை பாதுகாப்பது தொடர்பான உரிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் வழங்கப்படும். மேலும், நாட்டின மீன்குஞ்சு பொரிப்பகங்களில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள், நாட்டின மீன் வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு மீன்வளர்ப்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, மாநிலம் முழுவதும் சுவையான நாட்டின மீன்கள் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது மீன்வளர்ப்பு விவசாயிகளுக்கு நல்ல இலாபம் ஈட்டித் தரும் என்பது திண்ணமாகும்.

### 6.8 ஆறுகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல்

மாநிலத்திலுள்ள ஆறுகளில் நாட்டின மீன்குஞ்சுகள் மற்றும் இந்திய பெருங்கெண்டை இனங்களை இருப்புச் செய்வதன் மூலம் தமிழ்நாட்டின் நாட்டின மீன் வளம் மற்றும் இந்திய பெருங்கெண்டை உற்பத்தியினை பெருக்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்

மூலம் நீர்நிலைகளை சார்ந்து வாழும் உள்நாட்டு மீனவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தினை மேம்படுத்திடலாம். தமிழ்நாட்டில் ஆறுகளில் நன்னீர் மீன்குஞ்சுகளை இருப்பு செய்திடும் திட்டம் 2021-22 & 2022-23 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.1.24 கோடி மற்றும் ரூ.1.20 கோடியில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் கீழ் 80 இலட்சம் நன்கு வளர்ந்த விரலிகள் காவேரி, பவானி மற்றும் தாமிரபரணி ஆகிய ஆறுகளிலும், அதன் கிளை ஆறுகளிலும் இருப்பு செய்யப்பட்டுள்ளன. ஆறுகளில் நாட்டின மீன்குஞ்சுகளை இருப்பு செய்திடும் திட்டத்தின் கீழ் நாட்டின மீன்குஞ்சு பொரிப்பகங்களில் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, மீன்விரலிகளாக வளர்த்தெடுக்கப்பட்டு ஆறுகளில் இருப்பு செய்யப்பட்டு அதன்மூலம் மீன் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 6.9 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2021-22)

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2021-22ன் கீழ் உள்நாட்டு மீன்வளம் தொடர்புடைய திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு ஒப்புதல் வழங்கியுள்ளது. திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. இவ்விவரங்கள் இணைப்பு I-ல் காணும் அட்டவணை 11-ல் வழங்கப்பட்டுள்ளது.

## 6.10. பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2022-23)

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2022-23ன் கீழ் உள்நாட்டு மீன்வளம் தொடர்புடைய திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது. திட்டப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. இவ்விவரங்கள் இணைப்பு-I ல் காணும் அட்டவணை-12 ல் வழங்கப்பட்டுள்ளது.

## 6.11 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2023-24)

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத்திட்டம் 2023-24ன் கீழ் உள்நாட்டு மீன்வளம் தொடர்புடைய திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இவ்விவரங்கள் இணைப்பு-I ல் காணும் அட்டவணை-13 ல் வழங்கப்பட்டுள்ளது.

## 6.12 மாநில நிதி 2022-23-ன் கீழ் பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பினை ஊக்குவித்திட உள்ளீட்டு மானியம் வழங்குதல்

பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பினை ஊக்குவித்திட மீன்வளர்ப்போருக்கு உள்ளீட்டு மானியம் வழங்கிடும் திட்டத்தினை அரசு ரூ.1 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 550 பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பினை மேற்கொள்ள மீன்வளர்ப்பிற்கான உள்ளீட்டு பொருட்களான மீன்குஞ்சு, தீவனம் மற்றும் உரங்கள்

மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருவாய் கணிசமாக அதிகரிப்பதோடு, மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியும் அதிகரித்திடும்.

## 6.13. மாநில நிதியின் 2023-24 கீழ் உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி வலை மற்றும் பரிசல்களுக்கான மானிய உதவி

உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடி திறனை அதிகரிக்க, "உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.1.01 கோடியில் மானியம் வழங்கி அரசு இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. உள்நாட்டு மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கு வலைகள் மற்றும் பரிசல்கள் போன்ற மீன்பிடி உபகரணங்கள் வாங்குவதற்கு மானிய உதவி வழங்கப்படுகிறது. மொத்தம் 700 மீன்பிடி வலைகளுக்கான மானியம் உள்நாட்டு மீனவர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், 300 பரிசல்களுக்கான மானியம் வழங்கப்பட்டு

வருகிறது. இது உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடி திறனை மேம்படுத்துவதோடு, மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியையும் அதிகரிக்கும். இத்திட்டம் முடியும் தருவாயில் உள்ளது.

**6.14 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்**

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் 66 உபவடிநில பகுதிகளில். 2018–19 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நீண்ட கால மற்றும் குறுகிய கால பாசன நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல், பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பு மற்றும் மண்ணிலான மீன்குஞ்சு மற்றும் மீன்வளர்ப்பு பண்ணை அமைத்தல் ஆகிய முக்கியமான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், விரைவாக வளரும் மீன் இனங்கள் மற்றும் அதிக மதிப்புள்ள மீன் இனங்களை வளர்க்கும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் மீன்வளர்ப்போரின்

வருமானம் இரட்டிப்பாகிறது. இத்திட்டத்தின் கீழ் பல்வேறு கட்டங்களாக உள்நாட்டு மீன்வளத் திட்டங்களை திறம்பட செயல்படுத்திட, தமிழ்நாடு அரசு ரூ.39.50 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2018–19 முதல் 2023–24 வரை ரூ.35.42 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு, பயனாளிகளுக்கு தரமான மீன்குஞ்சுகளை வழங்குவதற்காக பவானிசாகர் மற்றும் மேட்டூர் அணை அரசு மீன்பண்ணைகளில் நல்விதை தேர்வு சினைமீன் உற்பத்தி மற்றும் பராமரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் மீன்குஞ்சு உற்பத்தியை மேம்படுத்த மஞ்சளாறு அணையில் வேகமாக வளரக்கூடிய கிப்ட் திலேப்பியா பொரிப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம், லால்பேட்டை அரசு மீன் பண்ணையில் விரால் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்தல் மற்றும் கடலூர் மாவட்டத்தில் லால்பேட்டை, அகரம் ஆகிய அரசு மீன்பண்ணைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.

மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 27,139 ஹெக்டேர் பாசன நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டன. மேலும், 1,258 பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பு மேற்கொள்ள இடுப்பொருள் மானியம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க, 88 மண்ணிலான மீன்குஞ்சு மற்றும் மீன்வளர்ப்பு பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர, 100 அலகு கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் 15 அலகு மிதவைக்கூடுகளில் மீன்வளர்ப்பு திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடி திறனை அதிகரிக்க 515 எண்ணம் மீன்பிடி வலைகள்/ பரிசல்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 2024–25ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள பணிகளின் விவரம் இணைப்பு–Iல் காணும் அட்டவணை–14ல் தரப்பட்டுள்ளது.

### 6.15 வண்ணமீன் வளர்ப்பு

தமிழ்நாடு, வண்ணமீன் ஏற்றுமதியில் நாட்டில் இரண்டாவது மாநிலமாக திகழ்கிறது. வண்ணமீன் உற்பத்தியை அதிகரித்திடவும், அதன் வாயிலாக வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும் ரூ.4.70 கோடி திட்ட மதிப்பீட்டில், முன்னோடி திட்டமாக வண்ணமீன் வளர்ப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனில், ஒன்றிய அரசின் பங்கு ரூ.1.5 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.0.75 கோடி என மொத்தம் ரூ.2.25 கோடி மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டமானது கொல்லைப்புற வண்ணமீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ணமீன் வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த வண்ணமீன் வளர்ப்பு பண்ணைகள் புதிதாக அமைத்தல்/ புனரமைத்தல், நீர்த்தாவரம் வளர்த்தல் மற்றும் வண்ணமீன் வளர்ப்பு உபகரணங்களுக்கான விற்பனை நிலையம் அமைத்தல், வண்ணமீன் வளர்ப்பு தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் பள்ளி, கல்லூரி

மாணவர்களிடையே வண்ணமீன் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட ஏதுவாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் வண்ணமீன் தொட்டிகள் காட்சிப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மேலும், ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப்பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொல்லைப்புற வண்ணமீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ணமீன் வளர்ப்பு, ஒருங்கிணைந்த வண்ண மீன்வளர்ப்பு மேற்கொள்ள ரூ.13.85 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, வண்ணமீன் வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநிலத்தின் வண்ணமீன் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தினை அதிகரிக்கும் நோக்கில், சென்னை, கொளத்தூர் பகுதியில் ரூ.50 கோடி செலவில் வண்ணமீன் வர்த்தக மையம் அமைக்கப்படும் என அரசு அறிவித்தது. இத்திட்டத்திற்காக, அமைந்தகரை தாலுக்கா, வில்லிவாக்கம், அருள்மிகு அகத்தீஸ்வரர்

திருக்கோயிலுக்குரிய 3.94 ஏக்கர் இடம் மற்றும் அயனாவரம் தாலுகா, பெரவளூர் கிராமம், அருள்மிகு செல்லியம்மன் கோவிலுக்குச் சொந்தமான 4,785 சதுரஅடி இடம் ஆகியவை முறையே வண்ணமீன் வர்த்தக மையம் மற்றும் நிர்வாக அலுவலகம் அமைத்திட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை தொழில்நுட்ப உதவியுடன் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் செயல்படுத்தப்படும்.

**7. மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

மீன் இறங்கும் பகுதிகளை மேம்படுத்தி, மீன் இறங்குதளங்கள் அமைத்தல், மீன் இறங்குதளங்களை தரம் உயர்த்தி, புதிய மீன்பிடி துறைமுகங்களை உலகளாவிய தரத்திற்கு உருவாக்குதல் மற்றும் மீன்பிடி துறைமுகங்களை தரம் உயர்த்துதல் ஆகிய மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, அரசு பல்வேறு நிதி ஆதாரங்களின் உதவி பெற்று, அதிக

அளவிலான நிதியினை முதலீடு செய்து வருகிறது. இதன் மூலம் மீனவர்கள் மற்றும் அவர்களது உடமைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதுடன், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதன் மூலம், ஏற்றுமதி வாய்ப்பு அதிகரித்து மீனவர்கள் அதிக வருவாய் ஈட்டிடவும் உதவுகிறது. மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்படுவதால் மீனவர்களுக்கும், பொதுமக்களுக்கும், நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெறுவதுடன், அவர்களின் வாழ்வாதாரமும் மேம்படும்.

இந்த உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதற்கான நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு), மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் மற்றும் மாநில நிதி போன்ற பல்வேறு ஆதாரங்களில் இருந்து பெறப்படுகின்றன. 2024-25 ஆம் ஆண்டில், மீன்வள

உட்கட்டமைப்பு பணிகளுக்காக நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் ரூ.300 கோடி மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) நிதியின் கீழ் ரூ.305.27 கோடியும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**7.1 மீன்பிடி துறைமுகங்கள் மேம்பாடு**

மீன்பிடி துறைமுகமானது மீன்களைப் பிடித்தது முதல் அதன் நுகர்வு வரையில் சுகாதாரமாக கையாளுவதற்கான வசதிகளைக் கொண்டுள்ளது. பொதுவாக, மீன்பிடி துறைமுகங்கள் மீன் இறங்கு தளங்களை விட அதிக எண்ணிக்கையிலான மீன்பிடி படகுகளை நிறுத்துவதற்கு உருவாக்கப்படுகின்றன, இது அதிக எண்ணிக்கையிலான மீனவர்கள் ஒரே இடத்திலிருந்து சென்று மீன்பிடி தொழிலில் ஈடுபட உதவுகிறது.

மீனவர்கள் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்த, உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தையின் மீன் தேவைகளைப் பூர்த்தி செய்யும்

வகையில். மீன்பிடி துறைமுகங்களை நிறுவுவது அவசியம் ஆகும். மீன்பிடி துறைமுகங்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும், பதப்படுத்துவதற்கும் மற்றும் எளிதில் நுகர்வோருக்கு கொண்டு செல்வதற்கும் தேவையான வசதிகள் கொண்டு வடிவமைக்கப்படுகின்றன.

மீன்பிடி துறைமுகத்தில் மீன்ஏலக் கூடங்கள், பனிக்கட்டி உற்பத்தி நிலையம், மீன் பதப்படுத்தும் ஆலைகள், வலை பின்னும் கூடம், படகு அணையும் தளம் மற்றும் பழுதுபார்க்கும் தளம், மீன்வள நிர்வாக அலுவலகம், மீனவர் ஓய்வு அறைகள், தங்கும் விடுதிகள், உணவகங்கள், எரிபொருள் நிரப்பும் நிலையம், வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது கழிப்பறைகள், அணுகு சாலை மற்றும் உட்புற சாலைகள், குடிநீர் வழங்கல், வடிகால் மற்றும் கழிவுநீர், மின்சாரம் மற்றும் விளக்குகள், தொலைத்தொடர்பு நிலையம் போன்ற வசதிகளைக் கொண்டிருக்கும்.

மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்துதல் மற்றும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு இணைப்பு I ல் காணும் அட்டவணை 15ல் கொடுக்கப்பட்டுள்ள மீன்பிடி துறைமுகப் பணிகளுக்கு நிருவாக அனுமதி அளித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 7.2 மீன் இறங்கு தளங்கள்

மீன் இறங்கு தளங்கள் சிறிய அளவிலான இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு தேவையான குறைந்தபட்ச அடிப்படை இறங்குதள வசதிகள் மற்றும் பழுதுபார்க்கும் வசதிகளுடன் அமைக்கப்படுகின்றன. மீன் இறங்கு தளங்களில் 10 மீட்டருக்கும் குறைவான நீளம் கொண்ட 100 மீன்பிடி படகுகளை நிறுத்தலாம்.

பொதுவாக, மீன்பிடி படகுகளை நிறுத்துவதற்கும், எளிதாக செலுத்துவதற்கும், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும், மீனவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டு அமைக்கப்படுகின்றன.

இவை மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், படகு அணையும் சுவர், ஜெட்டிகள், மீன் உலர்த்தும் தளங்கள், சாலை வசதிகள், நீர் வழங்கல் வசதிகள், கழிப்பறை, விளக்குகள் போன்ற வசதிகளைக் கொண்டு மீன்பிடி இறங்கு தளங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

தமிழக கடற்கரையில் 83 மீன் இறங்கு தளங்கள் உள்ளன. மீன் இறங்கு தளங்களுக்கு அரசு நிர்வாக அனுமதி அளித்து தற்போது நடைபெற்று வரும் பணிகளின் விவரம் இணைப்பு I–ல் காணும் அட்டவணை 16–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 7.3 கரையோரப் பாதுகாப்பு வசதிகள்

காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர் காலங்களில் ஏற்படும் கடல் சீற்றத்தால் கரையோரங்களில் ஏற்படும் கடலரிப்பிலிருந்து மீனவ கிராமங்களைப் பாதுகாக்க, கடலரிப்பு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தூண்டில் வளைவுகள், நேர்கல் சுவர்கள் போன்றவற்றை அமைப்பதன் மூலம் கரையோர கடலரிப்பு குறைக்கப்படுவதுடன், ஆற்றின்

முகத்துவாரத்தில் படியும் மணல் திட்டுக்கள், நிலைப்படுத்தும் சுவர்கள் அமைப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன.

தூண்டில் வளைவு / நேர்கல் சுவர்கள் என்பது கரையிலிருந்து கடலுக்குள் நீண்டு செல்லும் ஒரு அமைப்பாகும். இது, பெரும்பாலும் செங்குத்தாக அல்லது கடற்கரைக்கு சற்று சாய்வாக இருக்கும். தூண்டில் வளைவுகள் / நேர்கல் சுவர்கள் அமைப்பதன் மூலம் கடலரிப்பு தடுக்கப்பட்டு, மணல் படிவு ஏற்படுத்தப்பட்டு, மீண்டும் கடற்கரையை உருவாக்க இயலும்.

நிலைப்படுத்தும் சுவர்கள், ஆறு கடலில் பாயும் வழிதடத்தை பேணுவதற்கும், துறைமுகப் பகுதிக்கு அருகில் மண் படிவதைத் தவிர்க்கவும், துறைமுக நுழைவாயில் மற்றும் படுகையில் போதுமான ஆழத்தை நிலைநிறுத்தவும் உதவுகின்றன.

கரையோரப் பாதுகாப்புப் பணிகளுக்கு அரசிடமிருந்து நிருவாக அனுமதி பெறப்பட்டு தற்போது நடைபெற்று வரும் பணிகள் விபரம் இணைப்பு I–ல் காணும் அட்டவணை 17–ல் தரப்பட்டுள்ளன.

## 7.4 மீன் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

மாநிலத்தில் மீன் வளர்ப்போருக்கு, தரமான மீன் குஞ்சுகள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம், மீன் உற்பத்தியை அதிகரிக்க அரசு மீன் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. இப்பண்ணைகளில் மண் குளங்கள், சினை மீன் வளர்ப்பு குளங்கள், மீன் குஞ்சு பொரிப்பகங்கள், நாற்றங்கால் தொட்டிகள் மற்றும் நிலைப்படுத்தும் குளங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படுகின்றன.

மீன் பண்ணைகளுக்கு அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு தற்போது நடைபெற்று வரும் பணிகள் இணைப்பு–Iல் காணும் அட்டவணை –18ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 7.5 பயிற்சி நிலையங்களுடன் கூடிய அலுவலக கட்டிடங்கள்

அரசு திட்டங்களை திறம்பட செயல்படுத்திடவும், பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்யவும், மீன் பிடிப்பதில் அதிநவீன தொழில்நுட்பங்களுடன்,

மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கவும், பயிற்சி நிலையங்களுடன் கூடிய அலுவலக கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. அலுவலக கட்டடங்களுக்கு அரசிடமிருந்து நிருவாக அனுமதி பெறப்பட்டு, தற்போது நடைபெற்று வரும் பணிகளின் விவரம் இணைப்பு–I ல் காணும் அட்டவணை 19–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 7.6 புதிய மீன்பிடிதுறைமுகம் / இறங்குதளம் அமைப்பதற்கான ஆய்வுப்பணிகள்

மீன்பிடிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்களை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதில், மீன்வளம் முக்கிய பங்கு வகிக்கிறது. சாத்தியக்கூறுகள், பொருளாதாரம் மற்றும் இலாபகரமான மேலாண்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொருத்தமான இடத்தில் மீன்பிடி துறைமுகம், இறங்கு தளங்களை அமைப்பதற்குத் தேவையான தகவல் மற்றும் தரவுகளைச் சேகரிப்பதற்கு ஆய்வுப் பணிகள் அவசியம். ஆய்வுப் பணிகளில் கடற்கரை மாற்றங்கள், வண்டல் ஆய்வுகள், நிலப்பரப்பு ஆய்வு, அலை மற்றும் திசை

அளவீடுகள் முதலியவை அடங்கும். தமிழ்நாட்டில், அரசிடமிருந்து நிருவாக அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வரும் ஆய்வுப்பணிகள் பணிகளின் விவரம் இணைப்பு–Iல் காணும் அட்டவணை 20–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 7.7 மீனவர்களுக்கான வீட்டு வசதித்திட்டம்

தமிழ்நாடு அரசானது கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு 5,000 வீடுகளை, வீடு ஒன்றிற்கான அலகுத்தொகையாக ரூ.1.70 இலட்சம் என்ற வீதத்தில் ரூ.85 கோடிக்கு நிதி நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அதனில் ரூ.61.97 கோடி பெறப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் 3,509 வீடுகள் கட்டுமானப் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றில் 3,308 வீடுகள் முழுமையாக கட்டிமுடிக்கப்பட்டும், 201 வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளிலும் உள்ளன. மீதமுள்ள வீடுகளை, 2024–25 ஆம் நிதியாண்டில் நிறைவு செய்திடத்

தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**8. மீன் மற்றும் மீன் பொருட்களை சந்தைப்படுத்துதல்**

2022–23 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தி 8.28 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். 2022–23 ஆம் ஆண்டில் மாநிலத்தின் தனி நபர் மீன் நுகர்வு 10.83 கிலோ கிராம் ஆகும். நவீன மற்றும் சுகாதாரமான மீன் சந்தைகள் அமைத்தல், மீன் அங்காடிகள், நடமாடும் மீன் விற்பனை வாகனங்கள் மற்றும் இணையதள மீன் விற்பனை வாயிலாக மாநிலத்தில் மீன் நுகர்வு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

**8.1. மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி**

இந்தியாவில் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ரூ.63,969 கோடி மதிப்பிலான 17.35 இலட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதியுடன் பெரும்பங்கு வகிக்கிறது.

தமிழகத்திலிருந்து 2022-23 ஆம் ஆண்டில் 1.23 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு கடல் பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்நியச் செலாவணியாக ரூ.6,957.67 கோடி ஈட்டப்பட்டுள்ளது. இவற்றில் கடல் உணவு பொருட்களான உறை பதனப்படுத்தப்பட்ட இறால், மீன்கள், கணவாய் மீன், உலர்மீன், குளிரூட்டப்பட்ட மீன் பொருட்கள் மற்றும் உயிர் மீன்களும் அடங்கும். அமெரிக்கா, ஜப்பான், சீனா, தென்கிழக்கு ஆசிய நாடுகள், ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவை இந்திய மீன் பொருட்களுக்கான பெரும் மீன் சந்தைகளாகும்.

சுகாதாரமான முறையில் மீன்களை கையாளவும், தரமான முறையில் பதப்படுத்திடவும், 10 பெரிய மீன்பிடி துறைமுகங்கள், 4 நடுத்தர மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் 83 மீன் இறங்குதளங்கள் தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மற்றும் தூத்துக்குடி

ஆகிய நகரங்கள், மீன்களைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதில் மாநிலத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## 8.2 மீன்விற்பனை சந்தைகள் அமைத்தல்

பொதுமக்களுக்கு, தரமான மீன்களை, சுகாதாரமான முறையில் வழங்கிடும் வகையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய மீன் சந்தைகள் அமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டமானது, மாநில அரசு, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதியுதவியுடன் ரூ.17.54 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது,

இத்திட்டத்தின் கீழ், 21 மீன் சந்தைகள் அமைத்திட மாநில அரசின் நிதியுதவியாக ரூ.6.69 கோடி மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியாக ரூ.7.19 கோடி, சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் / மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு

விடுவிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் இணைப்பு-Iல் காணும் அட்டவணை-21ல் காணலாம்.

மேற்கூறிய 21 மீன் சந்தைகளின் கட்டுமானப்பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

## 9. பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்

நிலையான மற்றும் பொறுப்பார்ந்த மீன்வள மேம்பாட்டு வளர்ச்சியின் வாயிலாக, இந்தியாவில் நீலப்புரட்சியினை ஏற்படுத்திடும் நோக்கில் (அ) ஒன்றிய அரசின் பங்குத் தொகையாக ரூ.9,407 கோடி (ஆ) மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.4,880 கோடி (இ) பயனாளிகளின் பங்குத் தொகையாக ரூ.5,763 கோடி என மொத்தம் ரூ.20,050 கோடி முதலீட்டில் 2020-21 முதல் 2024-25 வரையிலான 5 ஆண்டுகளுக்கு பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டமானது ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டமானது பின்வரும் இரு வேறு கூறுகளைக் கொண்ட ஒரு சிறப்பு திட்டமாகும்.

1. மத்திய அரசின் நேரடி நிதியுதவி திட்டம் (Central Sector Schemes –CS)

2. மத்திய மாநில அரசின் நிதியுதவி திட்டம் (Centrally Sponsored Schemes – CSS)

மத்திய மாநில அரசின் நிதியுதவி திட்டமானது (சிஎஸ்எஸ்) பின்வரும் பயனாளிகள் அல்லாத மற்றும் பயனாளி சார்ந்த துணைத் திட்டங்களை கொண்டுள்ளது.

i. மீன் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.

ii. உட்கட்டமைப்பு மற்றும் அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை.

iii. மீன்வள மேலாண்மை மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு.

2020–21 ஆம் நிதி ஆண்டில் ரூ. 69.88 கோடி மதிப்பில் 20 பயனாளிகள் சார்ந்த திட்டங்களும், 3 பயனாளிகள் சாராத திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

2021–22 ஆம் நிதி ஆண்டில் ரூ. 289.12 கோடி மதிப்பில் 31 பயனாளிகள் சார்ந்த திட்டங்களும், 2 பயனாளிகள் சாராத திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2022–23 ஆம் நிதி ஆண்டில் ரூ. 349.80 கோடி மதிப்பில் 19 பயனாளிகள் சார்ந்த திட்டங்களும், 6 பயனாளிகள் சாராத திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023–24 ஆம் நிதி ஆண்டில் ரூ.127.05 கோடி மதிப்பில் 22 பயனாளிகள் சார்ந்த திட்டங்களும் 1 பயனாளிகள் சாராத திட்டத்திற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

2024–25 ஆம் ஆண்டில் ரூ.420.04 கோடி மதிப்பில் 14 பயனாளிகள் சார்ந்த திட்டங்களுக்கும்,

12 பயனாளிகள் சாராத திட்டத்திற்கான கருத்துரு ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 10. விரிவாக்கம் மற்றும் செயல்திறன் மேம்பாடு

மீன்வளத்துறையின் விரிவாக்கப் பிரிவு பொதுமக்கள், மீனவர்கள், மீன்வளர்ப்போர் மற்றும் மீன்பிடி துறையில் உள்ள பிற பங்களிப்பாளர்களுக்கு நலத் திட்டங்கள் மற்றும் மீன் வளர்ப்பில் சமீபத்திய தொழில்நுட்பங்களையும் பரப்புகிறது. இத்துறை பல்வேறு வணிகப் பொருட்காட்சி மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்று மீனவர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு அரசின் நல திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மேலும், வளங்குன்றா மீன்வள மேலாண்மை, கடலில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள், சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுதல், மற்றும் மீன் இறங்கு மையங்கள் மற்றும் மீன்பிடி துறைமுகங்களில் சுகாதார நடைமுறைகள் குறித்து மீனவர்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

மீனவர்கள்/மீன் வளர்ப்போர் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில், மீனவர் குறைதீர்க்கும் நாள் மற்றும் மீன் வளர்ப்போர் கூட்டங்கள் துறை மூலம் செயல்படத்தப்பட்டு வருகின்றன.

உலகப் பெருங்கடல் தினம் (ஜீன்–8) தேசிய மீன்வளர்ப்போர் தினம் (ஜீலை–10) மற்றும் உலக மீன்வள தினம் (நவம்பர்–21) போன்ற ஆண்டு விழாக்களை மாநிலம் முழுவதும் பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கிடையே பல்வேறு போட்டிகள், விழிப்புணர்வு பேரணிகள், மற்றும் மீனவ மக்களுக்கான மருத்துவ முகாம்கள் போன்றவற்றின் வாயிலாக கொண்டாடப்பட்டு வருகிறது.

சிறப்பாக செயல்படும் மீனவர்கள் / மீன் வளர்ப்போர்களின் பங்களிப்பைப் பாராட்டும் வகையில் பல்வேறு பிரிவுகளின் கீழ் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெற்ற "உலக மீன்வள தினம் 2023" கொண்டாட்டத்தில்

தேசிய அளவில் கடல்மீன் வளத்தில் சிறந்த மாவட்டமாக இராமநாதபுரம் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு, கோப்பை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## 10.1 விரிவாக்கம் மற்றும் சேவையை நோக்கிய தொலைநோக்குப் பார்வை

மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போரின் செயல்திறன், தகவல் மற்றும் அவர்கள் பின்பற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் விரிவாக்கப் பணிகளை வழங்குவதற்கு, தொலைநோக்குப் பார்வையை துறை கொண்டுள்ளது.

**அ.** மீன்வளம் மற்றும் மீனவர் நலன் தொடர்பான பல்வேறு குறைகளுக்கு தீர்வு காண கடலோர மாவட்டங்களில் மாதந்தோறும் குறைகேட்பு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**ஆ.** மீனவர்களுக்குத் தேவையான செயல்திறன் மற்றும் அறிவுத்திறனை மேம்படுத்திட பல்வேறு தலைப்புகளான கடலில் முதலுதவி, கடற்பயண

பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் பயன்பாடு, அவசரகால நடவடிக்கை உள்ளிட்ட கடலில் பின்பற்றத் தேவையான வழிமுறைகள் மற்றும் திறன்களை மீனவர்கள் பெற்றிருப்பதை உறுதி செய்தல், தீயை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள், உயிர்காப்பு மிதவைகள் மற்றும் தீயணைப்புக் கருவிகள் போன்ற பாதுகாப்பு உபகரணங்களின் செயல்விளக்கங்கள், பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் பாதுகாப்பு நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் நடத்தப்படுகின்றன.

**இ.** மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போர் நலனுக்காக மீன்பிடிப்பு சாதனங்கள், மீன்பிடி படகில் மீன்களை கையாளும் முறைகள் சுற்றுச்சூழல் சார்ந்த மேலாண்மை அணுகுமுறைகள், நவீன மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்களான நீர் மறுசுழற்சி முறையில் மீன் வளர்ப்பு (RAS), ஒருங்கிணைந்த பல்வகை உணவடுக்கு மீன் வளர்ப்பு முறை (IMTA) மற்றும் உயிர்கூழ்ம முறையில் மீன்வளர்ப்பு, மீன்–இறால்

பண்ணைகளுக்கான நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள், தொற்று தனிமைப்படுத்தல் நடைமுறைகள், மற்றும் நோய் கண்காணிப்பு விழிப்புணர்வு பயிற்சிகள் துறையின் சார்பில் நடத்தப்படுகின்றன.

**ஈ.** நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றி மீன் உற்பத்தி மற்றும் மீன்பிடிப்பை அதிகரிப்பதற்காக தமிழ்நாடு மீன்வளப்பல்கலைக் கழகம், மத்திய கடல்நீர் மீன்வள ஆராய்சி நிலையம், மத்திய நன்னீர் ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர்நீர் மீன்வள ஆராய்ச்சி நிலையம், மத்திய மீன்வள கடற்பயணவியல் பொறியியல் பயிற்சி நிலையம், கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மீன்வளர்ப்பு தொழில் நிறுவனங்கள் போன்ற மீன்வள ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுதல்.

மேற்கண்ட விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதன் வாயிலாக மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், நிலையான நடைமுறைகளைப் பின்பற்றவும் மற்றும் மீன்வளத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு பங்களிக்கவும் உதவும்.

## 10.2 மீனவ இளைஞர்கள் கடற்சார் கல்வி பயில ஊக்குவித்தல்

மீனவ இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், அரசால் அறிவிக்கப்பட்ட 6 கடற்சார் பாடப்பிரிவுகளை பயின்றிட, மீனவ குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.50,000 என்ற வீதத்தில் அரசு நிதியுதவி வழங்குகிறது. 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளில் 139 மீனவ இளைஞர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.49.25 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2024-25 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 10.3 மீனவ இளைஞர்கள்/மீனவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள்

தமிழக மீனவ இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும் மற்றும் போதிய வேலை வாய்ப்பினை உருவாக்கி கொள்ளும் வகையில், 2024-25 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் நிதி உதவியுடன் தமிழக கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,500 மீனவ இளைஞர்களுக்கு, கீழ்க்காணும் 7 திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளித்திட உத்தேசிக்கபட்டுள்ளது.

கணினி திறன் மேம்பாட்டு பயிற்சி (Full Stack Developer), மீனவ மகளிருக்கான கணினி முறையில் சந்தைப்படுத்துதல் பயிற்சி (Digital Marketing for fisherwomen), இயந்திர பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பயிற்சி, ஆழ்கடல் நீச்சல் பயிற்சி, கடற்கரை பாதுகாப்பாளர் பயிற்சி, சுற்றுலா வழிகாட்டி பயிற்சி மற்றும் கடலுக்கடியில் வெல்டிங் பயிற்சி போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

**11. மீன்வள கூட்டுறவு சங்கங்கள்**

தமிழ்நாடு மீனவர் மற்றும் மீனவ மகளிரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மீனவக் கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையானது மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக அரசின் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள மொத்தமுள்ள 1,475 தொடக்க மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்/ 12 மாவட்ட கூட்டுறவு இணையங்கள்/ 1 மாநிலத்தலைமை கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 7.70 இலட்சம் மீனவர் / மீனவ மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 62 முழு நேர நியாயவிலைக் கடைகள் மற்றும் 12 பகுதி நேர நியாய விலைக்கடைகளை நடத்தி வருகின்றன.

மீனவர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உறுப்பினர்கள் விவரம், இணைப்பு—lல் காணும் அட்டவணை—22ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 11.1 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள்

கடல் மீனவர்கள் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களில் 18 வயது மற்றும் அதற்கு மேல் உள்ள கடல் மீனவர்கள் மற்றும் முழு நேர மீன்பிடி / மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் உறுப்பினராக சேர்க்கப்படுகிறார்கள். அரசு, கடல் மீனவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது. மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் அரசு திட்டங்களின் கீழ் நிவாரண உதவியாக கடல் மீனவர்கள் / மீனவ மகளிருக்கு சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், மீன்பிடி தடைக்கால நிவாரண உதவி மற்றும் மீன்பிடி குறைந்த மாதங்களில் சிறப்பு உதவித்தொகை, குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம்

போன்ற திட்டங்களின் கீழ் நிவாரண உதவிகளைப் பெறத் தகுதியுடையவர்கள்.

சென்னை, திருவள்ளூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 74 பொது விநியோகத் திட்ட நியாயவிலைக் கடைகள் மீனவக் கூட்டுறவுச் சங்கங்களால் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் (TAFCOFED), கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு சிறு கடன் (Micro Credit) வழங்கப்படுகிறது. மீன்பிடி துறைமுகங்களில் உள்ள மீனவ கூட்டுறவு சங்கங்களால், மீன்பிடி தொடர்புடைய உபகரணங்களை வாங்க, மீனவர்கள் பயன்பெறும் வகையில் கூட்டுறவு விற்பனை கடைகளும் செயல்படுத்தப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தின் குளச்சல் மீனவர் கூட்டுறவு சங்கம், வள்ளவிளை மீனவர் கூட்டுறவு சங்கம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள

தூத்துக்குடி மீனவர் கூட்டுறவு சங்கம் போன்ற மீனவ கூட்டுறவு சங்கங்கள் மூலம் மீனவர்களுக்கு நகைக்கடன் வழங்கப்படுகிறது.

## 11.2 உள்நாட்டு மீன்வளக் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள்

உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் ஆறுகள், பாசன குளங்கள், பஞ்சாயத்து குளங்கள், நீர்த்தேக்கங்கள் ஆகிய உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்பிடிப்பினை மேற்கொள்கின்றனர். இந்த கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மாநிலத்தில் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். மீன் உற்பத்தியை மேலும் அதிகரிக்க, அரசு மானிய விலையில் மீன்பிடி வலைகள் மற்றும் பரிசல்கள் வழங்குகிறது.

## 11.3 கூட்டுறவுக் கடன்

இராமநாதபுரம் மாவட்டத்தில் 18.08.2023 அன்று மீனவர் நல மாநாட்டின்போது, மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் 45,000 பேருக்கு மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவு கடன் வழங்கப்படும் என அறிவித்தார்.

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மூலம் மீனவ மகளிர் சுயஉதவிக்குழு கடன் ரூ.200 கோடி, உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் மீனவ விவசாயிகளுக்கு நடைமுறை மூலதனக் கடன் ரூ.300 கோடி, ஆக மொத்தம் ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்து அனைத்து மத்தியக்கூட்டுறவு வங்கிகளுக்கும் தொடர்புறுத்தப்பட்டுள்ளன.

### 11.4 மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்க்கு கிசான் கடன் அட்டைகள் (KCC) வழங்குதல்

ஒன்றிய அரசு, மீனவர் மற்றும் மீன் விவசாயிகளின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளை எளிதாக்கும் வகையில், கிசான் கடன் அட்டை (KCC) திட்டத்தை மீன்வளத் துறைக்கும் விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிசான் கடன் அட்டை வாயிலாக மீன் வளர்ப்பு, சிப்பி வளர்ப்பு, இறால் வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு, மீன் சந்தைப்படுத்தல், மீன்பிடித்தல் மற்றும் மீன் விற்பனை போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்காக மீனவர்கள் / மீன்வளர்ப்போர் குறுகிய கால கடன் பெறுகின்றனர். இத்திட்டம் மூலம் மீனவர்கள்/ மீனவ விவசாயிகளுக்கு உச்சவரம்பு கடனாக ரூ.2 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

கிசான் கடன் வழங்கும் போது வட்டி மானிய அளவாக 2% வருடாந்திர வட்டியும், கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக 3% வருடாந்திர வட்டியும் மானியமாக வழங்கப்படுகிறது. இதுவரை 16,503 மீனவ/ மீனவ விவசாயிகளுக்கு கிசான் கடனாக ரூ.229.88 கோடி வழங்கப்பட்டுள்ளது.

## 12. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (SDG)

2030ஆம் ஆண்டுக்குள் நிலையான எதிர்காலத்தை உருவாக்கிட, ஐக்கிய நாடுகள் அமைப்பு

வறுமையை ஒழிக்கவும், சமத்துவமின்மையினை போக்கவும் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவை சீரமைப்பதற்காகவும் 17 நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை (**SDG)** உருவாக்கியுள்ளது. வறுமையைப் போக்கவும், பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உணவு, பொருளாதார வளர்ச்சி மற்றும் இயற்கை வளங்களை அதிகமாக பயன்படுத்துவதற்கு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஒரு பெரும் வாய்ப்பாக உள்ளது.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் மீன் உற்பத்தி ஒரு அலகாகவும், உற்பத்திக்கு ஏற்ற நுகர்வு ஒரு அலகாகவும் (இலக்கு 12), 'கடல்வளம்' ஒரு அலகாகவும் (இலக்கு 14) என மூன்று குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகிறது. இலக்கு–12ஐ அடைவதற்கு பல்வேறு திட்டங்களின் மூலம் மாநிலத்தின் மீன் உற்பத்தியை அதிகரிக்க துறை நடவடிக்கை எடுத்து வருகின்றது. மாநிலத்தின் மீன் உற்பத்தி 2021–22ல் 8.06 இலட்சம் மெட்ரிக்

டன்னிலிருந்து 2022-23ல் 8.29 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.

இலக்கு-12 மற்றும் இலக்கு-14ன் கீழ், கடல்மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மீன்பிடி தடைக்காலத்தினை அமல்படுத்துதல், செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல், மீன் குஞ்சுகளை வளர்த்து கடலில் இருப்பு செய்தல், கடல்வாழ் உயிரின வளர்ப்பு, திறன்மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குமுறை சட்டம், 1983-ஐ திறம்பட அமல்படுத்துதல் ஆகியவற்றின் வாயிலாக நீடித்த நிலையான மீன்பிடிப்பை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய களப்பணி அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து தனிப்பிரிவு இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தரவுகள் அவ்வப்போது தகவல் இணையத்தில் ஏற்றப்பட்டு வருகின்றன. மாவட்ட நல்லாட்சி குறியீட்டில் **(DGGI)** தரவரிசைப்படுத்துவதற்கான

குறிக்காட்டியாக மீன்களின் வளர்ச்சி விகிதம் சேர்க்கப்பட்டுள்ளது.

## 13. தமிழ்நாடு மீனவர் நலவாரியம்

மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலனை உறுதி செய்திடும் நோக்கில் 2007ம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நலவாரியம் துவக்கப்பட்டது.

இவ்வாரியமானது மாண்புமிகு மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் உறுப்பினர் செயலராகவும், அலுவல் மற்றும் அலுவல்–சாரா உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இம்மீனவர் நலவாரியத்தில் மொத்தம் 4.99 இலட்சம் உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்திற்கு பங்களிப்பு தொகையாக, உறுப்பினர்களிடம் இருந்து வருடாந்திர

உறுப்பினர் சந்தாத் தொகை ரூ.20/- வீதம், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமான டீசல் விற்பனை நிலையங்களிலிருந்து விற்பனை செய்யப்பட்ட வரியில்லா டீசலில் லிட்டருக்கு 10 பைசா வீதம், விசைப்படகு உரிமையாளர்களால் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமான டீசல் விற்பனை நிலையங்களிலிருந்து விலைக்கு வாங்கப்பட்ட வரியில்லா டீசல் லிட்டருக்கு 20 பைசா வீதம், நீர்நிலைகளின் மீன்பிடி குத்தகைத் தொகையில் 7 விழுக்காடு வீதம் மற்றும் மேட்டூர் அணை மீன் விற்பனை கூட்டுறவு சங்கத்தால் மேற்கொள்ளப்படும் மீன் விற்பனையில் கிலோ ஒன்றிற்கு ரூ.2/- என்ற வீதத்தில் பெறப்பட்டு வருகிறது. 2023-24ம் ஆண்டில், தமிழ்நாடு மீனவர் நலவாரிய பங்களிப்புத் தொகையாக ரூ.5.54 கோடி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் இணைப்பு–I ல் காணும் அட்டவணை–23ல் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தில் புதிய உறுப்பினர் பதிவு செய்யப்படுவதற்காகவும், இவ்வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து திட்டங்களின் கீழ் விண்ணப்பிக்கும் பயனாளிகளுக்கு நிவாரணம் மற்றும் உதவி தொகை துரிதமாக வழங்கிட பிரத்தியோக வலைதளம் www.tnfwb.tn.gov.in தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்த அனைத்து மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர்களுக்கும் பயனாளர் குறியீடு (User ID) வழங்கப்பட்டு, நலவாரிய உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் நிவாரணம் மற்றும் உதவி கோரும் கேட்பு விண்ணப்பங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் பரிசீலிக்கப்பட்டு

உரிய ஆவணங்களுடன் தமிழ்நாடு மீனவர் நலவாரிய தலைமை அலுவலகத்திற்கு மென்பொருள் வாயிலாக பரிந்துரை செய்யப்பட்டு மின்னணு பணப்பரிமாற்றம் வாயிலாக பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக தொகை செலுத்தப்பட்டு வருகிறது. புதிய உறுப்பினர் பதிவு செய்தல் மற்றும் திட்டங்களுக்கான கேட்பு விண்ணப்பங்கள் இ–சேவை வாயிலாகவும் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகத்தில் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் பி.எப்.எஸ்ஸி., (இளநிலை மீன்வள அறிவியல்) மற்றும் பி.டெக் (இளநிலை மீன்வள பொறியியல்) பாடப்பிரிவுகளில் பயில்வதற்கு ஏதுவாக, 5 விழுக்காடு சிறப்பு இடஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தினால் அம்மாணவர்களுக்கு முழு கல்விக்கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. 2023–24ம் ஆண்டில்,

ரூ.14.56 இலட்சம் கல்விக் கட்டணமாக தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

2023–24ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட திட்ட விபரங்கள் இணைப்பு–I ல் காணும் அட்டவணை–24ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 14. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையமானது 1983ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் 06.11.1991 அன்று பதிவு செய்யப்பட்டு, கடந்த 19.10.1992 முதல் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்பொழுது, இவ்விணையத்தில் 665 கடல் மற்றும் 164 உள்நாட்டு மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 10 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இவ்வுறுப்பினர் சங்கங்கள், இணையத்திற்கு

ரூ. 91.49 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளன.

இவ்விணையத்தின் செயற்பதிவாளராக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அவர்களும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் பதவிதரத்தில் மேலாண்மை இயக்குநரும் இவ்விணையத்தை நிர்வகித்து வருகின்றனர். இணையத்தின் கட்டுப்பாட்டில் சென்னை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஐந்து இடங்களில் திட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

### 14.1. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெயில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட நாட்டுப்படகுகளுக்கு, 2023–24 ஆம் நிதியாண்டில், இவ்விணையத்தின் 14 விற்பனை மையங்கள் மூலம்

7,351 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2023–24 ஆம் ஆண்டில் ரூ.1.47 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது (தணிக்கை செய்யப்படாதது).

**14.2. மீன்பிடி கலன்களுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் வழங்குதல்**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்டுள்ள 17 டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக 2023–24 ஆம் ஆண்டில், 25,436 கிலோ லிட்டர் வரி விலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகு மற்றும் விசைப்படகுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2023–24 ஆம் ஆண்டில் ரூ. 5.80 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது (தணிக்கை செய்யப்படாதது).

### 14.3. மீன் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் பொதுமக்களுக்கு தரமான மீன்களை, நியாயமான விலையில் வழங்கிடும் பொருட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வையாவூர், கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி நகரம், அரியலூர் மாவட்டத்தில் அரியலூர், மதுரை மாவட்டத்தில் பழங்காநத்தம், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம், பரமக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 2023 – 24 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ. 10.55 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 14.4. மீனவ மகளிருக்கு குறுகியகாலக் கடன் வழங்குதல்

2023–24 ஆம் ஆண்டில் தூத்துக்குடி மற்றும் கடலூர் மாவட்டங்களைச் சார்ந்த 225 மீனவ மகளிர் அடங்கிய 45 கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு மீனவ

மகளிர் பயனாளி ஒருவருக்கு ரூ.15,000/- முதல் ரூ.20,000/- வீதம், தொகை ரூ.1.37 கோடி குறுகியகாலக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**14.5. மீன்பிடி துறைமுகம்/மீன் இறங்குதளம் ஆகியவற்றில் கூட்டுறவு விற்பனை மையம்**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையமானது, தேங்காப்பட்டினம், குளச்சல், சின்னமுட்டம், தூத்துக்குடி, தருவைக்குளம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மீன்பிடி துறைமுகங்களில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு விற்பனை மையத்தின் மூலம் மீனவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது.

**14.6. வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்குதல்**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மூலம் 2023-24ம் ஆண்டில் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் மாநில அரசு நிதியுதவி திட்டத்தின் கீழ் வழங்கப்பட

உள்ளது. இயந்திரத்தின் விலையில் 40 விழுக்காடு அல்லது ரூ.48,000/- இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படும். இந்த நிதியாண்டில் 350 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுவருகிறது.

**14.7. பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்.**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் வாயிலாக 2023-24 ஆம் ஆண்டில் மத்திய, மாநில மற்றும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மீன் வியாபாரம் மேற்கொள்ள குளிர்காப்பு பெட்டி பொருத்தப்பட்ட 539 இருசக்கர வாகனங்கள் ரூ. 1.79 கோடி செலவில் பொதுப்பிரிவினருக்கு 40 விழுக்காடும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் மீனவ மகளிருக்கு 60 விழுக்காடும் மானிய உதவியுடன் வழங்கப்பட்டு வருகிறது.

### 14.8. நிதிநிலை

2023–24 ஆம் ஆண்டில் இணையத்தில் டீசல், மண்ணெண்ணெய் மற்றும் மீன் விற்பனை நிலையங்கள் வாயிலாக ரூ. 273.97 கோடி விற்றுமுதல் (Turn Over) மேற்கொள்ளப்பட்டு, மொத்த இலாபமாக 2023–24 ஆம் ஆண்டில் ரூ. 4.78 கோடி (தணிக்கை செய்யப்படாதது) வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், இவ்விணையம் ரூ. 41.62 இலட்சம் தனது பங்களிப்புத் தொகையாக தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்கு வழங்கியுள்ளது (ஜனவரி 2024 வரை).

## 15. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் நிறுவனங்களின் சட்டத்தின் கீழ், 11.04.1974 அன்று பொதுத்துறை நிறுவனமாக ரூ.5.00 கோடி பங்கு முதலீட்டுடன் பதிவு செய்யப்பட்டது. இக்கழகம் மாநில மீன்வளம் தொடர்பான வணிக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிறுவப்பட்டது. அரசால்

நியமிக்கப்படும் தலைவரை முதன்மையாக கொண்ட இயக்குநர் குழுமத்தினால் இக்கழகம் நிர்வகிக்கப்படுகிறது. ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அவர்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ஆவார்.

**15.1 உள்நாட்டு மீன்வளம்**

**15.1.1 நீர்த்தேக்க மீன்வளம்**

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையிலிருந்து 30 ஆண்டுகால குத்தகைக்கு பெறப்பட்ட 8 நீர்த்தேக்கங்களான, ஈரோடு மாவட்டம் பவானிசாகர், பெரும்பள்ளம், கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியாறு, திருப்பூர் மாவட்டம் அமராவதி, திருமூர்த்தி, உப்பாறு, திண்டுக்கல் மாவட்டம் பாலாறு–பொறந்தலாறு மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் ஆகிய நீர்தேக்கங்களின் மீன்வள மேலாண்மையினை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வருகிறது. 2023–24 ஆம் நிதியாண்டில் 718.67 டன்

மீன்கள் இந்நீர்தேக்கங்களில் பிடிக்கப்பட்டதுடன், வருவாயாக ரூ. 6.78 கோடி ஈட்டப்பட்டுள்ளது.

### 15.1.2 மீன்குஞ்சுகள் உற்பத்தி மற்றும் வளர்ப்பு

சாத்தனூர், ஆழியாறு, அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு–பொறந்தலாறு ஆகிய இடங்களில் 3.86 ஹெக்டேர் பரப்பளவுள்ள மீன் பண்ணைகள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. சாத்தனூர் மீன் பண்ணையில் 2023–24ஆம் நிதியாண்டில் 1.33 கோடி இந்திய பெருங் கெண்டை ரகம் மற்றும் சாதா கெண்டை நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. சாத்தனூர், ஆழியாறு, அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு–பொறந்தலாறு பண்ணைகளில் மீன்குஞ்சுகள் வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, 2023–24 ஆம் நிதியாண்டில் 32.27 இலட்சம் மீன்குஞ்சு விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன.

### 15.1.3 வண்ணமீன் உற்பத்தி மற்றும் மீன்காட்சியகங்கள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் வாயிலாக வண்ணமீன்களின் உற்பத்திக்கென தனியே ஆழியாறு மீன் பண்ணையில் செயல்பட்டு வரும் உற்பத்தி அலகில், கோய் கெண்டை, பொன்மீன், பூக்கொண்டை மற்றும் சிச்லிட் இன மீன்கள் இனப்பெருக்கம் செய்யப்பட்டு, வளர்த்து விற்பனை செய்யப்படுகிறது. இக்கழகம் மூலம் ஆழியாறு, திருமூர்த்தி மற்றும் சாத்தனூர் ஆகிய இடங்களில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் வண்ண மீன் காட்சியகங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. வண்ண மீன் காட்சியகத்திற்குத் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் வண்ண மீன்களை விற்பனை செய்வதற்காக ஒரு பிரத்யேக விற்பனை அங்காடியினை இக்கழகம் சென்னை, சேத்துப்பட்டு பசுமைப்பூங்காவில் அமைத்துள்ளது. மேற்கூறிய செயல்பாடுகளின் வாயிலாக 2023–24 ஆம் நிதியாண்டில் ரூ. 16.66 இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

## 15.2 கடல் மீன்வளம்

### 15.2.1 வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் வழங்குதல்

தமிழ்நாடு அரசால் கடல் மீனவர்களின் நலனுக்காக வழங்கப்படும் வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் அமைக்கப்பட்டுள்ள 33 டீசல் மையங்கள் வாயிலாக விநியோகிக்கப்படுகிறது. 2023-24 ஆம் நிதியாண்டில் 84,066.84 கிலோ லிட்டர் வரிவிலக்களிக்கப்பட்ட டீசல், நாட்டுப்படகு மற்றும் விசைப்படகு உரிமையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு, ரூ.663.11 கோடி விற்றுமுதல் (Turnover) மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இராமநாதபுரம் மாவட்டம் குந்துக்கால் மீன் இறங்கு தளத்தில் டீசல் விற்பனை மையம் கடந்த 06.10.2023 அன்று புதிதாக திறக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், திரேஸ்புரம் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கைப்பானிக்குப்பம் ஆகிய

இடங்களில் உள்ள எரிபொருள் நிலையங்களில் கூடுதல் வருவாய் ஈட்டிடும் பொருட்டு பெட்ரோல் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

### 15.2.2 நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்கள் பயன்பெறும் வகையில் மண்ணெண்ணெயினால் இயக்கப்படும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் மானிய விலை மண்ணெண்ணெய் 11 விற்பனை நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 2023-24 ஆம் நிதியாண்டில் 12,258.01 கிலோ லிட்டர் மானிய விலை மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு, ரூ.90.38 கோடி விற்றுமுதல் (Turn over) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 15.2.3 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை

2023-24 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு சென்னை, கடலூர், நாகப்பட்டினம், திருச்சி மற்றும் இராமநாதபுரம் ஆகிய

மண்டலங்களுக்கு 650 எண்ணிக்கை வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தகுதியான மீனவ பயனாளிகளுக்கு மார்ச், 2024 வரை 520 எண்ணிக்கை வெளிப்பொருத்தும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

## 15.3 மீன் விற்பனை

### 15.3.1 மீன் விற்பனை அங்காடிகள் மற்றும் ஊர்திகள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் சென்னை, மதுரை, திண்டுக்கல், கோயம்புத்தூர், பொள்ளாச்சி மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் 41 மீன் அங்காடிகளையும், சென்னை, திருவண்ணாமலை, நெய்வேலி மற்றும் பொள்ளாச்சி ஆகிய இடங்களில் 8 நடமாடும் மீன் விற்பனை ஊர்திகளையும் இயக்கி வருகிறது. மீன் விற்பனையில் கூடுதல் வருவாயினை ஈட்டுவதற்கு மதிப்புக் கூட்டுதல் அவசியம். ஆதலால், அதனை செயல்படுத்தும் விதமாக சென்னையில் நான்கு இடங்களிலும் நாகர்கோவிலில் ஒரு இடத்திலும் நடமாடும் கடல் உணவு விற்பனை செய்யும் ஊர்திகள்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், சென்னை சாந்தோம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காப்பட்டிணத்தில் அமர்ந்து உணவருந்தும் வசதியுடன் கூடிய மீன் உணவகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2023-24 ஆம் நிதியாண்டில் 689.66 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு, ரூ.17.60 கோடி விற்றுமுதல் (Turn over) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் www.meengal.com என்ற இணையதள முகவரி மற்றும் 'meengal' எனும் கைபேசி செயலி வாயிலாக இணையவழி மீன் விற்பனையினை மேற்கொண்டு வருகிறது. இவ்விணைய வழி மீன் விற்பனையின் வாயிலாக நுகர்வோரின் இல்லங்களுக்கே குறித்த நேரத்தில் மீன்களை கொண்டு சேர்ப்பதற்கு உரிய மின் வணிகத்தரவுகள் (e-commerce) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விற்பனையின் துவக்க காலமான ஏப்ரல்-2020 லிருந்து மார்ச்-2024 வரை,

47,629 எண்ணிக்கையிலான விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டு, 71.34 மெட்ரிக் டன் மீன்கள் ரூ.3.99 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 15.3.2 மொத்த மீன் விற்பனை சந்தை – உக்கடம், கோயம்புத்தூர் மாவட்டம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் கோயம்புத்தூர் உக்கடம் பகுதியில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைந்து ஒரு மொத்த மீன் விற்பனை சந்தையினை நிறுவியுள்ளது. மீன்களை நல்ல நிலையில் இருப்பு வைக்கவும் தரத்தினை மேம்படுத்தும் விதமாகவும், 10 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பனிக்கட்டி நிலையம் மற்றும் குளிர்பதன அறை ரூ.1.10 கோடி செலவில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும், 2024–25ல் அம்மீன் அங்காடியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ஏதுவாக ரூ.92.50 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**15.4 சேத்துப்பட்டு, பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன் கூடிய பசுமைப் பூங்கா மேலாண்மை**

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையால் அமைக்கப்பட்ட சென்னை, சேத்துப்பட்டு பொழுது போக்கு மீன் பிடிப்புடன் கூடிய பசுமைப் பூங்காவினை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் பராமரித்து வருகிறது. 2023–24 ஆம் நிதியாண்டில் 2,39,210 பார்வையாளர்கள் வருகை புரிந்ததுடன், நுழைவுக் கட்டணமாக மொத்தம் ரூ. 54.32 இலட்சம் வசூலிக்கப் பட்டுள்ளது.

இப்பசுமைப்பூங்காவின் பொழுதுபோக்கு வசதிகள் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்ட வகையில் ரூ.1.45 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**15.5 மீன் தீவன உற்பத்தி செயல்பாடுகள்**

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டம், அச்சம்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள மீன் தீவன ஆலையினை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இயக்கி வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மீன் தீவனம் அரசு மீன்

பண்ணைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2023-24 ஆம் நிதியாண்டில் 198.02 மெட்ரிக் டன் மீன் தீவனம் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்து ரூ.91.08 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 15.6 நிதி நிலை

2023-24 ஆம் நிதியாண்டில் ரூ.789.21 கோடி விற்றுமுதலில் (Turnover) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது ரூ. 7.55 கோடி (தணிக்கை செய்யப்படாதது) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

## 15.7 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் நிதி பங்களிப்பு

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 2022-23 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட இலாபத்தில் ரூ.2.67 கோடியினை மாநில அரசுக்கு பங்கு ஈவுத் தொகையாக செலுத்தியுள்ளது. 2023-24ஆம் ஆண்டிற்கான மொத்த பங்கு ஈவுத் தொகையில் இடைக்கால பங்கு ஈவுத் தொகையாக ரூ.1.00 கோடி செலுத்தப்பட்டது. மேலும் தமிழ்நாடு மீனவர் நல

வாரியத்திற்கு ரூ.2.06 கோடியினை தனது பங்களிப்புத் தொகையாக 2023–24 ஆம் நிதியாண்டில் வழங்கியுள்ளது.

2023–24 நிதியாண்டில், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திலிருந்து பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதிக்கு (CSR Fund) ரூ.24.86 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகமானது தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டம், 2012–ன்படி, மாநில அரசு நிதியுதவியுடன் 19.06.2012 அன்று நாகப்பட்டினத்தில் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் மார்ச் 2026 ஆம் ஆண்டு வரை '**ஏ**' தர அங்கீகாரம் பெற்றுள்ளது.

## 16.1. நோக்கம்

"மக்களுக்கு உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதில் மீன்வள அறிவியலை சரியாகப் பயன்படுத்துதல்".

## 16.2. பணி

தரமான மீன்வள அறிவியல் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் மூலம் சமூக பொறுப்புள்ள மற்றும் தொழில் ரீதியாக திறன் மேம்பட்ட பட்டதாரிகளை உருவாக்கி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் ஊட்டச்சத்து, பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சியை அடைதல்.

## 16.3. குறிக்கோள்கள்

- மீன்வள அறிவியலின் பல்வேறு பிரிவுகளில் தரமான தொழில் கல்வியை வழங்குதல்
- மீன்வள அறிவியலில் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்க, திட்டமிட்ட ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்.

- மீன்வள அறிவியலில் விரிவாக்க சேவைகளை வழங்குதல்.
- மீன்வள அறிவியல் மூலம் மாநிலத்தின் மேம்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்தல் மற்றும் மீன்வள அறிவியலின் தர மேம்பாட்டிற்கான அளவுகோல்களை நிர்ணயித்தல்.

**16.4. நிருவாக அமைப்பு**

நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகத் தலைமையகத்தில் துணைவேந்தர், பதிவாளர், ஆராய்ச்சி இயக்குநர், விரிவாக்கக் கல்வி இயக்குநர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு இயக்குநர், நிதி அலுவலர் மற்றும் உடைமை அலுவலர் அலுவலகங்கள் உள்ளன. தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் 8 உறுப்புக் கல்லூரிகள், 3 இணைத் தொழில்சார் கல்வி நிலையங்கள் மற்றும் 5 இயக்குநரகங்கள் உள்ளன.

## 16.5. கல்வி

இப்பல்கலைக்கழகத்தில், 4 புலங்கள் மூலம் பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. மீன்வள அறிவியல் புலத்தில், பி.எப்.எஸ்.சி., எம்.எப்.எஸ்.சி., பிஎச்.டி. மற்றும் பி.வோக். பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. அடிப்படை அறிவியல் புலத்தில் பி.டெக். (பயோடெக்னாலஜி), பி.பி.ஏ., எம்.பி.ஏ., மற்றும் பிஎச்.டி. (உயிரின அறிவியல்) பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. மீன்வளப் பொறியியல் புலத்தில் பி.டெக். (மீன்வளப் பொறியியல்), பி.டெக். (எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்) மற்றும் எம்.டெக். பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. உணவு அறிவியல் புலத்தில் பி.டெக். (உணவுத் தொழில்நுட்பம்) பட்டப்படிப்பு வழங்கப்படுகிறது.

2023–24 ஆம் கல்வி ஆண்டில், 326 மாணவர்கள் இளங்கலை பாடப்பிரிவுகளிலும், 61 மாணவர்கள் முதுகலை பாடப்பிரிவுகளிலும்

சேர்க்கப்பட்டுள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1451.

இப்பல்கலைக்கழகத்தில் பயின்ற 33 மாணவர்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் நுழைவுத் தேர்வின் மூலம் ஜே.ஆர்.எப். மற்றும் எஸ்.ஆர்.எப். உதவித்தொகை பெற்று மத்திய மீன்வளக் கல்வி நிறுவனம், மும்பை மற்றும் பிற மாநில வேளாண் பல்கலைக்கழகங்களில் முதுகலை மற்றும் முனைவர் பட்டப்படிப்பு படித்து வருகின்றனர்.

2023–24ஆம் கல்வியாண்டில், இளங்கலைப் பட்டப்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5% இடஒதுக்கீட்டின் மூலம் 18 மாணவர்களும், மீனவர் சமூகத்திற்கு பி.எப்.எஸ்.சி. மற்றும் பி,டெக். ஆகியவற்றில் ஒதுக்கப்பட்ட 20% இடஒதுக்கீட்டின் மூலம் 24 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டில், 9 இளங்கலை பாடத்திட்டங்களில் படித்த 570 மாணவிகளில்,

31 மாணவிகள் தமிழ்நாடு அரசின் 'புதுமைப் பெண்' திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

### 16.6. பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் எட்டாவது பட்டமளிப்பு விழா 07.07.2023 அன்று சென்னையில் உள்ள தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக அரங்கத்தில் நடைபெற்றது. மொத்தம், 386 பட்டதாரிகள் (நேரில் 352 பேர், நேரில் வராதவர்கள் 34 பேர்) பட்டம் பெற்றனர். அவர்களில், 15 மாணவர்கள் மொத்தம் 38 பதக்கங்களை பெற்றனர்.

### 16.7. புதிதாக உருவாக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள்

- சென்னை மாதவரத்தில் தமிழக அரசு நிதியுதவியுடன் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் இணைத் தொழில்சார் மீன்வளத் தொழில்நுட்ப நிலையத்தின் முதன்மை கட்டிடம் மற்றும் தமிழக

அரசு நிதியுதவியுடன் ரூ.160.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்கடல் மீன்பிடி பயிற்சி கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது.

- தலைஞாயிறு டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள மாணவிகள் மற்றும் மாணவர்கள் விடுதியின் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.639.71 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது.
- சீனியப்பா தர்காவில் உள்ள நிலையான மீன்வளர்ப்புக்கான அலுவலகம், ஆய்வகம் மற்றும் பயிற்சிக் கூடம் ரூ.1.17 கோடியில் கட்டப்பட்டுள்ளது. மேலும், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி கூடத்துடன் கூடிய ஆய்வக வளாகம் ரூ.1.00 கோடியில் கட்டப்பட்டுள்ளது.
- நாகப்பட்டினம் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மீன்வளப் பொறியியல் கல்லூரியில் மாணவர் தங்கும்

விடுதி ரூ.7.30 கோடியில் மாணவியர் தங்கும் விடுதி ரூ.7.30 கோடியில் NABARD– RIDF நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ளது.

- தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் (NADP) நிதியுதவியுடன் ஒலியியல் ஒலிப்பதிவு அறை, எண்ணிம ஊடக ஆய்வகம் (Digital Media Lab) மற்றும் ICT வசதி கொண்ட திறன் ஆய்வகத்துடன் "டிஜிட்டல் ப்ளூ" மின் விரிவாக்க மையம் ரூ.1.06 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

**16.8. ஆராய்ச்சி:**

**16.8.1. நடப்பு திட்டங்கள் (வெளிப்புற நிதியுதவி)**

2023–2024ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகத்தில் பல்வேறு நிதி நிறுவனங்களின் மூலம் மொத்தம் ரூ.31.84 கோடியில் 42 திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. திட்டங்களுக்காக பெறப்பட்ட ஒட்டுமொத்த நிதியில் ரூ.17.79 கோடி மாநில நிதியிலிருந்தும், ரூ.13.47 கோடி மத்திய நிதியிலிருந்தும், ரூ.0.58 கோடி பிற நிதி நிறுவனங்களில் இருந்தும் பெறப்பட்டது.

## 16.9. ஆராய்ச்சி வெளியீடுகள்

2023–24ஆம் ஆண்டில் மொத்தம் 89 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இவையனைத்தும் NAAS குறியீட்டில் 6.00–க்கு மேல் உள்ள ஆராய்ச்சி இதழ்களில் வெளியிடப்பட்டவையாகும்.

### 16.9.1. புதிதாக தயாரிக்கப்பட்ட மீன் பொருட்கள்

கீழ்க்கண்ட ஐந்து மீன்பொருட்கள் 2023–24ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டன.

1. கடற்பாசி மூலம் தயாரிக்கப்பட்ட காபி கோப்பைகள்
2. கடற்பாசி மூலம் தயாரிக்கப்பட்ட ஐஸ்கிரீம் கோப்பைகள்
3. கடற்பாசி மூலம் தயாரிக்கப்பட்ட முக களிம்பு.
4. கடற்பாசி மூலம் தயாரிக்கப்பட்ட சோப்பு.
5. மீன் அமிலம் / மீன் அமினோ அமிலம்.

### 16.9.2. புரிந்துணர்வு ஒப்பந்தம்

2023–24ஆம் ஆண்டில் பல்வேறு தொழில் நிறுவனங்கள், தேசிய மற்றும் மாநில அளவில் முக்கியத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் பதின்மூன்று (13) புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. மேலும், ஆஸ்திரேலியாவின் கர்டின் பல்கலைக்கழகத்துடன் ஒரு சர்வதேச புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது.

### 16.9.3. தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நடத்தும் திட்டங்கள்

இப்பல்கலைக்கழகத்தில் ரூ.22.68 இலட்சம் மதிப்பில் தொழில் நிறுவனங்களின் நிதியுதவியுடன் 5 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. ஓலைக்கால் நண்டு (போர்ட்னஸ் பெலஜிகஸ்) மற்றும் இலக்கு அல்லாத மீன் இனங்களின் பல்லுயிர் மதிப்பீடுகள் மற்றும் EHP தொற்றால் பாதிக்கப்பட்ட பினேயஸ் வனாமி நோய்எதிர்ப்பு சக்திக்கு எதிரான முன்மாதிரியின்

செயல்திறன், மீன் மசாலா தயாரிப்பு மற்றும் ஒருங்கிணைந்த வனாமி கடற்பாசி வளர்ப்பு ஆகியவை இதில் அடங்கும் .

### 16.9.4. ஆராய்ச்சி முடிவுகளின் மூலம் வணிகமயமாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள்

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் கடல்சார் உணவு பொருட்கள் தொழில்முனைவு மையமும், ஹெர்பலிஸ் என்ற தனியார் நிறுவனமும் இணைந்து கடற்பாசி கலந்த அழகு சாதனப் பொருட்களை வணிகமயமாக்கி உள்ளன.

### 16.9.5 முக்கிய ஆராய்ச்சி முடிவுகள்

- TANII திட்டத்தின் நிதியுதவியின் கீழ் பழவேற்காடு கடலோரப் பகுதியில் உள்ள நான்கு தளங்களில் 150 செயற்கை பாறைகளை நிறுவியதன் மூலம் பழவேற்காடு ஏரியில் மாதத்திற்கு 1.2 லிருந்து 12 டன் வரை மீன்பிடிப்பு அதிகரிக்கப்பட்டது.

- சிபோசீலியஸ் டைபஸ் (*Xiphochelius typus)* மற்றும் (ஹாப்லுனிஸ் டியோமிடியானா *(Hoplunnis diomediana*) ஆகிய இரண்டு மீன் இனங்கள் சென்னை கடற்கரையில் புதிதாக பதிவாகியுள்ளன.
- ஆமை இனங்களை அடையாளம் கண்டு பாதுகாப்பதற்காக வலைப் பதிவுகள் மற்றும் ஆண்ட்ராய்டு செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 16.10. முக்கிய நிகழ்வுகள்

#### 16.10.1. வலையரங்கம் / கருத்தரங்கம் / சிந்தனையரங்கு.

பதினான்கு வலையரங்குகள், இரண்டு கருத்தரங்குகள் மற்றும் ஒரு பணிப்பட்டறை நடத்தப்பட்டன.

### 16.11 விரிவாக்கச் செயல்பாடுகள்

#### 16.11.1 விரிவாக்கத் திட்டங்கள்

ரூ.29.795 இலட்சம் மதிப்பீட்டில் பதினேழு விரிவாக்கத் திட்டங்கள் பல்கலைக்கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டன.

### 16.11.2. தொழில் வழிகாட்டும் மையங்களின் செயல்பாடுகள்

பொன்னேரியில் உள்ள அறுவடைக்குப் பிந்தைய ஆராய்ச்சி இன்குபேஷன் மையம் (PHRIC), ஊறுகாய், கருவாடு மற்றும் குர்குரே பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. தொழில் முனையும் இளைஞர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் நலனுக்காக மீன் பதனிடும் இயந்திரங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட 6 தொழில் முனைவோர் தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் பொன்னேரியில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வசதிகளை கொண்டு வணிகம் மேற்கொள்கின்றனர்.

### 16.11.3 ஆய்வகங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள்

- நீர்வாழ் விலங்குகள் ஆரோக்கியத்திற்கான மாநில பரிந்துரை ஆய்வகங்கள் சென்னை மாவட்டத்தில்

உள்ள மாதவரத்திலும், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும் உள்ளன. இங்கு மீன் நோய்களை கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்கான வழிகாட்டு முறைகள் வழங்கப்படுகின்றன

- மீன் தர கண்காணிப்பு மற்றும் சான்றிதழுக்கான மாநில பரிந்துரை ஆய்வகம், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளது. இங்கு மீன் தரத்திற்கான ஆய்வுகள் குறித்த ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன .
- தீவன தர பரிசோதனைக்கான மாநில பரிந்துரை ஆய்வகம், மீன்வள முதுகலை பட்டப் படிப்பு நிலையம் வாணியஞ்சாவடி, சென்னையில் உள்ளது. இங்கு மீன் தீவனத்தின் தர பரிசோதனை செய்யப்படுகிறது.

### 16.11.4 மீனவர்களுக்கான பயிற்சி

முப்பத்தைந்து (35) மீனவர்களுக்கு படகு ஓட்டுநர் உரிமம், மாவட்ட திறன் மேம்பட்டு ஆணையத்தின் (District Skill Development Authority)

கூட்டு முயற்சியால் வழங்கப்பட்டது. "ஆழ்கடல் மீன்பிடி நுட்பங்கள்" என்ற ஒரு வார பயிற்சி திட்டம் தமிழ்நாடு திறன் மேம்பாடு நிறுவனம் (TNSDC), சென்னை மூலம் 20 மீனவர்களுக்கு வழங்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்ட மீனவப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, "செவுள் வலை வடிவமைத்தல் மற்றும் வலை சரிசெய்தல் பயிற்சி" 90 மீனவப்பெண்களுக்கு வழங்கப்பட்டது. இராமநாதபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 3759 மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடிதல் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் (NADP) கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 16.11.5 மீன் விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோருக்கான சேவைகள்

#### அ) பல்கலைக்கழக உறுப்பு அமைப்புகள் மூலம் சேவைகள்

மீன்வளர்ப்போர் மற்றும் தொழில்முனை வோர்களுக்கு இப்பல்கலைக்கழகத்தில் 'மீன்வளச் சுடர்'

என்ற காலாண்டு இதழ் பிரசுரிக்கப்படுகிறது. மீன் வளர்ப்பில் மற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு மீன் விவசாயிகளின் வெற்றிக் கதைகள் வெளியிடப்படுகின்றன. மீன்வளர்ப்பு மற்றும் மீன்பிடிதுறையில் நடத்தப்பட்ட வலையரங்கங்கள் மற்றும் மாநாடுகள் உட்பட 54 விழிப்புணர்வு திட்டங்கள் மூலம் 4340 பயனாளிகள் பயனடைந்தனர். மேலும், பல்வேறு அம்சங்களில் 66 திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

### ஆ) **வேளாண் அறிவியல் மையம் (KVK), சிக்கல் மூலம் வழங்கப்படும் சேவைகள்**

- 19 திறன் மேம்பாட்டு பயிற்சிகள், மீன் வளர்ப்பு மற்றும் மீன் பொருட்களின் மதிப்பு கூட்டுதல் ஆகியவற்றில் நடத்தப்பட்டன. இதன் மூலம், 504 பயனாளிகள் பயனடைந்தனர்.
- 33 வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவப் பாடப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதன் மூலம், 704 பயனாளிகள் பயனடைந்தனர்.

- 144 விவசாயிகளுக்கு மண் மற்றும் நீர் மாதிரி பகுப்பாய்வு சேவைகள் வழங்கப்பட்டன.
- மீன்வளம் மற்றும் வேளாண்மைப் பாடத்தில் விவசாயத்தில் 217 பயனாளிகளுக்கு 6 திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டது.
- மீன்பிடி, விவசாயம் மற்றும் கால்நடை அறிவியல் ஆகியவற்றில் செயல்விளக்க அலகுகள் நிறுவப்பட்டு, விவசாயிகளுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது.
- வேளாண்மை, தோட்டக்கலை தொழில்நுட்பங்கள், மீன்வளம், தாவர பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் போன்ற பல்வேறு அம்சங்களில் 2212 விவசாயிகளுக்கு பண்ணையில் ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

**16.12 விருதுகள்/ பதக்கங்கள்/ அங்கீகாரம்**

பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் 4 "சுவரொட்டி விளக்க விருதுகள்" மற்றும் 5 "சிறந்த

ஆராய்ச்சி கட்டுரை விருதுகள்" பெற்றனர். சென்னையில் நடைபெற்ற 9வது தேசிய வேளாண் அறிவியல் தமிழ் மாநாட்டில் 6 விருதுகளைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெற்றனர். பேராசிரியர் கே.எச்.அலிகுனியின் சிறந்த முனைவர் பட்டத்திற்கான தங்கப் பதக்கம் இப்பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் பெற்றார்.

### 16.13 வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்

- பூஜ்ஜிய பசி (SDG 2) மற்றும் வறுமை இல்லாமை (SDG 1) மற்றும் பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தியை ஊக்குவித்தல் (SDG 12) ஆகிய இலக்குகளை அடைய, 1703 விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கு உள் மற்றும் வெளிவளாக பயிற்சிகள் அளிக்கப்பட்டது.
- காலநிலை மாற்றத்தின் தாக்கம் மற்றும் விழிப்புணர்வு திட்டம்– (SDG 3) பற்றிய ஐந்து ஆராய்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, அதன் கண்டுபிடிப்புகள் விஞ்ஞான குழுமத்திற்கு பகிரப்பட்டன.

- SDG இலக்கு எண். 14 ஐ (நீரடியில் வாழ்வு) அடைய, உலக மீன்பிடி தினம், உலக ஈரநில தினம் மற்றும் உலக கடற்புல் தினம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட மற்றும் பஞ்சாயத்து அளவில் நடத்தப்பட்டன.
- SDG இலக்கு எண்: 5 (பாலின சமத்துவம்) "யாரையும் தவிர்க்காமை" என்கிற இலக்கை அடைய சர்வதேச பெண்கள் மற்றும் பெண்கள் அறிவியல் தினம் மற்றும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது,

**16.14. கண்காட்சி:**

மாநில அளவிலான அக்வா ரெயின்போ (Aqua Rainbow) திருவிழா 30.06.2023 முதல் 02.07.2023 வரை மாதவரத்தில் நடத்தப்பட்டது. இக்கண்காட்சியில், அலங்கார மீன்களின் முக்கியத்துவம் குறித்து காட்சிமுறை வழங்கப்பட்டது. மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஐம்பதாயிரத்திற்கும்

அதிகமான மக்களை இந்த அக்வா ரெயின்போ (Aqua Rainbow) திருவிழா ஈர்த்தது.

### 16.15. புதிய முயற்சிகள்

- திறமையான பட்டதாரிகளை உருவாக்க டிஜிட்டல் தொழில்நுட்ப வளங்களைப் பயன்படுத்தி தரமான கல்வி அளிக்கப்படும்.
- மேம்பட்ட மீன்வளர்ப்பு முறைகள், மேம்பாடு, காலநிலையை எதிர்க்கும் மீன்வளர்ப்பு, கடற்பாசி நுண்ணுயிர் பெருக்கம், நோய் கண்காணிப்பு, மீன் பண்ணை இயந்திரங்கள், மீன் தரம் மற்றும் ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்தப்படும்.
- தொழிற்துறைக்கு ஏற்ற பட்டதாரிகளை உருவாக்க தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிலையங்களுக்கு இடையே தொடர்பு உருவாக்கப்படும்.
- பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் தயாரிப்புகளை வணிகமயமாக்க கவனம் செலுத்தப்படும்.

- சிறந்த வேலை வாய்ப்புகள் மற்றும் தொடக்கங்களை வழங்க தற்போதைய மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களுக்கு ஊடாடும் தளம் (interactive platform) வழங்கப்படும்.

## 17. எதிர்காலத் திட்டங்கள்

மீன்வளப் பிரிவின் விரிவான வளர்ச்சிக்கான அரசின் எதிர்காலத் திட்டங்கள்:

- சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் மாநில அரசு மீனவர்களின் நலனை உறுதி செய்யும்.
- பாக் வளைகுடா பகுதியில் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை மீட்டெடுக்க அரசு முன்னுரிமை அளிக்கும்.
- கடல் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடல் மீன் வளர்ப்பு போன்ற மாற்று வாழ்வாதார முறைகள் ஊக்குவிக்கப்படும். கடற்பாசி உற்பத்தி மற்றும் கடற்பாசியிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்கள் உற்பத்தி போன்றவை பெரிய அளவில் ஊக்குவிக்கப்படும்.

- மீனவ இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- நன்னீர் மீன் வளர்ப்பு, கடல் மீன் வளர்ப்பு, மீன் பதப்படுத்துதல் போன்றவற்றில் புதிய கண்டுபிடிப்புகளை பயனாளார்களுக்கு கொண்டு சேர்த்திட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படும்.
- கடலோர தரிசு நிலங்களை திறம்பட பயன்படுத்தி, கடலோர மீன் வளர்ப்பு உற்பத்தியை அதிகரிக்க முறையான நில குத்தகை கொள்கை ஏற்படுத்தப்படும்.
- மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும், தொடர் குளிர்காப்பு வசதிகளை மேம்படுத்தவும் மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள் மற்றும் இதர கரையோர வசதிகள்

தமிழ்நாட்டின் கடற்கரை பகுதி முழுவதும் ஏற்படுத்தப்படும்.

- சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் திறம்பட செயல்படுத்தப்படுவதன் மூலம் மீன்வள வளங்கள் பாதுகாக்கப்பட்டு, நிலையான மேலாண்மை செய்யப்படும்.
- உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்க மீன் குஞ்சு உற்பத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், நவீன மீன் உற்பத்தி தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல் மற்றும் நீர் வள ஆதாரங்களை மீன் உற்பத்திக்கு திறம்பட பயன்படுத்துதல்.
- செயற்கைப் பவள பாறைகள் நிறுவுதல் மற்றும் கடலில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்தல் போன்ற மீன்வள பாதுகாப்பு மற்றும் மீன்வள வள மேம்பாட்டு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்த ஆறுகள் மற்றும் பிற நீர்நிலைகளில் நன்னீர் மீன் குஞ்சுகள்

இருப்பு செய்தல் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துதல்.

**18. நிதி ஒதுக்கீடு (2024–25)**

2024–25ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ரூ. 1,320.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 714.69 கோடி வருவாய் செலவினமாகவும், ரூ.606.27 கோடி மூலதன செலவினமாகவும் இருக்கும்.

**19. நிறைவுரை**

பாக் வளைகுடா பகுதியில் தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது அரசின் முன்னுரிமைகளில் தொடர்ந்து இருந்து வருகிறது. கச்சத்தீவை மீட்பதன் மூலம் நம் மீனவர்கள் மீதான இலங்கை அரசின் தாக்குதல்கள் மற்றும் கைது நடவடிக்கைகளுக்கு நிரந்தர தீர்வு காண ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தும். மீனவர்களின் நலன் கருதி, மீன்பிடிப்பு குறைவு கால சிறப்பு உதவித்தொகை, மீன்பிடி

தடைக்கால நிவாரண உதவி, விசைப்படகுகள் மற்றும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசல் மற்றும் பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் ஆகியவற்றை அரசு உயர்த்தியுள்ளது. மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிடும் வகையில் பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் கூட்டுறவு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மீன்வளப்பிரிவின் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில், மாற்று வாழ்வாதார திட்டங்களான கடற்பாசி வளர்ப்பு, கடல் மீன் வளர்ப்பு மற்றும் கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பு போன்ற பல்வேறு திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது. மாநிலத்தின் அனைத்துக் கடலோரப் பகுதிகளிலும் செயற்கைப் பவள பாறைகளை நிறுவப்படுகின்றன. இவை மீன்களுக்கு உணவு கிடைக்கக்கூடிய மற்றும் இனப்பெருக்கம் செய்யும் இடமாக செயல்பட்டு, எதிர்காலத்தில் கடல் மீன்வளத்தை அதிகரிக்கும்.

உவர்நீர் மீன்வளர்ப்பு விரிவாக்கத்திற்கான வாய்ப்புகள் முறையாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மீன்பிடி கலன்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்களை பதப்படுத்துவதற்கும் மற்றும் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கும், தொடர் குளிர்காப்பு வசதிகள் மற்றும் பிற கடலோர உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியன மேம்படுத்தப்படுகின்றன. இந்நடவடிக்கைகள் எதிர்வரும் ஆண்டுகளில் மாநிலத்தின் மீன் மற்றும் மீன்வளப் பொருட்கள் ஏற்றுமதி அளவினை உறுதியாக உயர்த்துவதுடன், மீனவர்கள் தங்கள் மீன்களுக்கு அதிக விலையைப் பெற உதவும்.

அனைத்து பொது நீர்நிலைகளிலும் தரமான மீன் குஞ்சுகளை இருப்பு செய்து, அறிவியல் பூர்வமான மீன்வள மேலாண்மை மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்திட அரசு தொலைநோக்கு பார்வை கொண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு இடையே உள்ள பற்றாக்குறையை குறைத்திட, அரசு மற்றும்

தனியார் மீன் குஞ்சு உற்பத்தி உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நீர்நிலைகளில் குறைந்த கால அளவே இருக்கும் நீரினை மீன் வளர்ப்புக்கு திறம்பட பயன்படுத்திட ஏதுவாக, குறுகிய காலத்தில் விரைவாக வளரும் மீன் குஞ்சுகள் அரசால் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. அரசின் இந்த உறுதியான நடவடிக்கைகள் அனைத்தும், மீனவர்களின் நலனை உறுதி செய்வதோடு, மாநிலத்தின் மீன்வளத்தில் வளங்குன்றா வளர்ச்சியையும் செழிப்பையும் உறுதியாக ஏற்படுத்தும்.

# அட்டவணை– 1

# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் பதவி வாரியாக அலுவலர்கள் விவரம்

| வ எண். | பதவியின் பெயர் | பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது + அயற்பணி) |
|---|---|---|
| 1 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் | 1 |
| 2 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் இயக்குநர் | 2 |
| 3 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் | 4+1 |
| 4 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் | 11+2 |
| 5 | துணை இயக்குநர் (பணியாளர்) | 1 |
| 6 | துணை இயக்குநர் (பொறியியல்) | 1 |
| 7 | நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் | 1 |
| 8 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் / உதவி இயக்குநர் (இயந்திரவியல்) | 49+8 |
| 9. | துணை பதிவாளர் | 1 |
| 10 | கணக்கு அலுவலர் | 1 |
| 11. | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆய்வாளர் | 167 |
| 12. | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்–ஆய்வாளர் | 84 |
| 13. | அமைச்சுப் பணி மற்றும் களப்பணியாளர்கள் | 1,263+1 |
| | **மொத்தம்** | **1,586 + 12** |

| வ எண். | பதவியின் பெயர் | பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது + அயற்பணி) |
|---|---|---|
| பொறியியல் பிரிவு | | |
| 1 | தலைமைப் பொறியாளர் | 1 |
| 2 | செயற்பொறியாளர் | 5 |
| 3 | உதவி செயற்பொறியாளர் | 13 |
| 4 | உதவி பொறியாளர் | 13 |
| 5 | இளநிலை பொறியாளர் | 17 |
| 6 | முதுநிலை வரைவு அலுவலர் | 1 |
| 7 | வரைவு அலுவலர் | 8 |
| 8 | இளநிலை வரைவு அலுவலர் | 4 |
| 9 | கோட்ட கணக்கு அலுவலர் | 4 |
| 10 | தொழில்நுட்ப உதவியாளர் | 23 |
| 11 | அமைச்சுப்பணி மற்றும் இதர பணியாளர்கள் | 9 |
| | **மொத்தம்** | **98** |
| கடல்வள சட்ட அமலாக்கப் பிரிவு | | |
| 1. | காவல்துறை கண்காணிப்பாளர் | 1 |
| 2. | துணை காவல் கண்காணிப்பாளர் | 1 |
| 3. | காவல் ஆய்வாளர் | 10 |
| 4. | காவல் சார்–ஆய்வாளர் | 8 |
| 5. | தலைமைக் காவலர்/காவலர் | 53 |
| 6. | காவல் ஊர்தி ஓட்டுநர் | 19 |
| 7. | கண்காணிப்பாளர் | 1 |
| 8 | உதவியாளர் | 2 |
| 9. | முகாம் உதவியாளர் | 17 |
| | மொத்தம் | **112** |
| | மொத்தக் கூடுதல் | **1,796+12** |

## அட்டவணை– 2

## கடல் மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் 2023–24

| | |
|---|---|
| கடற்கரை நீளம் | 1,076 கி.மீ. |
| பிரத்யேக பொருளாதார மண்டலம் (EEZ) | 1.9 இலட்சம் ச.கி.மீ. |
| கண்டத்திட்டு (Continental shelf) | 41,412 ச.கி.மீ. |
| கடலோர மாவட்டங்கள் | 14 |
| மீனவ கிராமங்கள் | 608 |
| கடலோர மீனவ மக்கட்தொகை | 10.48 இலட்சம் |
| தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள கடல் மீனவர்கள் | 4,38,906 |
| **பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் (இணையவழி)** (15.06.2024 ) | |
| மீன்பிடி விசைப்படகுகள் | 5,440 |
| நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் இயந்திரம் பொருத்தப்படாதவை) | 44,487<br>(40312 + 4,175) |
| **உட்கட்டமைப்பு வசதிகள்** | |
| பெரிய மீன்பிடி துறைமுகங்கள் – 10 | 1. சென்னை<br>2. பூம்புகார், மயிலாடுதுறை மாவட்டம்<br>3. நாகப்பட்டினம்,<br>4. மூக்கையூர், |

| | |
|---|---|
| | இராமநாதபுரம் மாவட்டம்<br>5. தூத்துக்குடி<br>6. சின்னமுட்டம், கன்னியாகுமரி மாவட்டம்<br>7. குளச்சல், கன்னியாகுமரி மாவட்டம்<br>8. தேங்காப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம்<br>9. தரங்கம்பாடி, மயிலாடுதுறை மாவட்டம்<br>10. முட்டம் (PPP), கன்னியாகுமரி மாவட்டம் |
| நடுத்தர மீன்பிடி துறைமுகங்கள் – 4 | 1. பழையாறு, மயிலாடுதுறை மாவட்டம்<br>2. மல்லிப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்<br>3. கடலூர்<br>4. நம்பியார்நகர், நாகப்பட்டினம் மாவட்டம் |
| கட்டுமானத்தில் உள்ள மீன்பிடி துறைமுகங்கள்– 5 | 1. திருவொற்றியூர்குப்பம், சென்னை மாவட்டம், |

| | |
|---|---|
| | 2. அழகன்குப்பம், விழுப்புரம் மாவட்டம்<br>3. ஆலம்பரைகுப்பம், செங்கல்பட்டு மாவட்டம்<br>4. வெள்ளப்பள்ளம், நாகப்பட்டினம் மாவட்டம்<br>5. ஆற்காட்டுத்துறை, நாகப்பட்டினம் மாவட்டம் |
| மேம்பாட்டிலுள்ள மீன்பிடி துறைமுகங்கள் – 4 | 1. தேங்காப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம்<br>2. தூத்துக்குடி<br>3. பழையாறு, மயிலாடுதுறை மாவட்டம்<br>4. நாகப்பட்டினம் |
| மீன் இறங்கு தளங்கள்/ படகு அணையும் தளங்கள் | 83 |
| மீன் இறங்கு மையங்கள் | 224 |
| கடல்மீன் உற்பத்தி (2022–23) | 5.97 இலட்சம் மெட்ரிக் டன் |
| கடல்பொருள் ஏற்றுமதி (2022–23)* | அளவு: 1,23,157 மெட்ரிக் டன்<br>மதிப்பு: ரூ.6,957.67 கோடி |

ஆதாரம்: *கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் (MPEDA)

## அட்டவணை– 3

## உள்நாட்டு மீன்வள புள்ளி விவரங்கள் 2023 – 24

| | |
|---|---|
| உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் | 3,85,761 ஹெக்டேர் |
| மீன்வளத்துறையின் மூலம் மீன்வள மேலாண்மை மேற்கொள்ளப்படும் நீர்த்தேக்கங்கள் | 62 எண்ணம் (54 மீன்துறை+8 த.மீ.வ.க) (55,608 ஹெக்டேர்) |
| பெரிய மற்றும் குறுகிய கால பாசன குளங்கள் | 2,67,746 ஹெக்டேர் |
| மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் நீர்ப்பாசன குளங்களில் மீன்வள மேலாண்மை | 636 எண்ணம் (40,149 ஹெக்டேர்) |
| உவர்நீர் பரப்பளவு | 56,000 ஹெக்டேர் |
| உள்நாட்டு மீனவ மக்கட்தொகை | 2.36இலட்சம் |
| தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள உள்நாட்டு மீனவர்கள் | 60,196 |

## உள்நாட்டு மீன்வள உட்கட்டமைப்புகள்

| | |
|---|---|
| **அ) மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள்** | |
| i) அரசு மீன்பண்ணைகள் | 13 + 1 (த.மீ.வ.கழகம்••) |
| ii) தனியார் மீன்பண்ணைகள் | 37 |
| **ஆ) மீன்குஞ்சு வளர்ப்புமையங்கள்** | |
| i) அரசு மீன்பண்ணைகள் | 46 + 5(த.மீ.வ.கழகம்) |
| ii) தனியார் மீன்பண்ணைகள் | 248 |
| 2023–24 ஆம் ஆண்டு உள்நாட்டு மீன் உற்பத்தி | 2.32 இலட்சம் டன்கள் |

•• தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம்

## அட்டவணை– 4

## கடல் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட நலத்திட்டங்கள் (2023–24)

| வ. எண் | திட்டம் | ஒப்பளிக்கப் பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | கடல் மீனவர் குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை. | 89.54 |
| 2. | மீன்பிடி குறைவுகாலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை. | 108.05 |

| வ. எண் | திட்டம் | ஒப்பளிக்கப் பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 3. | கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம். | 63.39 |
| 4. | கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம். | 61.77 |
| **மொத்தம்** | | **322.75** |

## அட்டவணை–5
## கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய சட்ட விதிகளின்படி தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள இறால் பண்ணைகள்

| வ எண் | மாவட்டம் | பண்ணைகளின் எண்ணிக்கை | நீர்பிடிப்பு பரப்பளவு (ஹெ) |
|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | 125 | 249.80 |
| 2 | செங்கல்பட்டு | 81 | 102.29 |
| 3 | விழுப்புரம் | 101 | 134.49 |
| 4 | கடலூர் | 209 | 342.84 |
| 5 | நாகப்பட்டினம் | 708 | 1243.31 |
| 6 | மயிலாடுதுறை | 359 | 689.14 |
| 7 | தஞ்சாவூர் | 337 | 693.09 |
| 8 | திருவாரூர் | 197 | 464.44 |
| 9 | புதுக்கோட்டை | 57 | 121.15 |

| | | | |
|---|---|---|---|
| 10 | இராமநாதபுரம் | 160 | 388.52 |
| 11 | தூத்துக்குடி | 26 | 107.38 |
| | மொத்தம் | **2360** | **4536.45** |

## அட்டவணை– 6

## பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு செய்யும் மீன்வளர்ப்போர்க்கான பல்வேறு திட்டங்கள்

| வ. எண் | திட்ட விவரம் | அலகு | திட்ட செலவினம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | புதிய உவர்நீர் இறால் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 100 ஹெக்டேர் | 800.00 |
| 2 | உவர்நீர் இறால் வளர்ப்பிற்க்கான உள்ளீட்டு மானியம் வழங்குதல் | 100 ஹெக்டேர் | 600.00 |
| 3 | உயிர் கூழ்ம திரள் குளங்களில் (Biofloc) இறால் வளர்த்தல் | 46 எண்ணம் | 828.00 |
| 4 | புதிய உவர்நீர் கொடுவா வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 10 ஹெக்டேர் | 80.00 |
| 5 | உவர்நீர் கொடுவா வளர்ப்பிற்க்கான உள்ளீட்டு மானியம் வழங்குதல் | 10 ஹெக்டேர் | 60.00 |
| **மொத்தம்** | | | **2368.00** |

## அட்டவணை – 7

## நீர்த்தேக்கங்களில் மேற்கொள்ளப்படும் மீன்வள மேலாண்மை விபரம்

| வ. எண் | துறை விவரம் | நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை | 54 |
| 2 | தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் | 8 |
| 3 | நீர்வளத்துறை | 28 |
| | **மொத்தம்** | **90** |

## அட்டவணை–8

## மீன்வளத் துறை கட்டுப்பாட்டிலுள்ள பாசன குளங்களின் விபரம்

| வ. எண். | குளங்கள் | நீர்ப்பாசன குளங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தீவிர உள்நாட்டு மீன்வளர்ப்பு மற்றும் விற்பனை திட்ட குளங்கள் | 486 |
| 2. | மாவட்ட மீன்வளர்போர் மேம்பாட்டு முகமை குளங்கள் | 106 |
| 3. | பழனியில் உள்ள பாசன குளங்கள்– திண்டுக்கல் மாவட்டம் | 22 |
| 4. | கிராமப்புற மாதிரி மீன்வளர்ப்பு குளங்கள் | 21 |
| 5. | கடம்பா குளம் துத்துக்குடி மாவட்டம் | 01 |
| **மொத்தம்** | | **636** |

## அட்டவணை– 9

## அரசு மீன்பண்ணைகளில் மீன்குஞ்சு உற்பத்தி

## (2023– 24)

| வ. எண் | மாவட்டம் | மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் | மீன்குஞ்சு உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி | மணிமுத்தாறு | 1401.00 |
| 2. | தஞ்சாவூர் | கரந்தை | 651.00 |
| 3. | | தட்டான்குளம் | |
| 4. | திருவாரூர் | நல்லிக்கோட்டை | 30.00 |
| 5. | கரூர் | திருக்காம்புலியூர் | 243.00 |
| 6. | ஈரோடு | பவானிசாகர் | 1860.00 |
| 7. | சேலம் | மேட்டூர்அணை | 1990.00 |
| 8. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி (அமூர்) | 80.00 |
| 9. | திருவள்ளூர் | பூண்டி | 218.50 |
| 10. | தேனி | மஞ்சளாறு மீன்விரலிகள் (கிப்ட் திலேப்பியா) * | 1.39 |
| 11. | திருவண்ணாமலை | சாத்தனூர் ** | 132.95 |
| 12. | கடலூர் | லால்பேட்டை | புதிய உற்பத்தி நிலையங்கள் |
| 13. | தருமபுரி | ஒகேனக்கல் | |
| 14. | தென்காசி | ராமாநதி | |
| **மொத்தம்** (மீன்விரலிகள் தவிர்த்து) | | | **6607.84** |

* மீன்விரலிகள் **தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

## அட்டவணை–10
## அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களின் உற்பத்தி விபரம் (2023– 24)

| வ. எண் | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | மாவட்டம் | மீன்விரலிகள் உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பவானிசாகர் | ஈரோடு | 44.70 |
| 2 | புங்கார் மீன்பண்ணை | | 49.95 |
| 3 | தேசிய மீன்விதை பண்ணை | | 62.43 |
| 4 | மேட்டூர் | சேலம் | 101.70 |
| 5 | ஆணைமடுவு | | 6.02 |
| 6 | ஏர்லிவாஸ் (AIIRLIVAS) | | 12.01 |
| 7 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 99.51 |
| 8 | பாம்பாறு | | 9.31 |
| 9 | கெலவரப்பள்ளி | | 10.01 |
| 10 | ஒகேனக்கல் | தருமபுரி | 11.5 |
| 11 | சின்னாறு | | 28.51 |
| 12 | நெய்தலூர் | தஞ்சாவூர் | 24.395 |
| 13 | அகரப்பேட்டை | | 16.925 |
| 14 | கரந்தை | | 12.36 |

| வ. எண் | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | மாவட்டம் | மீன்விரலிகள் உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 15 | திருமங்கலக் கோட்டை | | 8.98 |
| 16 | செம்பரம்பாக்கம் | காஞ்சிபுரம் | 10.26 |
| 17 | ஆத்தூர் | செங்கல்பட்டு | 19.35 |
| 18 | பூண்டி | திருவள்ளூர் | 17.94 |
| 19 | வீடூர் | விழுப்புரம் | 18.88 |
| 20 | லால்பேட்டை | கடலூர் | 26.00 |
| 21 | அகரம் | | 7.175 |
| 22 | மோர்தானா | வேலூர் | 11.21 |
| 23 | நல்லிக்கோட்டை | திருவாரூர் | 9.84 |
| 24 | தட்டாமனைப்பட்டி | புதுக்கோட்டை | 9.01 |
| 25 | குறுங்களூர் | | 2.80 |
| 26 | கருவிடைச்சேரி | | 3.15 |
| 27 | அகூர் | திருச்சி | 5.50 |
| 28 | குளித்தலை | | 1.70 |
| 29 | திருக்காம்புலியூர் | கரூர் | 6.76 |
| 30 | வைகை | தேனி | 22.765 |
| 31 | மஞ்சளாறு | | 21.899 |
| 32 | சாத்தையார் | மதுரை | 10.38 |
| 33 | பிளவக்கல் | விருதுநகர் | 26.51 |

| வ. எண் | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | மாவட்டம் | மீன்விரலிகள் உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 34 | அணைப்பட்டி | திண்டுக்கல் | 27.24 |
| 35 | பிரவலூர் | சிவகங்கை | 7.21 |
| 36 | மானகிரி | | |
| 37 | மணிமுத்தாறு | திருநெல்வேலி | 35.79 |
| 38 | கூனியூர் | | 9.265 |
| 39 | கடானா | தென்காசி | 23.09 |
| 40 | ராமாநதி | | 8.81 |
| 41 | பேச்சிப்பாறை | கன்னியாகுமரி | 3.646 |
| 42 | சிற்றார் – I | | 9.558 |
| 43 | சிற்றார் – II | | 1.70 |
| 44 | பாலாறு பொறந்தலாறு | திண்டுக்கல் | புதிய வளர்ப்பு நிலையங்கள் |
| 45 | கடம்பா | தூத்துக்குடி | |
| 46 | பாரூர் (கிப்ட்) | கிருஷ்ணகிரி | |
| **மொத்தம் (அ)** | | | **855.75** |

| தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | | | |
|---|---|---|---|
| 47 | பாலாறு பொறந்தலாறு | திண்டுக்கல் | 0.45 |
| 48 | அமராவதி | திருப்பூர் | 2.31 |
| 49 | திருமூர்த்தி | திருப்பூர் | 4.86 |
| 50 | ஆழியாறு | கோயம்புத்தூர் | 12.19 |
| 51 | சாத்தனூர் | திருவண்ணாமலை | 12.46 |
| | | **மொத்தம் (ஆ)** | **32.27** |
| | | **ஆக மொத்தம் (அ) + (ஆ)** | **888 . 02** |

## அட்டவணை–11
## பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்
## 2021 – 22

| **வ. எண்** | **திட்டம்** | **அலகுகளின் எண்ணிக்கை** | **மொத்த திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | புதிய நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்தல் | 8 அலகுகள் | 200.00 |
| 2. | புதிய நன்னீர் மீன்குஞ்சு வளர்ப்புக்குளம் மற்றும் உள்ளீட்டு மானியம் வழங்குதல் | 40 ஹெக்டேர் | 280.00 |

| **வ. எண்** | **திட்டம்** | **அலகுகளின் எண்ணிக்கை** | **மொத்த திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 3. | புதிய நன்னீர் மீன்வளர்ப்பு குளம் அமைத்தல் | 85 ஹெக்டேர் | 595.00 |
| 4. | நன்னீர் மீன்வளர்ப்பு குளங்களுக்கு உள்ளீட்டு மானியம் வழங்குதல் | 85 ஹெக்டேர் | 340.00 |
| 5. | உயிர்கூழ்ம குளங்கள் அமைத்தலுக்கு மானியம் வழங்குதல் | 100 அலகுகள் | 750.00 |
| 6. | **ஆறுகளில் நாட்டின மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல்** | 40 இலட்சம் மீன் விரலிகள் | 124.00 |
| **மொத்தம்** | | | **2289 . 00** |

## அட்டவணை– 12
## பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்
## 2022 – 23

| வ. எண் | திட்டம் | அலகுகளின் எண்ணிக்கை | மொத்த திட்டமதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | புதிய நன்னீர் மீன்வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 10 ஹெக்டேர் | 70.00 |
| 2. | நன்னீர் மீன்வளர்ப்பு குளங்களுக்கு உள்ளீட்டு மானியம் வழங்குதல் | 10 ஹெட்டேர் | 40.00 |
| 3. | சிறிய அளவிலான மீன் தீவன ஆலைகள் கட்டுமானம் (உற்பத்தி திறன் 2 டன்/ நாள்) | 3 அலகுகள் | 90.00 |
| 4. | பெரிய அளவிலான மீன் தீவன ஆலைகள் கட்டுமானம் (உற்பத்தி திறன் 20 டன்/ நாள்) | 1 அலகு | 200.00 |
| **மொத்தம்** | | | **400.00** |

**அட்டவணை–13**

**பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்**

**(2023–24)**

| **வ. எண்** | **திட்டம்** | **அலகுகளின் எண்ணிக்கை** | **மொத்த திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | புதிய மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 20 ஹெக்டேர் | 140.00 |
| 2. | மீன் வளர்ப்பிற்கான உள்ளீட்டு மானியம் வழங்குதல் | 20 ஹெக்டேர் | 80.00 |
| 3. | நன்னீர் உயிர்கூழ்ம (பயோபிளாக்) மீன்வளர்ப்பு குளங்கள் அமைத்தல்– (சிறிய அலகு) | 25 ஹெக்டேர் | 187.50 |
| 4. | நீரினை மறுசுழற்சி முறையில் நன்னீர் மீன்வளர்ப்பு குளம் அமைத்தல் | 3 அலகுகள் | 22.50 |
| 5. | சிறிய அளவிலான மீன் தீவன ஆலைகள் அமைத்தல் | 1 அலகு | 30.00 |

| வ. எண் | திட்டம் | அலகுகளின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | (உற்பத்தி திறன் 2 டன் / நாள் ) | | |
| 6. | நடுத்தர அளவிலான மீன் தீவன ஆலைகள் அமைத்தல் (உற்பத்தி திறன் 8 டன் / நாள் ) | 1 அலகு | 100.00 |
| **மொத்தம்** | | | **560.00** |

## அட்டவணை– 14

## TN–IAMP உலக வங்கி திட்டத்தின் கீழ் 2024–25 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள பணிகள்

| வ எண் | திட்டங்கள் | அலகுகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தென்காசி மாவட்டம் கடானா அரசு மீன்பண்ணையில் அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைத்தல் | 1 |
| 2 | கிப்ட் திலேப்பியா பொரிப்பகம், விரால் மீன்குஞ்சு பொரிப்பகம், தூய மரபின சினை மீன்உற்பத்தி மற்றும் பராமரிப்பு மையம் ஆகியவற்றிற்கான உள்ளீட்டு செலவினம் | 4 |
| 3 | மாதிரி கிராமத் திட்டங்கள் | 18 |

## அட்டவணை–15

## மீன்பிடி துறைமுகங்களில் நடைபெற்று வரும் பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| **திட்டம்: மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி** | | |
| 1 | திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடி துறைமுகம் கட்டும் பணி. | 200.00 |
| 2 | நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுதுறை கிராமத்தில் மீன்பிடி துறைமுகம் கட்டும் பணி. | 150.00 |
| 3 | நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளத்தில் மீன்பிடி துறைமுகம் கட்டும் பணி | 100.00 |
| 4 | கன்னியாகுமரி மாவட்டம்,தேங்காப்பட்டனம் மீன்பிடி துறைமுகத்தை விரிவுபடுத்தி நவீனப்படுத்தும் பணி. | 253.00 |
| 5 | நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்கும் பணி | 81.00 |
| 6 | தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் (ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், சுற்றுச் சூழல், சாலை, மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி மற்றும் நிலத்தடி கழிவு நீர் சேகரிக்கும் தொட்டி ஏற்படுத்துதல்.) | 10.00 |
| 7 | இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடி துறைமுகத்தில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர் காப்பு வசதிகள் மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்புகள் அமைக்கும் பணி. | 20.00 |

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| **திட்டம்: பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம்** | | |
| 1 | மயிலாடுதுறை மாவட்டம், பழையார் மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்தும் பணி | 26.26 |
| 2 | கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் மீன்பிடி துறைமுகத்தினை பராமரித்து தூர்வாரும் பணி. | 4.94 |
| | **மொத்தம்** | **845 . 20** |

## அட்டவணை–16

## மீன் இறங்கு தளங்களில் நடைபெற்று வரும் பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| **திட்டம்: மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி** | | |
| 1 | கடலூர் மாவட்டம், போர்டோநோவா–அன்னன்கோவில் கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கூடுதல் வசதிகளை அமைக்கும் பணி | 10. 00 |
| 2 | கடலூர் மாவட்டம், முடசலோடை கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கூடுதல் வசதிகளை அமைக்கும் பணிகள் | 9.50 |
| 3 | மயிலாடுதுறை மாவட்டம், சந்திரபாடியில் மீன் இறங்குதளம் கட்டும் பணி | 10.00 |
| 4 | கடலூர் மாவட்டம், சுனாமி நகர் மற்றும் அக்கரைகோரி கிராமங்களில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணிகள் | 4.50 |

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 5 | விழுப்புரம் மாவட்டம், புதுக்குப்பம் மற்றும் அனிச்சாங்குப்பம் கிராமங்களில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணிகள் | 7.00 |
| 6 | விழுப்புரம் மாவட்டம், முதலியார்குப்பம் மற்றும் செட்டிநகர் கிராமங்களில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணிகள் | 7.00 |
| 7 | கடலூர் மாவட்டம், சொத்திக்குப்பம் மற்றும் ராசாப்பேட்டை கிராமங்களில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணிகள் | 8.50 |
| 8 | கடலூர் மாவட்டம், சித்திரைப்பேட்டை மற்றும் நாஞ்சலிங்கம்பேட்டை கிராமங்களில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணிகள் | 7.50 |
| 9 | திருவள்ளூர் மாவட்டம், சுண்ணாம்புகுளம் கிராமத்தில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி | 8.00 |
| 10 | கடலூர் மாவட்டம், சோனாங்குப்பம் கிராமத்தில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி | 5 .50 |
| 11 | திருவள்ளூர் மாவட்டம், சாத்தாங்குப்பம் கிராமத்தில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணிகள். | 8 .00 |
| **திட்டம்: தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி–கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி** | | |
| 1 | மயிலாடுதுறை மாவட்டம் குட்டியாண்டியூர் கடலரிப்பு தடுப்பு பணிகள் மற்றும் மீன் இறங்கு தளம் கட்டும் பணிகள் | 6 .83 |
| 2 | மயிலாடுதுறை மாவட்டம், கொடியம்பாளையம் மீனவ கிராமத்தில் | 2 .85 |

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| | மீன் இறங்குதளம் மற்றும் கரையோர பாதுகாப்பு பணிகள் | |
| 3 | இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் படகுஅணையும் ஜெட்டியை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் | 22 .77 |
| 4 | தூத்துக்குடி மாவட்டம், சிப்பிக்குளத்தில் மீன்இறங்குதளம் மேம்படுத்தும் பணி | 7.00 |
| 5 | விழுப்புரம் மாவட்டம், எக்கியார்குப்பம் மற்றும் அனுமந்தையில் மீன் இறங்கு தளப் பணிகள் | 10.00 |
| 6 | கடலூர் மாவட்டம், புதுக்குப்பம் மீனவ கிராமத்தில் மீன் இறங்கு தளம் மற்றும் அணுகு கால்வாயை தூர்வாரும் பணிகள் | 8 .00 |
| 7 | புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தும் பணி | 10.00 |
| 8 | புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தும் பணி | 10 .00 |
| **திட்டம்: பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்** | | |
| 1 | சென்னை மாவட்டம் நெட்டுக்குப்பம் மற்றும் தாழங்குப்பத்தில் ஒருங்கிணைந்த மீன் இறங்கு தளங்கள் அமைக்கும் பணிகள் | 19.62 |
| 2 | திருவள்ளூர் மாவட்டம் அரங்கன்குப்பம் மற்றும் கூனங்குப்பத்தில் ஒருங்கிணைந்த மீன் இறங்கு தளங்களை அமைக்கும் பணிகள் | 6.80 |
| | **மொத்தம்** | **189.37** |

## அட்டவணை–17

## தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி–கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணி. | 26.85 |
| 2 | கன்னியாகுமரி மாவட்டம், சைமன் காலனி குடியிருப்பு மீன் இறங்கு தளம் மேம்படுத்தும் பணிகள். | 35 .00 |
| 3 | கன்னியாகுமரி மாவட்டம், கோடிமுனை கிராமத்தில் மீன் இறங்கு தளம் மேம்படுத்தும் பணிகள். | 35 . 00 |
| 4 | கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புத்தன்துறை கிராமத்தில் கடலரிப்பு தடுப்பு மற்றும் கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள். | 20 .00 |
| 5 | செங்கல்பட்டு மாவட்டம், கடலூர் பெரியகுப்பம் கடலரிப்பு தடுப்பு பணிகள் மற்றும் மீன் இறங்கு தளம் கட்டும் பணிகள். | 9 .00 |
| 6 | செங்கல்பட்டு மாவட்டம், புதுகல்பாக்கம் கடலரிப்பு தடுப்பு பணிகள் மற்றும் மீன் இறங்கு தளம் கட்டும் பணிகள். | 9.70 |
| 7 | கடலூர் மாவட்டம், பெரியகுப்பம் மீனவ கிராமத்தில் கடலரிப்பு தடுப்பு பணிகள் மற்றும் மீன் இறங்கு தளம் கட்டும் பணிகள். | 12.00 |
| 8 | மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசல் மீன் இறங்கு தளத்தை மேம்படுத்தும் பணிகள். | 18 .00 |

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 9 | கன்னியாகுமரி மாவட்டம், புத்தன்துறை கிராமத்தில் கடலரிப்பு தடுப்பு பணிகளுடன் கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள். | 22 .00 |
| 10 | செங்கல்பட்டு மாவட்டம், கொக்கிலமேடு கிராமத்தில் மீன் இறங்கு தளம் மற்றும் கடலரிப்பு தடுப்பு அமைக்கும் பணிகள். | 10.00 |
| 11 | தூத்துக்குடி மாவட்டம், திரேஸ்புரத்தில் மீன் இறங்குதளம் மேம்படுத்தும் பணிகள். | 21 .00 |
| 12 | கடலூர் மாவட்டம், வெள்ளாரில் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகள். | 30. 00 |
| 13 | கடலூர் மாவட்டம், கிள்ளை கிராமத்தில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணிகள் மற்றும் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகள். | 40.00 |
| 14 | விழுப்புரம் மாவட்டம், பிள்ளைச்சாவடி கடலரிப்பு தடுப்பு பணிகள் மற்றும் மீன் இறங்கு தளம் கட்டும் பணிகள். | 14.50 |
| 15 | மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி மீன் இறங்கு தளத்தை மேம்படுத்தும் பணிகள் | 55.00 |
| 16 | செங்கல்பட்டு மாவட்டம், கரிக்காட்டுக்குப்பத்தில் கடலரிப்பு தடுப்பு பணிகளுடன் கூடிய படகு அணையும் வசதிகள் மற்றும் மீன் இறங்குதளம் கட்டும் பணிகள். | 16.00 |
| 17 | செங்கல்பட்டு மாவட்டம், அங்காளம்மன் குப்பம், மீன் இறங்கு தளம் மற்றும் கடலரிப்பு தடுப்பு அமைக்கும் பணிகள். | 9.00 |

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 18 | தூத்துக்குடி மாவட்டம், அமலிநகர் மீன் இறங்கு தளத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி. | 58.00 |
| 19 | கன்னியாகுமரி மாவட்டம், கீழக்கடியப்பட்டினம் கிராமத்தில் தூண்டில் வளைவுடன் மீன் இறங்குதளம் மேம்படுத்தும் பணி. | 35.00 |
| 20 | நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் கீழப்பட்டினச்சேரியில் கரையோரப் பாதுகாப்பு தடுப்புச்சுவர் அமைக்கும் பணி. | 7.00 |
| 21 | நாகப்பட்டினம் மாவட்டம், கீச்சான்குப்பத்தில் கரையோர பாதுகாப்பு தடுப்புச்சுவர் அமைக்கும் பணி. | 7.00 |
| 22 | தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி. | 41.00 |
| 23 | திருநெல்வேலி மாவட்டம், கூட்டப்புளி கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி. | 48.50 |
| 24 | கன்னியாகுமரி மாவட்டம், இரையுமன்துறை கிராமத்தில் தூண்டில் வளைவுகள் அமைக்கும் பணி. | 33.75 |
| 25 | திருநெல்வேலி மாவட்டம், கூடுதாழை கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி. | 15.00 |
| | **மொத்தம்** | **628.30** |

## அட்டவணை–18

## உள்நாட்டு மீன்வள பண்ணை மேம்பாட்டு பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ கோடியில்) |
|---|---|---|
| **திட்டம்: மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி** | | |
| 1 | தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் மீன்விதை பண்ணையை புதுப்பித்தல். | 2.50 |
| 2 | விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டையில் கூடுதல் மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் நிறுவுதல். | 5.00 |
| 3 | விருதுநகர் மாவட்டம், பிளவக்கல்லில் கூடுதல் மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் நிறுவுதல். | 2.00 |
| 4 | கன்னியாகுமரி மாவட்டம், மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மீன் பண்ணையை புதுப்பித்தல் மற்றும் சிற்றார் அணை–I மீன் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். | 1.50 |
| 5 | திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் பொது வண்ணமீன் காட்சியகம் மற்றும் வண்ணமீன் சில்லரை விற்பனையகம் நிறுவுதல். | 5.00 |
| 6 | தஞ்சாவூர் மாவட்டம், திருமங்கலக்கோட்டை அரசு மீன் பண்ணையில் மரபணு மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல். | 4.70 |
| 7 | விழுப்புரம் மாவட்டம், வீடூர் அரசு மீன் பண்ணையை நவீனமயமாக்குதல். | 2.20 |
| 8 | கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனேந்தல், கோமுகி அணையில் புதிய அரசு மீன் குஞ்சு வளர்ப்பு மையம் நிறுவுதல். | 5.00 |

| வ.எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 9 | காஞ்சிபுரம் மாவட்டம் செம்பரம்பாக்கம் அரசு மீன் பண்ணையில் மரபணு மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல். | 2.75 |
| 10 | திருப்பத்தூர் மாவட்டம், ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத்தில் மீன்குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல். | 5 .00 |
| 11 | திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அரசு மீன்பண்ணையில் நாற்றங்கால் குளங்களை புதுப்பித்தல் | 5.00 |
| **திட்டம்: நீர்வள நிலவளத் திட்டம்** | | |
| 1 | கடலூர் மாவட்டம் லால்பேட்டை அரசு மீன்பண்ணையில் அமைக்கப்பட்டு வரும் விரால் மீன் குஞ்சு பொரிப்பகத்திற்கு கூடுதல் கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணி | 1.30 |
| **திட்டம்: மாநில நிதி** | | |
| 1 | தஞ்சாவூர் மாவட்டம் அகரபேட்டையில் மேம்படுத்தப்பட்ட நாட்டு இன மீன் விதை உற்பத்தி மற்றும் வளர்ப்பு மையம் அமைத்தல். | 1.64 |
| 2 | கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை அரசு மீன்பண்ணையில் கரிமீன் பொரிப்பகம் அமைக்கும் பணி | 2.45 |
| | **மொத்தம்** | **46.04** |

## அட்டவணை–19

## மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் அலுவலக கட்டட பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| **திட்டம்: மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி** | | |
| 1 | திருச்சி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த துணை இயக்குநர், உதவி இயக்குநர் மற்றும் பயிற்சி நிலையம் கட்டும்பணி | 4.00 |
| 2 | தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி (மண்டலம்) மீன்வளத்துறை இணை இயக்குநர், உதவி இயக்குநர், உதவி செயற் பொறியாளர், மீன்பிடி துறைமுக திட்ட உப கோட்டம் மற்றும் பயிற்சி மையத்திற்கான ஒருங்கிணைந்த அலுவலகம் கட்டடம் கட்டுதல் | 5.00 |
| 3 | சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, மீன்வளத்துறை உதவி இயக்குநர், மீன்வள ஆய்வாளர் மற்றும் பயிற்சி மையத்திற்கான ஒருங்கிணைந்த அலுவலகம் கட்டடம் கட்டுதல் | 3.00 |
| | **மொத்தம்** | **12.00** |

## அட்டவணை–20
## புதிய மீன்பிடி துறைமுகம்/மீன் இறங்குதளம் அமைக்கத் தேவையான ஆய்வு பணிகள்

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| **திட்டம்: மாநில நிதி** | | |
| 1 | திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பழவேற்காட்டில் புதிய மீன்பிடி துறைமுக கட்டுமான பணிக்கு பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் பணி | 1.00 |
| 2 | கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வாணியக்குடியில் புதிய மீன்பிடி துறைமுக கட்டுமானப் பணிக்கு பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் பணி | 1.00 |
| 3 | கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் மீன்பிடி துறைமுகத்தினை விரிவாக்கம் செய்திட பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் | 1.00 |
| 4 | இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராமேஸ்வரத்தில் புதிய மீன்பிடி துறைமுக | 1.00 |

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| | கட்டுமானப் பணிக்கு பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் பணி | |
| 5 | திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உவரியில் புதிய மீன்பிடி துறைமுக கட்டுமானப் பணிக்கு பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் பணி | 1.00 |
| 6 | தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தினை விரிவாக்கம் செய்திட பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் | 1.00 |
| 7 | தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் மீன்பிடி துறைமுகம் நவீனமயமாக்குதல் பணிக்கான பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் பணி | 0.50 |
| 8 | இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் மீன்பிடி துறைமுகம் விரிவாக்கம் செய்தல் பணிக்கான பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு | 0.50 |

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| | அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் பணி | |
| 9 | இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் மீன் இறங்கு தளத்தை மேம்படுத்தும் பணிக்கு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு தொழில்நுட்ப சாத்தியக்கூறு குறித்து ஆலோசனைகள் வழங்கும் பணி. | 0.20 |
| 10 | இராமநாதபுரம் மாவட்டம், குந்துக்கல் மீன் இறங்கு தளத்தை மேம்படுத்தவும் மற்றும் தூண்டில்வளைவு அமைக்கும் பணிக்கு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு தொழில்நுட்ப சாத்தியக்கூறு குறித்து ஆலோசனைகள் வழங்கும் பணி. | 0.50 |
| 11 | இராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சிமடத்தில் தூண்டில்வளைவு அமைக்கும் பணிக்கு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு தொழில்நுட்ப சாத்தியக்கூறு குறித்து ஆலோசனைகள் வழங்கும் பணி. | 0.20 |
| 12 | புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினத்தில் புதிய மீன்பிடி துறைமுகம் கட்டுமானப் பணிக்கு. பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து ஆலோசனைகள் வழங்கும் பணி. | 1.00 |
| | **மொத்தம்** | 8.90 |

## அட்டவணை–21

## மாநில நிதியுதவியுடன் அமைக்கப்படும்/புனரமைக்கப்படும் மீன் விற்பனை சந்தைகளின் விபரம்

| வ. எண் | மாவட்டம் | புதிதாக அமைக்கப்பட்ட / புனரமைக் கப்பட்ட மீன் விற்பனை சந்தைகளின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கடலூர் | 1 | 22.50 |
| 2 | இராணிப்பேட்டை | 1 | 61.29 |
| 3 | புதுக்கோட்டை | 1 | 53.70 |
| 4 | திருச்சி | 1 | 250.00 |
| 5 | சேலம் | 2 | 139.30 |
| 6 | திருப்பூர் | 1 | 93.00 |
| 7 | ஈரோடு | 1 | 100.00 |
| 8 | சிவகங்கை | 1 | 100.00 |
| 9 | நாகப்பட்டினம் | 4 | 158.57 |
| 10 | தென்காசி | 1 | 38.76 |
| 11 | தூத்துக்குடி | 1 | 13.60 |
| 12 | இராமநாதபுரம் | 3 | 293.39 |
| 13 | கன்னியாகுமரி | 2 | 179 .47 |
| 14 | விழுப்புரம் | 1 | 250 .00 |
| மொத்தம் | | 21 | 1,753 . 58 |

## அட்டவணை-22
## மீன்வள கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்

| கூட்டுறவுசங்கம் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **தொடக்க கூட்டுறவு சங்கங்கள்** | | |
| கடல்மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 582 | 3,80,666 |
| கடல்மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 478 | 3,01,748 |
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 339 | 76,950 |
| உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 76 | 11,228 |
| **மொத்தம்** | **1,475** | **7,70,592** |
| மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் | **12** | **998** |
| தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் | **1** | **834** |
| **ஆக மொத்தம்** | **1,488** | **7,72,424** |

## அட்டவணை– 23
## தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

| வஎண் | நிவாரணம் / உதவி திட்டங்கள் | தொகை (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| 1. | உறுப்பினரின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கி படிப்பவர் | |
| | | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| | அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | -- | -- |
| | ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | -- | -- |
| | இ)தொழிற் பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழில் நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டு ஒன்றிற்கு) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| | உ)இளங் கலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | ஊ) முதுகலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| | எ) இளங் கலை தொழில் கல்விகள் (மீன்வள அறிவியல், | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |

| வஎண் | நிவாரணம் / உதவி திட்டங்கள் | தொகை (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| | வேளாண்மை, கால்நடை அறிவியல், சட்டம், பொறியியல், மருத்துவம்) (ஆண்டு ஒன்றிற்கு) | | | | |
| | ஏ) முதுகலை தொழில் கல்விகள் (ஆண்டு ஒன்றிற்கு) | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 2. | திருமண உதவி | | | ஆண் | பெண் |
| | அ) உறுப்பினரின் திருமண உதவி | | | 3,000 | 5,000 |
| | ஆ)உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம். | | | 3,000 | 5,000 |
| 3. | மகப்பேறு / கருச்சிதைவு /கருக்கலைப்பு உதவி தொகை | | | | |
| | அ) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் ஆறு மாதங்கள்) | | | 6,000 | |
| | ஆ) கருச்சிதைவு | | | 3,000 | |
| | இ) கருக்கலைப்பு | | | 3,000 | |
| 4. | விபத்து நிவாரணம் | | | | |
| | அ) விபத்தினால் மரணம் | | | 2,00,000 | |
| | ஆ) இரண்டு கைகள் இழப்பு | | | 1,00,000 | |
| | இ) இரண்டு கால்கள் இழப்பு | | | 1,00,000 | |
| | ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | | | 1,00,000 | |
| | உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | | | 1,00,000 | |
| | ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | | | 1,00,000 | |
| | எ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | | | 50,000 | |
| 5. | விபத்தின் காரணமாக அல்லாமல் மீன்பிடிக்கையில் இறத்தல் அல்லது அதற்குப் பின் உடனடியாக இறத்தல் | | | 2,00,000 | |

| வஎண் | நிவாரணம் / உதவி திட்டங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 6. | மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர் | 2,00,000 |
| 7. | இயற்கை மரணம் | 25,000 |
| 8. | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 |

## அட்டவணை –24
## மீனவ நல வாரிய உறுப்பினர்களுக்கு 2023 –24 ல் வழங்கப்பட்டுள்ள நலத்திட்டங்கள்

| வ. எண் | நிவாரணம் / உதவித்திட்டங்கள் | எண்ணம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | உறுப்பினரின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை | 2,710 | 52.017 |
| 2. | திருமண உதவி | 191 | 8.03 |
| 3. | மகப்பேறு உதவி | 1 | 0.06 |
| 4. | விபத்து மரணம் | 150 | 298.00 |
| 5. | உடல் உறுப்பு இழப்பு | 4 | 3.50 |
| 6. | மீன்பிடிக்கையில் இறத்தல் | 19 | 38.00 |
| 7. | மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவர்கள் | 8 | 15.00 |
| 8. | இயற்கை மரணம் | 1,078 | 180.30 |
| 9. | ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை | 1,185 | 29.625 |
| | **மொத்தம்** | **5,346** | **624.532** |

## அட்டவணை– 25

## மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கு 2024–25 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

| திட்டம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | | | (ரூ. இலட்சத்தில்) |
| ஊதியம் | 9080.55 | 0.00 | 0.00 | 9080.55 |
| நிவாரணத் திட்டங்கள் (மாநில நிதி) | 34843.76 | 0.00 | 0.00 | 34843.76 |
| பிற திட்டங்கள் (மாநில மற்றும் ஒன்றிய அரசு நிதியுதவி) | 800.21 | 0.00 | 0.00 | 800.21 |
| நீர்வள நிலவளத் திட்டம் (உலக வங்கி திட்டம்) | 172.41 | 0.00 | 0.00 | 172.41 |
| பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்(ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்களிப்புத் திட்டம்) | 21682.35 | 0.00 | 0.00 | 21682.35 |
| தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் | 0.12 | 0.00 | 0.00 | 0.12 |
| தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகம் | 4889.73 | 0.00 | 0.00 | 4889.73 |
| உட்கட்டமைப்பு (மாநில நிதி) | 0.00 | 100.09 | 0.00 | 100.09 |
| உட்கட்டமைப்பு – மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (ஒன்றிய மற்றும் | 0.00 | 30000.00 | 0.00 | 30000.00 |

| திட்டம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| (ரூ. இலட்சத்தில்) | | | | |
| மாநில அரசு பங்களிப்புத் திட்டம்) | | | | |
| உட்கட்டமைப்பு – நபார்டு வங்கியின் நிதியுதவி | 0.00 | 30527.67 | 0.00 | 30527.67 |
| மொத்தம் | 71469.13 | 60627.76 | 0.00 | 132096.89 |

**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
**மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்**
**கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்**